உதயன்

www.onlineuthayan.com

28பக்கங்கள் சுடர் 28 கதிர் 038 வள்ளுவர் ஆண்டு 2043 மார்கழி 19 வியாழக்கிழமை (03/01/2013) UTHAYAN - A Lively National Tamil Daily விலை ரூபா: 25.00




# யாழ். போதனா வைத்தியசாலையில் 14 திடீர்ச் சாவுகள் எப்படி நடந்தன?

## ஆராயக் கேட்டு நீதிமன்றில் பொதுநல வழக்கு

யாழ்ப்பாணம், ஜனவரி 3

யாழ்.மாவட்டத்தில் கடந்த வருடம் பிரசவத்தின் போதும், நோய் காரணமாகவும் உயிரிழந்தவர்களில் 14 பேரின் உயிரிழப்புகள் தொடர்பில் யாழ்.நீதிமன்றத்தில் 14 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

14 உயிரிழப்புகள் தொடர்பாகவும் திடீர் மரண விசாரணை அதிகாரி எம்.உதயசிறி யாழ்.நீதிமன்றில் வழக்குகளைத் தாக்கல் செய்துள்ளார்.

நோய் காரணமாக உயிரிழந்த குழந்தைகள் எந்தவகையான நோய்த் தாக்கத்துக்கு இலக்காகி உயிரிழந்தனர் என்பது தொடர்பில் விரிவான விசாரணை நடத்தப்பட வேண்டும் என்று வழக்குக் குறித்து நீதிமன்றத்தில் சமர்ப்பித்த அறிக்கையில் மரண விசாரணை அதிகாரி உதய சிறி கோரியுள்ளார்.

சுமார் ஐந்துக்கும் மேற்பட்ட ஆண்குழந்தைகளும் 6 இற்கும் மேற்பட்ட பெண் குழந்தைகளும் இவ்வாறு உயிரிழந்துள்ளன. யாழ். ஹோலிக்குறோஸ் தனியார் வைத்தியசாலையில் பிரசவத்துக்காக அனுமதிக்கப்பட்ட சுபேதர் பெர்னாண்டோ ராஜிதா மற்றும் அவரது இரட்டைக்

பார்க்க பக்கம் 4

**உயிரிழப்புகள் அதிகரிக்கும்போது விசாரணை செய்து சுகாதார அமைச்சுக்கு அறிவித்துத் தேவையான மருத்துவ உதவிகளைப் பெற்றுக்கொள்ள வேண்டும். இந்த உயிரிழப்புகள் தொடர்பாக வைத்தியசாலைப் பணிப்பாளர், பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர்கள் உரிய விசாரணை நடத்தவேண்டும்.**

## மருத்துவர் சிவசங்கருக்கு விளக்கமறியல்

யாழ்ப்பாணம், ஜன.3

கைது செய்யப்பட்ட மருத்துவர் சிவசங்கர் நேற்று முன்தினம் செவ்வாய்க் கிழமை இரவு முல்லைத்தீவு நீதிவானிடம் முற்படுத்தப் பட்டுள்ளார். அவரை எதிர் வரும் 10ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளதாக மாங்குளம் பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த 29ஆம் திகதி மருத்துவர் சிவசங்கர் கொக்காவில் இராணுவமுகாமுக்குச் சென்றவேளை இராணுவத்தினரால் தடுத்து வைக்கப்பட்

பார்க்க பக்கம் 4

## யாழ்.வாக்காளர் எண்ணிக்கை 13 ஆயிரம் பேரால் அதிகரிப்பு

### புதிய பட்டியலின் பிரகாரம்

யாழ்ப்பாணம், ஜன.3

யாழ்.தேர்தல் மாவட்டத்தின் 2012 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பட்டியலில் அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. 2011ஆம் ஆண்டு வாக்காளர் பட்டியலை விடக் கடந்த ஆண்டு வாக்காளர் பட்டியலில் 12 ஆயிரத்து 948 பேர் புதிய வாக்காளர்களாகப் பதிவாகியுள்ளனர்.

இந்தப் புதிய வாக்காளர் பட்டியல் நேற்றுமுன்தினம் வெளியிடப்பட்டது.

புதிய வாக்காளர் பெயர்ப் பட்டியலின் பிரகாரம் யாழ்.தேர்தல் மாவட்டத்தில் 4 இலட்சத்து 95 ஆயிரத்து 292 பேர் வாக்காளர்களாகப் பதிவு செய்துள்ளதாக யாழ்.மாவட்ட உதவித் தேர்தல் ஆணையாளர் என்.சுதாகரன் தெரிவித்தார்.

2012 ஆம் ஆண்டுக்கான வாக்காளர் பெயர்ப் பட்டியல் தயாரிக்கும் நடவடிக்கைகள் கடந்த ஆண்டு ஜூன் மாதம் ஆரம்பமாகியிருந்தன.

பார்க்க பக்கம் 21

## நீதிமன்றத்தின் அழைப்பை அரசு, ஐ.தே.க. நிராகரிப்பு

### பிரதம நீதியரசர் விடயத்தில் சூடு பிடிக்கிறது அதிகார மோதல்

கொழும்பு, ஜன.3

பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றப் பிரேரணையை விசாரித்த நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் அங்கம் வகித்த உறுப்பினர்கள் இன்றைய தினம் முன்னிலையாகவேண்டுமென்ற மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் அறிவிப்பை அரசு, பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.க. ஆகியன நிராகரித்திருப்பதையடுத்து நீதித்துறை, நாடாளுமன்றம், நிறைவேற்று அதிகாரங்கள் ஆகிய மூன்று துறைகளின் அதிகாரங்கள் தொடர்பான சர்ச்சை தற்போது ஆரம்பித்திருக்கிறது.

குற்றப் பிரேரணையை விசாரித்த நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் சிபார்சுகளின் நடைமுறையை இடைநிறுத்த உத்தரவிடக்கோரி பிரதம நீதியரசர் கலாநிதி ஷிராணி பண்டாரநாயக்க கடந்த மாதம் மேன்முறையீட்டு நீதிமன்றில் 'றிட்' மனுவொன்றைத் தாக்கல் செய்திருந்தார்.

பிரதம நீதியரசர் தாக்கல் செய்த மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொள்வதற்கான தத்துவம் தம்மிடம் இருப்பதாக அறிவித்து குறித்த மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொண்டது மேன்முறையீட்டு நீதிமன்றம்.

குறித்த மனு தொடர்பிலான விசாரணைகள் கடந்த மாதம் 21 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நீதியரசர் ஸ்ரீஸ்கந்தராஜா தலைமையிலான மூவரடங்கிய நீதியரசர் குழாமினால் நடத்தப்பட்டன.

இதன்போது ஜனவரி மாதம் 3 ஆம் திகதி மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு சமுகமளித்து விளக்கமளிக்குமாறு றிட் மனுவில் பிரதிவாதிகளாக குறிப்பிடப்பட்டிருந்த சபாநாயகர் சமல் ராஜபக்ஷ, நாடாளுமன்றச் செயலாளர் நாயகம் மற்றும் நாடாளுமன்றத் தெரிவுக் குழு உறுப்பினர்களுக்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் அறிவித்திருந்தது. இது அழைப்பாணை அல்ல என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

பார்க்க பக்கம் 4

## தமிழருக்கு நியாயமான தீர்வின்றேல் சர்வதேசத்தால் அரசு கவிழ்க்கப்படும்

### தமிழர் கேட்காததையே அரசு திணிக்கிறது–மனோ

கொழும்பு, ஜன.3

தமிழ் மக்களின் இனப் பிரச்சினைக்கு நியாயமான அரசியல் தீர்வை அரசு வழங்காவிட்டால், தேசிய, சர்வதேச ரீதியிலான நடவடிக்கைகளினூடாக அதன் ஆட்சி முறியடிக்கப்படும் என்று ஜனநாயக மக்கள் முன்னணியின் தலைவர் மனோ கணேசன் தெரிவித்தார்.

தாம் உரிமையுடன் வாழ வேண்டும் என்பதற்காக வடக்குத் தமிழர் கேட்கும் அதிகாரப்பகிர்வைத் தர மறுக்கும் அரசு, வடக்கிலுள்ள பல்கலை மாணவர்கள் கேட்காத புனர்வாழ்வை அவர்களுக்குக் கொடுக்கிறது. தமிழ் மக்கள் கேட்பதை விடுத்து கேட்காததை அரசு கொடுக்கிறது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

கொழும்பிலுள்ள அஸாத் ஸாலி நிலையத்தில் நேற்று இடம்பெற்ற 'அதிகாரத்தை பிரித்து நாட்டை ஐக்கியப்படுத்துவோம்' அமைப்பின் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவித்தபோதே அவர் மேற்கண்டவாறு தெரி

பார்க்க பக்கம் 4

## பேச்சுக்கு அழைத்தபோதும் கூட்டமைப்பு வரவேயில்லை

### அமைச்சர் நிமால் கூறுகின்றார்

கொழும்பு, ஜன.3

அரசியல் தீர்வைத் தயாரிப்பதற்கான நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கலந்து கொண்டிருந்தால் இந்நேரம் அது தொடர்பில் ஒரு முடிவை எட்டியிருக்கலாம், அவர்களைப் பேச்சுக்கு அழைத்த போதும் வரவில்லை என்று அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா நேற்றுத் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அரசியல் தீர்வை எட்டு

பார்க்க பக்கம் 21

## 2 நாள்களில் 4 பேருக்கு டெங்கு நோய்

யாழ்ப்பாணம், ஜன.3

கடந்த இரண்டு நாள்களில் நான்குபேர் டெங்குக் காய்ச்சலினால் பீடிக்கப்பட்டு சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

நேற்றுப் புதன்கிழமையும் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமையும் உடுவில்,

பார்க்க பக்கம் 4

## பொருளாதாரம் 6.5 வீதமாக வீழ்ச்சி

கொழும்பு, ஜன.3

நாட்டின் பொருளாதார வளர்ச்சி கடந்த ஆண்டில் 6.5 சதவீதமாக வீழ்ச்சியடைந்துள்ளது என இலங்கை மத்திய வங்கி தெரிவித்துள்ளது.

முன்னதாக, 2012ஆம் ஆண்டில் இலங்கையின் பொருளாதார வளர்ச்சி 8 சதவீதமாக இருக்கும் என்று

பார்க்க பக்கம் 21

## இந்திய வியாபாரிகளுக்குத் தடை

யாழ்ப்பாணம், ஜன.3

யாழ்.மாநகர சபை எல்லைக்குட்பட்ட பகுதியில் சட்டவிரோத நடைபாதை வியாபாரிகள், இந்திய வியாபாரிகள் ஆகியோரின் வியாபார நடவடிக்கைகள் நேற்று முன்தினம் முதலாம் திகதி தொடக்கம் தடை செய்யப்பட்டுள்ளன என்று மாநகர முதல்வர் தமக்கு அறிவித்துள்ளதாக யாழ்.வர்த்தகர் சங்கத் தலைவர் ஆர்.ஜெயசேகரம் தெரிவித்தார்.

யாழ்.வர்த்தக சங்க அலுவலகத்தில் நேற்று புதன்கிழமை நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே ஜெயசேகரம் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:

அண்மைக்காலமாக யாழ்.குடாநாட்டில் சட்டவிரோத நடைபாதை வியா [illegible]

பார்க்க பக்கம் 4

## வன்புணர்வின் பின் சிறுமி கொலை; எதிர்த்து மண்டைதீவில் போராட்டம்

யாழ்ப்பாணம்,ஜன.03

மண்டைதீவில் வன்புணர்வின் பின் படுகொலை செய்யப்பட்ட சிறுமியின் கொலையைக் கண்டித்து இன்று போராட்டம் ஒன்று நடைபெறவுள்ளது.

சமூக அமைப்புக்களின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள இந்தப் போராட்டம் இன்று காலை 9 மணிக்கு மண்டைதீவு பிரதேச சபையின் உப அலுவலகத்துக்கு அண்மையில் நடைபெறவுள்ளது.

கடந்த 28 ஆம் திகதி நான்கு வயதுச் சிறுமி ஒருவரின் சடலம் கிணற்றில் இருந்து மீட்கப்பட்டது. சடலத்தை பரிசோதனைக்கு உட்படுத்திய சட்டவைத்திய அதிகாரியால்

பார்க்க பக்கம் 21

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மின்சாரம் தாக்கி மாணவிக்கு எரிகாயம்

மின்சாரம் தாக்கி 15 வயது மாணவி எரிகாயங்களுக்கு இலக்கானார்.

இந்தச் சம்பவம் நேற்று புதன்கிழமை மீசாலை மேற்கில் இடம்பெற்றது.

வீட்டுக் கூரை வேலை திருத்தம் செய்துகொண்டிருந்தபோது நிலத்தில் காணப்பட்ட மரத்தினுள் சிக்கியிருந்த வயரை சீர் செய்தார் மாணவி. அப்போது அவருக்கு மின்சாரம் தாக்கியதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதே இடத்தைச் சேர்ந்த அன்ரன் மரியதாஸ் கஜேந்தினி (வயது-15) என்னும் மாணவியே எரிகாயங்களுக்கு இலக்காகி சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (த-9)

# யாழ்ப்பாணத்தில் கடந்த ஆண்டு 672 பேருக்கு டெங்குக் காய்ச்சல்

## அவர்களில் இருவர் சாவு

யாழ்ப்பாணம், ஜன.3

யாழ். மாவட்டத்தில் கடந்த வருடம் 672 பேர் டெங்கு நோயினால் பீடிக்கப்பட்டு சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டிருக்கின்றனர். அவர்களில் சிகிச்சை பயனின்றி இரண்டு பேர் உயிரிழந்தனர் என்று யாழ். போதனா வைத்தியசாலை பதில் பணிப்பாளர் மருத்துவர் எஸ்.ஸ்ரீபவாணந்தராஜா தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கடந்த வருடத்தில் நவம்பர் மாதத்திலேயே அதிகம் பேர் டெங்கு நோயினால் பீடிக்கப்பட்டுள்ளனர். சில மாதங்களின் பின்னர் குடாநாட்டில் பரவலாக மழை பெய்யத் தொடங்கிய போதே அதிகளவானோர் டெங்கு தொற்றுக்கு உள்ளானார்கள்.

ஜனவரி மாதம் 61 பேரும், பெப்ரவரி மாதம் 30 பேரும், மார்ச் மாதம் 21 பேரும், ஏப்ரல் மாதம் 11 பேரும், மே மாதம் 17 பேரும், ஜூன் மாதம் 26 பேரும், ஜூலை மாதம் 32 பேரும், ஓகஸ்ட் மாதம் 30 பேரும், செப்ரெம்பர் மாதம் 39 பேரும், ஒக்ரோபர் மாதம் 124 பேரும், நவம்பர் மாதம் 153 பேரும், டிசெம்பர் மாதம் 128 பேரும் டெங்குக் காய்ச்சலினால் பீடிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் ஜூலை மாதத்தில் ஒருவரும், ஒக்ரோபர் மாதம் ஒருவருமாக 2 பேர் சிகிச்சை பயனளிக்காது உயிரிழந்துள்ளனர் - என்றார்.

இதேவேளை, பொதுவாக மழை வீழ்ச்சி அதிகமாக உள்ள காலப் பகுதியை அண்மித்து குறிப்பாக வருட ஆரம்பம், வருட இறுதி காலப் பகுதிகளில் டெங்கு நோயால் அதிகளவானோர் பீடிக்கப்படுகின்றனர் என்று சுகாதாரப் பகுதியினர் தெரிவித்தனர்.

யாழ். மாவட்டத்திலுள்ள 12 சுகாதார வைத்திய அதிகாரிப் பணிமனைகளில் நல்லூர் பணிமனைக்கு உட்பட்ட பிரிவிலேயே அதிகளவானோர் டெங்கு நோயினால் பீடிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிய வந்துள்ளது. (த-4)

## சிறுவர் உரிமை அலுவலர்களுக்கு இடமாற்றம்

தென்மராட்சி, ஜன.3

யாழ்.மாவட்ட பிரதேச செயலகங்களில் சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு அலுவலர்களாக கடமையாற்றிய உத்தியோகத்தர்கள் அனைவரும் கடந்த முதலாம் திகதி தொடக்கம் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

இதன் பிரகாரம் தென்மராட்சி பிரதேச செயலகத்தில் கடமையாற்றிய திருமதி மாதங்கி மயூரன் வேலணை பிரதேச செயலகத்திலும் வலி.கிழக்கு பிரதேச செயலகத்தில் கடமையாற்றிய திருமதி வரதீஸ்வரி சத்தியசீலன் தென்மராட்சி பிரதேச செயலகத்திலும் கடமைகளைப் பொறுப்பேற்றுள்ளனர். (த-9)

# இராணுவமயமாகின்றன பல்கலைக்கழகங்கள் என்ன விலைகொடுத்தும் தடுத்து நிறுத்துவோம்

### யாழ்.பல்கலைக்கழக மாணவரை விடுவிக்கும் போராட்டத்தில் தேசிய மாணவர் ஒன்றியச் செயலாளர்

யாழ்ப்பாணம், ஜன.03

பல்கலைக்கழகங்களின் இராணுவ மயமாக்கலைத் தடுத்து நிறுத்த என்ன விலை கொடுக்கவேனும் தயாராக உள்ளோம்.

யாழ். பல்கலையில் அத்துமீறி செயற்பட்ட இராணுவத்தைக் கண்டித்தும் மாணவர்களின் விடுதலையை வலியுறுத்தியும் தேசிய மாணவர் ஒன்றியம் நடத்திய துண்டுப் பிரசுரப் போராட்டத்தின் போது அதன் செயலாளர் அசங்க புளேகொட தெரிவித்துள்ளார்.

யாழ். பல்கலைக்கழகத்துக்குள் இராணுவம் அத்துமீறி நுழைந்ததையும் கைது செய்யப்பட்ட மாணவர்களை விடுவிக்கக் கோரியும் அனைத்துப் பல்கலைக்கழக மாணவர்களால் நேற்று துண்டுப் பிரசுரம் விநியோகிக்கப்பட்டது.

கொழும்பு கோட்டை ரயில் நிலையத்தில் நேற்றுக் காலை மாணவர்கள் பொது மக்களுக்கு விழிப்பூட்டும் நடவடிக்கையில் ஈடுபட்டனர்.

இது தொடர்பாக கருத்து வெளியிட்ட தேசிய மாணவர் ஒன்றியச் செயலாளர் மேலும் தெரிவித்ததாவது:



இந்த அரசு பல்கலைக்கழகங்களை இராணுவ மயப்படுத்த முயற்சிக்கின்றது.

மாணவர்களுக்கு எதிராக பொலிஸார், இராணுவத்தினர், பயங்கரவாத குற்றத் தடுப்புப் பிரிவுகளை ஏவி அவர்களைத் துன்புறுத்துகிறது. இதை அரசு உடன் நிறுத்த வேண்டும்.

பல்கலைக்கழகங்களின் பாதுகாப்பை அரசு பாதுகாப்பு அமைச்சின் கீழ்க் கொண்டு வந்து அதற்குக் கீழுள்ள 'ரட்ணா லங்கா' தனியார் பாதுகாப்புப் பிரிவிடம் பல்கலைப் பாதுகாப்பைக் கையளித்துள்ளது.

இந்த நடவடிக்கையின் விளைவையே தற்போது இங்கு பயிலும் மாணவர்கள் அனுபவிக்கிறார்கள்.

இதன் ஒருபகுதியாகவே யாழ். பல்கலைக்கழகத்துக்குள் இராணுவம் அத்துமீறிப் புகுந்துள்ளது.

எனவே மாணவர்கள் அனைவரையும் ஒன்று திரட்டி போராட்டங்களை முன்னெடுப்பது தொடர்பில் நாம் பேச்சுக்களை நடத்தி வருகின்றோம். இதன் முதற்கட்டமாகவே இன்றைய போராட்டத்தை ஆரம்பித்துள்ளோம்- இது தொடரும் என்றார். (த-16)

## சுன்னாகம் சங்கப் பணியாளர் போராட்டம் தொடர்கிறது

### நேற்றைய பேச்சு தோல்வி

யாழ்ப்பாணம், ஜன.3

சுன்னாகம் பலநோக்குக் கூட்டுறவுச்சங்க தலைவர்களுடனான சந்திப்பு தோல்வியில் முடிந்தது. போராட்டத்தை தொடரவுள்ளதாக பணியாளர்கள் அறிவித்துள்ளனர்.

தமது சம்பள உயர்வு உட்படப் பல கோரிக்கைகளை வலியுறுத்தி சுன்னாகம் பலநோக்கு கூட்டுறவு சங்கபணியாளர்கள் கடந்த மூன்று நாள்களாக பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுவருகின்றனர்.

இதனை அடுத்து சங்கப் பணியாளர்களுக்கும் தலைவர்களுக்குமான முக்கிய சந்திப்பு நேற்று இடம்பெற்றது. எனினும் தமது கோரிக்கைகள் தொடர்பில் அதிகாரிகள் உரிய பதிலை முன்வைக்கத் தவறிவிட்டதாகவும் தமது கோரிக்கைகளை வலியுறுத்தி தாம் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக பணியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

சுன்னாகம் பகுதியிலுள்ள அனைத்துக் கிளைகளும் மூடப்பட்டுள்ளதால் பொது மக்கள் பெரும் சிரமத்தை எதிர்நோக்குகின்றனர்.

கடந்த மூன்று தினங்களாக கிளைகள் மூடப்பட்டு பணியாளர்களின் போராட்டம் தொடர்பான அறிவித்தல் பொது மக்களுக்குக் காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.

இந்தப் போராட்டம் தொடர்பாக மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளருக்கு கடிதம் மூலம் பணியாளர்கள் அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-17)

## சனசமூக நிலையத்தினுள் இளைஞர் குழு அட்டகாசம்

### தளபாடங்கள், கூரைகள் சேதம்

தென்மராட்சி, ஜன.03

வரணி இயற்றாலை கலைவாணி சனசமூக நிலையத்தினுள் புகுந்த இளைஞர் கும்பல் ஒன்று அங்குள்ள தளபாடங்கள் மற்றும் கட்டட ஓடுகள், கதவுகள் போன்றவற்றை அடித்து நொருக்கியுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றுள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை சனசமூக நிலையத்துக்கு முன்னால் இளைஞர் ஒருவர் பொதுமக்களுக்குஇடையூறு விளைவித்ததாக சனசமூக நிலைய நிர்வாகத்தினர் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு ஒன்றைச் செய்தனர்.

இதனையடுத்து நேற்றுமுன்தினம் அந்த இளைஞனை விசாரணைக்கு அழைத்த பொலிஸார் அவரை விசாரணை செய்த பின்னர் பிற்பகல் ஒரு மணிக்கு எச்சரிக்கை செய்து விடுவித்தனர்.

மாலை 4 மணியளவில் அந்த இளைஞர் தலைமையில் ஓட்டோக்களில் வந்த கும்பல் ஒன்று சனசமூக நிலையக் கதவினை உடைத்தும் பின்னர் உட்சென்று அங்கிருந்த தளபாடங்களை அடித்து நொருக்கியதுடன் கட்டடத்தின் கூரை ஓடுகள் போன்றவற்றையும் அடித்து நொருக்கி, கட்டடத்துக்கும் சேதம் விளைவித்துச் சென்றுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பாக கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளதாக சனசமூக நிலைய நிர்வாகத்தினர் தெரிவித்தனர். (த-9)

## பஸ் மோதியதில் குடும்பஸ்தர் காயம்

தென்மராட்சி, ஜன.03

வாகனத்தினால் மோதுண்ட குடும்பஸ்தர் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நேற்று புதன்கிழமை காலை கொடிகாமம் பகுதியில் பஸ் மோதியதில் முகத்தில் காயமடைந்த நிலையில் இவர் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

கிளாலியைச் சேர்ந்த மாணிக்கம் செல்வக்குமார் (வயது-31) என்பவரே இவ்வாறு காயமடைந்தவராவார்.

இதேவேளை, நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு நுணாவில் கிழக்கு ஏ-9 வீதியில் மோட்டார் சைக்கிளில் வந்த இளைஞரை வழிமறித்த கும்பல் அவரை மோசமாகத் தாக்கியுள்ளது.

இதனால் காயங்களுக்கு இலக்கான சாவகச்சேரியைச் சேர்ந்த ரவிச்சந்திரன் சிறீநாத் (வயது-21) என்பவர் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (த-9)

# ஆசிரியர் இடமாற்றங்கள் பெப்ரவரியில் நடைமுறைக்கு

யாழ்ப்பாணம், ஜன.3

2012 ஆம் ஆண்டு வருடாந்த ஆசிரியர் இடமாற்றத்துக்கு விண்ணப்பித்தவர்களும் அவர்களுக்குப் பதிலீடாக உரிய இடங்களுக்கு இடமாற்றம் செய்யப்படும் ஆசிரியர்களும் இடமாற்றத்தின் போது கவனத்தில் கொள்ளப்படுவர்.

அத்துடன் புதிய இடமாற்றங்கள் யாவும் 2013 ஆம் ஆண்டு பெப்ரவரி முதலாம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படும் என்று வடக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் சி.சத்தியசீலன் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வடமாகாண ஆசிரியர்களின் இடமாற்றம் தொடர்பாக வடமாகாண ஆளுநர் ஜீ.ஏ.சந்திரசிறி தலைமையில் இடமாற்ற சபையின் விசேட கூட்டம் இடம்பெற்றது.

இதில் இடமாற்றங்கள் யாவும் தேசிய ஆசிரியர் இடமாற்றக்கொள்கை மற்றும் வடக்கு மாகாண ஆசிரியர் இடமாற்றக் கொள்கை என்பவற்றுக்கு அமைவாக மேற்கொள்ளப்படவுள்ளன.

இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட 19 ஆலோசனைகளும், இலங்கை ஆசிரியர் சங்கத்தினரால் சமர்ப்பிக்கப்பட்ட 10 ஆலோசனைகளும் கவனத்தில் எடுக்கப்பட்டு இடமாற்ற சபையினால் ஏற்றுக் கொள்ளப்படும் ஆலோசனைகள் இடமாற்றத்துக்கான அடிப்படையாகக்கொள்ளப் படவுள்ளன.

ஆசிரியர் இடமாற்றத்தின் போது 2012 ஆம் ஆண்டு ஆசிரியர் இடமாற்றத்துக்கு விண்ணப்பித்தவர்களும் அவர்களுக்குப் பதிலீடாக உரிய இடங்களுக்கு இடமாற்றம் செய்யப்படும் ஆசிரியர்களும் கவனத்தில் கொள்ளப்படுவர். வன்னிப் பிரதேசத்திலிருந்து இடமாற்றம் செய்யப்படும். ஆசிரியர்களுக்குப் பதிலீடாக அதே எண்ணிக்கையான ஆசிரியர்கள் அந்தப் பிரதேசங்களுக்கு ஏனைய வலயங்களிலிருந்து அனுப்பி வைக்கப்படவுள்ளனர்.

இடமாற்ற சபைத் தீர்மானங்கள் இடமாற்ற சபையால் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்கள் ஜனவரி 15ஆம் திகதி, ஆளுநரின் அங்கீகாரத்துக்கு சமர்ப்பிக்கப்பட்ட பின்னர் சட்ட ரீதியான ஆவணமாக ஒழுங்கமைக்கப்பட்டு பெப்ரவரி முதலாம் திகதி நடைமுறைப்படுத்தப்படும்.

இடமாற்றக் கட்டளைகள் வழங்கப்பட்ட ஆசிரியர்கள் புதிய நிலையங்களில் தமது கடமையைப் பொறுப்பேற்க வேண்டும். அவ்வாறு பொறுப்பேற்காதவிடத்து அவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது. - என்றார். (த-5)

## பாப்பரசரை சந்தித்தார் ரணில்

பரிசுத்த பாப்பரசர் 16ஆவது ஆசீர்வாதப்பரை ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிர மசிங்க, அவரது மனைவி ஆகியோர் நேற்று இத்தாலி வத்திக்கான் நகரில் சந்தித்தனர்.

இந்த வருடத்தில் பரிசுத்த பாப்பரசரைச் சந்தித்த முதலாவது நபர் எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க என்பது குறிப்பிடத்தக்கது.

ரணில் விக்கிரமசிங்க,பாப்பரசரைச் சந்திப்பதற்கான வழிகாட்டல் ஆயத்தங்களை இலங்கைக்கான வத்திக்கான் தூதுவர் அதி வணக்கத்துக்குரிய ஜோசப் ஸ்பிறிற்றேரி ஆண்டகை கொழும்பு பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்ஜித் ஆண்டகை ஆகியோர் மேற்கொண்டிருந்தனர்.

இந்தச் சந்திப்புக்கான ஏற்பாடுகளை இத்தாலியிலுள்ள இலங்கையர்களின் ஒருங்கிணைப்பாளர் கலாநிதி நெவில் ஜோ தந்தை , ஐ.தே.கவின் பிரதிப் பொதுச் செயலாளர் டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன ஆகியோர் மேற்கொண்டிருந்தனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணத்தில் கடந்த ஆண்டு ரூபா 111 மில். வீடமைப்பு கடன்

## வீடமைப்பு அதிகார சபை வழங்கியது

யாழ்ப்பாணம், ஜன.3

*நிரந்தர வருமானம் பெறுவோர், நிரந்தர வருமானம் இல்லாதோர் ஆகியோருக்கான வீட்டுத் திட்டக் கடன் தொகையாகக் கடந்த வருடம் யாழ்.மாவட்டத்தில் 111.70 மில்லியன் ரூபா தேசிய வீடமைப்பு அதிகார சபையின் ஊடாக வழங்கப்பட்டுள்ளது என தேசிய வீடமைப்பு அதிகார சபையின் மாவட்ட முகாமையாளர் ரோயல் ஜெயச்சந்திரன் தெரிவித்தார்.*

இந்த விடயம் தொடர்பாக அவர்மேலும்தெரிவித்ததாவது:-

யாழ்.மாவட்டத்தில் 15 பிரதேச செயலர் பிரிவுகளின் ஊடாகத் தெரிவு செய்யப்பட்டவர்களுக்குப் புதிய வீட்டுக் கடன், வீடு தரமுயர்த்தல் கடன் ஆகியன வழங்கப்பட்டன.


நிரந்தர வருமானம் பெறுவோரில் புதிய வீட்டுக் கடன் 46 பேருக்கு வழங்கப்பட்டன. இவற்றுக்காக 21.40 மில்லியன் ஒதுக்கப்பட்டது. தரமுயர்த்தல் கடனாக 148 பேருக்கு 53.6 மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டது.

நெடுந்தீவு பிரதேச செயலர் பிரிவில் புதிய வீட்டுக்கு ஒருவருக்கும், வீட்டுத் திருத்தத்துக்கு ஒருவருக்கும் வேலணைப் பிரதேச செயலர் பிரிவில் வீடு திருத்தத்துக்கு ஒருவருக்கும் யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவில் புதிய வீட்டுக்கு நான்கு பேருக்கும் வீடு திருத்தத்துக்கு 15 பேருக்கும், நல்லூர் பிரதேசசெயலர் பிரிவில் புதிய வீட்டுக்கு 10 பேருக்கும் வீடு திருத்தத்துக்கு 25 பேருக்கும் சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் புதிய வீட்டுக்கு 6 பேருக்கும் வீடு திருத்தத்துக்கு 15 பேருக்கும் சங்கானை பிரதேச செயலர் பிரிவில் புதிய வீட்டுக்கு 2 பேருக்கும் வீடு திருத்தத்துக்கு 5 பேருக்கும் உடுவில் பிரதேச செயலர் பிரிவில் புதிய வீட்டுக்கு 3 பேருக்கும் வீடு திருத்தத்துக்கு 4 பேருக்கும் தெல்லிப்பழையில் புதிய வீட்டுக்கு 2 பேருக்கும் வீடு திருத்தத்துக்கு 8 பேருக்கும் கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் புதிய வீட்டுக்கு 4 பேருக்கும் வீடு திருத்தத்துக்கு 7 பேருக்கும் சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவில் புதிய வீட்டுக்கு 9 பேருக்கும் வீடு திருத்தத்துக்கு 32 பேருக்கும் கரவெட்டிப் பிரதேச செயலர் பிரிவில் புதிய வீட்டுக்கு 3 பேருக்கும் வீடு திருத்தத்துக்கும் 21 பேருக்கும் பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் புதிய வீட்டுக்கு 2 பேருக்கும் வீடு திருத்தத்துக்கு 9 பேருக்கும் மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவில் வீடு திருத்தத்துக்கு ஒருவருக்கும் காரைநகர் பிரதேச செயலர் பிரிவில் வீடு திருத்தத்துக்கு 4 பேருக்கும் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன.

நிரந்தர வருமானம் இல்லாதவர்கள் 39 பேருக்கு புதிய வீட்டுக் கடனாக 7.4 மில்லியன் ரூபாவும் 293 வீடுகளின் திருத்தத்துக்காக 29.3 மில்லியன் ரூபாவும் வழங்கப்பட்டுள்ளது.

இதில் நெடுந்தீவு பிரதேச செயலர் பிரிவில் 7 வீடுகளைத் திருத்துவதற்கும் ஊர்காவற்றுறையில் 2 வீடுகளைத் திருத்துவதற்கும் யாழ்ப்பாணத்தில் 4 புதிய வீடுகளை அமைக்கவும் 3 வீடுகளைத் திருத்தவும் நல்லூரில் ஒரு புதிய வீட்டுக்கும் 2 வீடுகளைத் திருத்தவும் சண்டிலிப்பாயில் 1 புதிய வீட்டுக்கும் 21 வீடுகளைத் திருத்தவும் சங்கானையில் 3 புதிய வீடுகள் அமைக்கவும் 18 வீடுகளைத் திருத்தவும் உடுவிலில் 3 புதிய வீடுகளை அமைக்கவும் 37 வீடுகளைத் திருத்தவும் தெல்லிப்பழையில் 26 வீடுகளைத் திருத்தவும் கோப்பாயில் 6 புதிய வீடுகளை அமைக்கவும் 30 வீடுகளை திருத்தவும் சாவகச்சேரியில் 6 புதிய வீடுகளை அமைக்கவும் 95 வீடுகளைத் திருத்தவும் கரவெட்டியில் 4 புதிய வீடுகளை அமைக்கவும் 28 வீடுகளைத் திருத்தவும் பருத்தித்துறையில் 3 புதிய வீடுகளை அமைக்கவும் 10 வீடுகளைத் திருத்தவும் காரைநகரில் 14 வீடுகளைத் திருத்தவும் வீடமைப்பு அதிகார சபையினால் கடந்த வருடம் கடன்கள் வழங்கப்பட்டுள்ளன. - என்றார். (த-14)

## வெள்ளம் பாதித்த சிறுவருக்கு சத்துணவுப் பொதி விநியோகம்



யாழ்.கரையோரப் பகுதியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் சிறுவர்களுக்குப் புதுவருட தினத்தன்று சத்துணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நிகழ்வில் வடக்கு மாகாண ஆளுநர் ஜி.ஏ.சந்திரசிறி சிறுவர்களுக்கு சத்துணவுப் பொதிகளை வழங்கினார்.

யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் நாவாந்துறையில் உள்ள கிளை விற்பனை நிலையத்துக்கு முன்பாக வைத்து இந்த சத்துணவுப் பொதிகள் விநியோகிக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் யாழ். மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா, வடமாகாண உள்ளூராட்சி மற்றும் கூட்டுறவு அமைச்சின் செயலாளர் எஸ்.வரதீஸ்வரன், வடமாகாண கூட்டுறவு ஆணையாளர் திருமதி மதுமதி வசந்தகுமார், யாழ். மாவட்ட கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வீ.கே.அருந்தவநாதன், யாழ்.பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் கே.தெய்வேந்திரன் ஆகியோர் கலந்து கொண்டனர். (த-17)

## பருத்தித்துறை நூலகத்தின் முதல் தள பணிகள் பூர்த்தி

வடமராட்சி, ஜன.3

பருத்தித்துறை நகரசபை பொதுநூல் நிலையத்துக்கான முதலாம் கட்டப் பணியான தள கட்டட வேலைகள் பூர்த்தியடைந்துள்ளன.

தும்பளை வீதியில் சிவன் கோயிலுக்கு அருகில் இருந்து வந்த மயில்வாகனம் வாசிகசாலை என அழைக்கப்பட்டு வந்த பருத்தித்துறை நகரசபைக்குச் சொந்தமான பழைய கட்டடத்தைக் கொண்ட பொதுநூல் நிலையம் உடைக்கப்பட்டு 'என்றிப் திட்டத்தின் கீழ் மாடிக் கட்டடமாக நிர்மாணிக்க தீர்மானிக்கப்பட்டிருந்தது.

இந்த மாடிக் கட்டடத்தின் தளக் கட்டடம் 97 லட்சம் ரூபா செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ளது. அடுத்த கட்டமாக மாடிக் கட்டடம் கட்டப்படுவதற்கு முன்பாக பொதுநூல் நிலையத்தை முதல் தளக் கட்டடத்தில் இயங்க வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

பொதுநூல் நிலையத்துக்கான கட்டுமானப் பணிகள் நடைபெற்றதால் இதே வீதியில் தனியார் கட்டடம் ஒன்றில் பொதுநூல் நிலையம் தற்காலிகமாக இயங்கி வருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது. (த-8)

## நல்லூரில் காவலரண் பக்தர்கள் கடும் விசனம்



யாழ்ப்பாணம், ஜன.3

நல்லூர் முருகன் ஆலயச் சூழலில் புதிதாக இராணுவக் காவலரண் ஒன்று அமைக்கப்பட்டுள்ளமை குறித்து ஆலயத்துக்கு வரும் பக்தர்களும் பொதுமக்களும் விசனம் தெரிவித்துள்ளனர்.

புனித பிரதேசமான ஆலயச் சுற்றாடலில் அதுவும் தெற்கு வாசல் பகுதியில் இந்த இராணுவக் காவலரண் ஒன்று நிரந்தரமாக அமைக்கப்பட்டுள்ளது.

ஆலயத்தில் தினமும் பொலிஸாரின் பாதுகாப்புப் பணிகள் இடம்பெற்று வருகின்ற நிலையில் இதற்கு மேலதிகமாக இராணுவக் காவலரண் ஒன்று அமைக்கப்பட்டிருப்பது குறித்துக் கடும் விசனம் வெளியிடப்பட்டுள்ளது.

யாழ்.மாநகர சபையால் ஆலயச் சுற்றாடல் புனித பிரதேசமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதோடு ஆலயத்தின் முன்பாக வேலியும் அமைக்கப்பட்டுள்ளது.

இந்தப் பாதுகாப்பு வேலிக்குள்ளேயே இப்போது புத்தாண்டு தினத்தன்று புதிதாக அமைக்கப்பட்டுள்ளது. இங்கு காவலரண் அமைக்கப்பட்டுள்ளமை குறித்து பக்தர்கள் கடும் விசனமும் அதிர்ச்சியும் வெளியிட்டுள்ளனர். (த-17-ரி)

## திருடப்பட்ட தாலிக்கொடி வீட்டு வளவுக்குள் வந்தது

சாவகச்சேரிப் பொலிஸாரின் தொடர் விசாரணைகளின் பலனாக பதினைந்து தினங்களுக்கு முன்னர் காணாமல் போயிருந்த இரண்டரை லட்சம் ரூபா பெறுமதியான தாலிக் கொடி வளவினுள் கண்டெடுக்கப்பட்டது.

கடந்த டிசெம்பர் 15 ஆம் திகதி நாவற்குழி மறவன்புலோ பகுதியில் வீட்டினுள் வைக்கப்பட்டிருந்த தாலிக்கொடி திடீரென மாயமாக மறைந்தது. இது தொடர்பாக வீட்டின் உரிமையாளர் சாவகச்சேரிப் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்திருந்தார்.

பொலிஸ் நிலைய தலைமைக் காரியாலய பொறுப்பதிகாரியின் பணிப்பின் பேரின் பெருங்குற்றப்பிரிவு பொலிஸார் மேற்கொண்ட தொடர் விசாரணைகளின் பயனாக நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை காலையில் வீட்டின் பின்பகுதியில் தாலிக்கொடி காணப்பட்டு கண்டெடுக்கப்பட்டது.

கண்டெடுத்த தாலிக் கொடியுடன் பொலிஸ் நிலையத்துக்கு வருகை தந்த வீட்டு உரிமையாளர் தாலிக்கொடி கிடைத்ததால் முறைப்பாட்டினை வாபஸ் பெற வந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

பொலிஸார் அந்தப் பகுதியில் மேற்கொண்ட விசாரணைகளால் பதற்றமடைந்து தாலிக் கொடியைத் திருடியவர் அதனை இரவு வளவுக்குள் எறிந்திருக்கலாமென தெரிவிக்கப்பட்டது.

பொலிஸார் தொடர்ந்து விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (த-9)

## சுகாதார நடைமுறைகளை பேணுமாறு அறிவுறுத்தல்

யாழ்ப்பாணம், ஜன.3

யாழ்.கரையோரப் பகுதியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்கள் சுகாதார நடைமுறைகளைக் கண்டிப்பாகக் கடைப்பிடிக்க வேண்டும் என்று யாழ்.பிரதேச செயலர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரன் அறிவித்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பொம்மைவெளி, நாவாந்துறை, காக்கைதீவு, சூரியவெளி, கொட்டடி மீனாட்சிபுரம் போன்ற பகுதிகளில் அண்மையில் பெய்த மழை காரணமாக வெள்ளம் ஏற்பட்டு மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர்.

மக்களின் குடிமனைகளைச் சூழ்ந்திருந்த வெள்ளம், நீர் இறைக்கும் பம்பிகள் மூலம் அகற்றப்பட்டுக் கடலுக்குள் விடப்பட்டது.

**சம்பந்தப்பட்ட பிரிவு கிராம உத்தியோகத்தர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும்.**

இந்த மழை வெள்ளத்தை தொடர்ந்து இந்தப் பகுதி மக்களுக்கு டெங்கு மற்றும் தொற்று நோய்கள் என்பன ஏற்படாமல் இருக்கச் சம்பந்தப்பட்ட மக்கள் சுகாதார நடைமுறைகளைக் கடுமையாகப் பின்பற்ற வேண்டும்.

அத்துடன் சுற்றுச்சூழலைச் சிரமதானம் மூலம் துப்புரவு செய்வதற்கும் சம்பந்தப்பட்ட பிரிவு கிராம உத்தியோகத்தர்கள் நடவடிக்கை எடுக்கவேண்டும்.- என்றார். (த-17)

## அதிபர்களுக்கான கூட்டம்

யாழ்ப்பாணம், ஜன.03

நல்லூர் கல்விக் கோட்ட அதிபர்களுக்கான கூட்டம் இன்று முற்பகல் 9 மணிக்கு நல்லூர் கல்விக் கோட்ட பணிமனையில் நடைபெறவுள்ளதாக பணிப்பாளர் சி.மாணிக்கராஜா அறிவித்துள்ளார். பாடசாலை அதிபர்கள் ஒவ்வொருவரும் ஆசிரியர்களை அழைத்துவருமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

* * *

கோப்பாய்க் கோட்ட ஆசிரியர்களுக்கு இன்று நடைபெறவிருந்த கூட்டம் எதிர்வரும் 7ம் திகதி திங்கட்கிழமைக்குப்பிற்போடப்பட்டுள்ளதாக கோட்டக் கல்வி அதிகாரி வே.பாலசுப்பிரமணியம் அறிவித்துள்ளார். (16)

## மண்டைதீவு கடலில் வெளிநாட்டு பறவைகள்

யாழ்ப்பாணம், ஜன.3

*மண்டைதீவுக் கடற்பகுதியில் வெளிநாட்டுப் பறவையினங்களின் வருகை அதிகரித்துக் காணப்படுவதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.*

*தற்போதைய காலநிலை மாறுபாடு காரணமாக இந்தப் பறவை இனங்கள் வருடம் தோறும் டிசெம்பர், ஜனவரி மாதங்களில் வெளிநாடுகளில் இருந்து இங்கு வருகை தருவது வழக்கம்.*

*மண்டைதீவுக் கடற்பகுதியில் அண்மைக்காலமாக வெளிநாட்டுப் பறவைகள் அதிக எண்ணிக்கையில் வந்து குவிந்துள்ளதாகவும் இவற்றைப் பார்ப்பதற்காக அந்தப் பகுதியில் மாலை வேளைகளில் மக்கள் கூடுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.*

*இந்தப் பறவை இனங்களில் பல உயரமான கால்களையும் நீண்ட இறக்கைகளையும் கொண்டுள்ளதுடன் பெரிய தோற்றம் உடையவையாகவும் காணப்படுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.* (த-17)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழருக்கு...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

வித்தார். அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன்று நாட்டில் இருப்பது ஒரு புதுமையான அரசு என்பதை சிங்கள மக்கள் அறிந்து கொள்ள வேண்டும். தமிழ் பல்கலைக்கழக மாணவர்களை கைது செய்து அவர்களை புனர்வாழ்வு முகாம்களில் அடைக்கிறார்கள். இது பற்றி கேட்டால், மாணவர்கள்தான் தாமாகவே இந்த புனர்வாழ்வை விரும்பிக் கேட்டார்கள் என்று அரசு கூறுகிறது.

இவ்வாறு கூறும் அரசு, தமிழ் மக்கள் தொடர்ந்து கோரி வரும் அரசியல் தீர்வை தர மறுக்கிறது. ஒரே நாட்டுக்குள் அதிகாரத்தை பகிர்ந்து வாழ்வோம் என நாம் கேட்பதைத் தர மறுக்கிறது. இன்றைய அரசியல் சட்டத்தில் இருக்கின்ற 13 ஆவது திருத்தச் சட்டத்தை நடைமுறைப்படுத்தி மாகாணசபை முறைமையைக்கூட வடக்கில் ஏற்படுத்த அரசு மறுக்கிறது. தமிழர்கள் தமிழ் மொழியில் தங்கள் கருமங்களை ஆற்றிகொள்ளும் உரிமையைத் தர மறுக்கிறது. இந்த அரசு தமிழ் மக்கள் கேட்பதை கொடுக்காமல், கேட்காததை கொடுக்கிறது.

நமது இந்த மேடை தேசிய இனப்பிரச்சினை சம்பந்தமாகப் பேச உருவாக்கப்பட்ட மேடை. நாட்டின் ஏனைய பிரச்சினைகள் குறித்து பேசுவதற்கு எத்தனையோ கட்சிகளின் மேடைகள் உள்ளன. பலதும் இங்கே பேசினாலும், அரசியல் அதிகாரத்தை பகிர்வோம், நாட்டை ஐக்கியப்படுத்துவோம் என்ற செய்தியைச் சிங்கள மக்களுக்கு சொல்வதற்கே பிரதானமாக நாம் இந்த மேடையை உருவாக்கியுள்ளோம்.

தென்னிலங்கையில் இன்று பல்கலைக்கழக மாணவர்களுக்கு தலைமைத்துவ பயிற்சி வழங்கப்படுகின்றது. இந்த அரசின் மஹிந்த சிந்தனையை அனுசரிக்கவேண்டும். வேறு அரசியல் சிந்தனைகளை கருத்திற்கொள்ளக் கூடாது. பல்கலைக்கழக மாணவர்கள் தமது மூளைகளை பூட்டி வைக்க வேண்டும் என்ற நோக்கிலேயே இந்த தலைமைத்துவப் பயிற்சி நடத்தப்படுகிறது.

**எதிர்ப்பு இல்லாமல் ஏற்க வேண்டும் என்பதற்காகவே**

வடக்கில் புனர்வாழ்வு என்பது பெரும்பான்மை இன ஆதிக்கத்தை தமிழ் இளைஞர்கள் எதிர்ப்பில்லாமல் ஏற்றுக்கொள்ளவேண்டும் என்பதற்காக நடத்தப்படுகிறது. தமிழர்கள் இந்த நாட்டில் அதிகாரத்தை கோரக்கூடாது. இந்த நாடு சிங்கள இனத்துக்கு மட்டும் சொந்தமான நாடு என்ற சிந்தனையை தமிழ் இளைஞர்கள் தலையில் புகுத்துவதற்காக இந்த புனர்வாழ்வு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் தாமாக விரும்பி புனர்வாழ்வை கேட்டார்கள் என அரசு கூறுகிறது. அதனால் மாணவர்கள் கேட்டதை அது கொடுக்கிறதாம்.

இவ்வாறு கேட்பதை எல்லாம் கொடுக்கும் அரசுக்கு, தமிழ் மக்களின் வாக்குகளை பெற்றுள்ள ஜனநாயக பிரதிநிதிகளான நாம் கேட்பது காதில் விழவில்லை. நாட்டின் ஏனைய மாகாணங்களுக்கு வழங்கப்பட்டுள்ள மாகாணசபையை முதலில் வழங்குங்கள் என்றும், நாட்டின் அரசமைப்பிலுள்ள 13ஆம் திருத்தச் சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துக என்றும் நாம் கேட்பது அரசின் காதில் விழவில்லை.

பயங்கரவாதத்திற்கு எதிரான போர் முடிந்தவுடன் இன்று பொருளாதார யுத்தம் நடத்தப்படுவதாகவும், அதனால் வடக்கில் பொருளாதார அபிவிருத்தி நடைபெறுவதாகவும் அரசு கூறுகிறது. போரால் உடைந்து நாசமாகியுள்ள பாதைகளையும், கட்டடங்கள் சிலவற்றையும் நிர்மாணிப்பது எப்படி பொருளாதார அபிவிருத்தியாகும்? உடைந்தவைகளை திருத்தம் செய்வது அபிவிருத்தி அல்ல. அது புனர்நிர்மாணமாகும். அதுவும் இன்று ஒழுங்காக நடைபெறவில்லை.

உண்மையில் தமிழ் மக்கள் கோருவது கொழும்பிலிருந்து எடுக்கப்படும் முடிவுகளை அல்ல. இங்கிருந்து முடிவெடுத்து சென்று வடக்கில் அமுல் செய்ய நினைக்காதீர்கள். திருத்த வேலைகளைகூட இதன்மூலம் ஒழுங்காக செய்ய முடியாது. பாலம் கட்டவும், வீதி அமைக்கவும், அவற்றை எங்கே, எப்படி, எவ்வாறு என்ற முடிவுகளை எடுக்கும் அரசியல் அதிகாரத்தை தமிழ் மக்களின் வாக்குகளால் தெரிவு செய்யப்படும் மக்கள் பிரதிநிதிகளிடம் ஒப்படையுங்கள். இதுதான் உண்மையான அரசியல் அதிகார பகிர்வு. இதன்மூலம்தான் உண்மையான பொருளாதார அபிவிருத்தி ஏற்படும் - என்றார் மனோ கணேசன்.

(த-சி)

# மருத்துவர்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

டார். பின்னர் அவர் மாங்குளம் பொலிஸில் ஒப்படைக்கப்பட்டார். அவரைப் பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் தடுத்து வைத்திருந்த பொலிஸார் நேற்றுமுன்தினம் இரவு முல்லைத்தீவு நீதிவானிடம் முற்படுத்தினர். அவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர். அத்துமீறி இராணுவ முகாமுக்குள் நுழைந்ததாகவும், ஒலிப்பதிவுக் கருவிகளை அவர் தன்வசம் வைத்திருந்ததாகவும் படைத்தரப்பினர் குற்றம் சுமத்துகின்றனர்.

மூன்று நாள்களாக மருத்துவரைத் தடுத்து வைத்து விசாரணை செய்த பொலிஸார் நீதிவானிடம் முற்படுத்தி விளக்கமறியலில் வைப்பதற்கான அனுமதியைப் பெற்றுக் கொண்டுள்ளனர். (த-4)

# இந்திய...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

களால் குடாநாட்டு வர்த்தகர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இது தொடர்பாக யாழ். மாநகர முதல்வரிடம் உள்ளூராட்சி அமைச்சின் செயலாளரிடம் பலமுறை எடுத்துக் கூறியிருந்தோம்.

தற்போது அதற்குத் தீர்வாக சட்டவிரோதமாக தொழில் புரிபவர்களுக்கு நேற்றுமுன்தினம் முதலாம் திகதி தொடக்கம் தடை விதிக்கப்பட்டுள்ளது.

மாநகர எல்லைக்குள் இவற்றைக் கண்காணிக்க 24 மணிநேரமும் இயங்கும் வகையில் குழு நியமிக்கப்பட்டுள்ளது. இதனை மீறி யாராவது மாநகர எல்லைக்குள் எங்காவது வியாபார நடவடிக்கையில் ஈடுபடுவார்களாயின் அதுபற்றி மாநகர சபையின் இலக்கமான 021 222 2335 என்னும் தொலைபேசி இலக்கத்துக்கு முறைப்பாடு செய்யலாம்.

சட்டவிரோதமாக வியாபார நடவடிக்கையில் ஈடுபடுபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கும்படி பொலிஸாருக்கும் அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் முதல்வர் எமக்கு அறிவித்துள்ளார். எனவே சட்டவிரோத வியாபார நடவடிக்கைகள் தொடர்பில் பொலிஸார் சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும்- என்றார். இதேவேளை,

சட்டவிரோத நடைபாதை வியாபாரிகளின் நடவடிக்கைகளால் குடாநாட்டு வியாபாரிகள் கடுமையாகப் பாதிக்கப்படுகிறார்கள். எனவே சட்டவிரோத நடைபாதை வியாபாரத்தைத் தடைசெய்ய வேண்டும் அல்லது எமது வியாபாரிகளுக்கான வரி மற்றும் ஏனைய அறவீடுகளை மாநகர சபை குறைக்க வேண்டும் என்று மாநகர எதிர்க்கட்சி உறுப்பினர் விந்தன் கனகரட்ணம் அண்மையில் கோரியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (த 4)

# யாழ்.போதனா...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

குழந்தைகள் என மூவர் உயிரிழந்தமை தொடர்பான வழக்கும் இதில் உள்ளடங்குகின்றன.

அவர் நீதிமன்றுக்கு சமர்ப்பித்துள்ள அறிக்கையில் மேலும் கூறப்பட்டுள்ளதாவது:

வயது மூப்பின் காரணமாக ஏற்படும் உயிரிழப்புகள் தனி மனித இழப்பாகவும், ஒரு குடும்ப உறவின் இழப்பாகவும் மாத்திரமே கருதப்படும். ஆனால் தாய், சேய் உயிரிழப்பு என்பது ஒரு சமூகத்தினுடைய இழப்பாகவே கருதப்பட வேண்டும்.

கடந்த கால போர், புலம்பெயர்வு என்பன இளம் சந்ததியினரிடையே பெரும் இடைவெளியை ஏற்படுத்தியுள்ளது.

வயது கூடிய திருமணங்கள், கணவன்-மனைவி இருவரும் வேலைக்குச் செல்கின்றமையாலும், குழந்தைகளைப் பராமரிக்கும் சிரமம் உட்படப் பல காரணங்களால் தமிழ்ச் சமூகத்தின் பிறப்பு வீதம் குறைந்து கொண்டு செல்கின்றது. மூத்த சமூகத்தினர் உயிரிழக்கும் போது சமூக அடர்த்தி மேலும் குறைவடையும். இவை எதிர்காலத்தில் சமூக, அரசியல், பொருளாதாரத்தில் மிகப் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தும் இவற்றைக் கருத்தில் கொண்டு தாய், சேய் உயிரிழப்பைத் தடுக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவர்களின் உயிரிழப்புகள் அதிகரிக்கும் போது விசாரணை செய்து சுகாதார அமைச்சுக்கு அறிவித்துத் தேவையான மருத்துவ உதவிகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும். இந்த உயிரிழப்புகள் தொடர்பாக வைத்திய சாலைப் பணிப்பாளர் பிராந்திய சுகாதார சேவைப் பணிப்பாளர்கள் உரிய விசாரணை நடத்த வேண்யடும். இதுவரை அப்படி ஏதாவது நடந்துள்ளமை பற்றித் தெரியவில்லை.

இவைதவிர பாதிக்கப்பட்டவர்கள் சிலர் சில குற்றச்சாட்டுகளை முன்வைத்துள்ளார்கள்.

★ நோய்க்குச் சிகிச்சை செய்வதற்கென அரச வைத்தியசாலைகளுக்குச் செல்லும் போது நோயாளியைப் பொறுமையோடும், அக்கறையோடும் பரிசோதிப்பதில்லை. நோயை நிர்ணயம் செய்யாமலேயே மருந்து கொடுத்து விடுகின்றனர்.

★ அநேகமான மருத்துவ நிபுணர்கள், தனியார் வைத்தியசாலைகளில் பணம் செலுத்திப் பதிவு செய்யும் நோயாளர்களையே அரச வைத்தியசாலைகளில் பார்வையிடுகின்றனர்.

★ உரிய நேரத்தில் உரிய சிகிச்சை வழங்கப்படாமையால் உயிரிழப்பு ஏற்படுகிறது.

★ யாழ்.போதனா வைத்தியசாலை பிரசவ விடுதிகளில் மகப்பேற்று நிபுணர்கள் பிரசவம் பார்ப்பதில்லை என்றும் விடுதி வைத்தியர்களே பிரசவம் பார்ப்பதாகவும், பிரசவ வேளை உயிரிழப்பு ஏற்பட அதுவும் ஓர் காரணம் என்றும் மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.

- என்றும் மரண விசாரணை அதிகாரி தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார். (த 4)

# 2 நாள்களில்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

யாழ்ப்பாணம் ஆகிய இடங்களில் நான்கு பேர் டெங்கு நோயால் பீடிக்கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சில தினங்களுக்கு முன்பெய்த மழை தற்போது இல்லாவிட்டாலும் டெங்கு பரவும் இடங்களில் இருந்து நுளம்பு பெருக வாய்ப்புள்ளது. எனவே அனைவரும் விழிப்புடன் இருக்க வேண்டும் என்று சுகாதாரப் பகுதியினர் அறிவுறுத்தியுள்ளனர். (த 4)

# நீதிமன்றத்தின்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் மேற்படி தீர்ப்பையடுத்து நீதித்துறைக்கும் சட்டவாக்கத்துக்குமிடையில் ஏற்பட்டிருந்த மோதல் மேலும் உக்கிரமடைய ஆரம்பித்தது. மேன்முறையீட்டு நீதிமன்றின் அறிவித்தலை ஏற்கப்போவதில்லை என அரச தரப்பு நாடாளுமன்றத் தெரிவுக்குழு உறுப்பினர்கள் எடுத்த எடுப்பிலேயே தெரிவித்தனர்.

அத்துடன், நாடாளுமன்றத் தெரிவுக்குழுவின் செயற்பாட்டை சவாலுக்குட்படுத்துவதற்கோ, அல்லது சிபாரிசுகளை முன்மொழியவோ, அதற்கு எதிரான உத்தரவுகளைப் பிறப்பிக்கவோ எந்தவொரு வெளி நிறுவனத்துக்கும் அதிகாரமில்லை எனத் தெரிவித்து உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பை சபாநாயகர் நிராகரித்த விடயத்தையும் அதற்கு சான்றாக ஆளும் தரப்பினர் சுட்டிக்காட்டினர்.

**நாடாளுமன்ற அதிகாரம்**

நாடாளுமன்றச் செயற்பாடுகளில் தலையிடும் அதிகாரம் நீதிமன்றத்துக்கு கிடையாது என முன்னாள் சபாநாயகர் அநுர பண்டாரநாயக்க வழங்கிய தீர்ப்பையும் கோடிகாட்டிக் குறிப்பிடும் அவர்கள், நாடாளுமன்றை நீதிமன்றால் சவாலுக்குட்படுத்த முடியாது என்றும் திட்டவட்டமாக இடித்துரைத்தனர்.

ஆனால், நீதிமன்றத்தின் அறிவிப்பு தொடர்பில் பரிசீலிக்கப்படும் எனத் தெரிவுக்குழுவில் அங்கம் வகித்த எதிர்க்கட்சி உறுப்பினர்கள் தெரிவித்ததுடன் இதுகுறித்து சட்ட ஆலோசனை பெறப்படும் என்றும் அறிவித்தனர்.

இதற்கிடையில் கலைக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக்குழுவுக்கு நீதிமன்றம் அழைப்பாணை விடுக்க முடியாது என அரச தரப்பு தெரிவுக்குழு உறுப்பினர்கள் மற்றுமொரு சட்டப்பிரச்சினையை எழுப்பினர். எனினும், நீதிமன்றத்தால் அவ்வாறு உத்தரவிடலாம் என ஓய்வுபெற்ற நீதியரசர்கள் சுட்டிக்காட்டியதுடன், நீதிமன்றில் உறுப்பினர்கள் முன்னிலையாவதே சிறந்தது என்றும் ஆலோசனை வழங்கினர்.

இவ்வாறு மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் அறிவிப்பு தொடர்பில் எதிரும் புதிருமாக பல தரப்புகளாலும் கருத்துகள் முன்வைக்கப்பட்டு வந்த நிலையில், நேற்று அரசியல் கட்சிகள் கொழும்பில் அவசர ஊடகவியலாளர் மாநாட்டை ஏற்பாடு செய்திருந்தன.

குறிப்பாக, மகாவலி கேந்திர நிலையத்தில் நேற்று நடைபெற்ற அரசதரப்பின் ஊடகவியலாளர் மாநாட்டின்போது மேன்முறையீட்டு நீதிமன்றில் தாம் முன்னிலையாகப் போவதில்லை எனத் தெரிவித்து நீதிமன்ற அறிவிப்பை நிராகரித்தனர். இதற்கான சட்ட வியாக்கியானத்தையும் அவர்கள் விளக்கினர்.

அதேவேளை, பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் ஊடகவியலாளர் மாநாட்டின்போது கருத்து வெளியிட்ட அக்கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க தமது கட்சி உறுப்பினர்கள் இருவரும் மேன்முறையீட்டு நீதிமன்றில் இன்று முன்னிலையாகமாட்டார்கள் என்ற தகவலை வழங்கினார்.

**கூட்டமைப்பும் ஜே.வி.பியும் சமுகமளிக்கும்**

அத்துடன், 'அதிகாரத்தைப் பகிர்ந்து நாட்டை ஐக்கியப்படுத்துவோம்' என்ற அமைப்பு ஏற்பாடு செய்திருந்த ஊடகவியலாளர் மாநாட்டின்போது மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் அறிவிப்பு தொடர்பில் கருத்து வெளியிட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரும், சிரேஷ்ட சட்டத்தரணியுமான எம்.ஏ. சுமந்திரன், மேன்முறையீட்டு நீதிமன்றின் அறிவிப்பு ஏற்கப்படவேண்டியது எனத் தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் தெரிவுக்குழுவில் இடம்பெற்றிருந்த நாடாளுமன்ற உறுப்பினர் சம்பந்தன் மருத்துவ சிகிச்சைக்காக இந்தியாவுக்குச் சென்றிருப்பதால் அவரின் சார்பில் அவரது சட்டத்தரணி எம்.ஏ. சுமந்திரன் இன்று மேன்முறையீட்டு நீதிமன்றில் முன்னிலையாவார். இதற்கிடையில் நேற்றுமாலை பத்தரமுல்லை பெலவத்தையிலுள்ள தனது தலைமையகத்தில் விசேட செய்தியாளர் மாநாட்டை ஏற்பாடு செய்திருந்த ஜே.வி.பி., தெரிவுக்குழுவில் இடம்பெற்ற தனது கட்சி உறுப்பினர் இன்று மேன்முறையீட்டு நீதிமன்றில் முன்னிலையாவார் என்ற தகவலை வழங்கியது.

குறிப்பாக, நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் இடம்பெற்ற 11 உறுப்பினர்களுள் 7 பேர் அரச தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. இந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள் நீதிமன்றத்துக்கு சமுகமளிக்காத நிலையில், மேன்முறையீட்டு நீதிமன்றம் தீர்ப்பொன்றை வழங்கினால் அதுகுறித்து அரச தரப்பு எம்.பிக்கள் சட்டரீதியாக அதிருப்தியை வெளியிடுவர். அவ்வாறானதொரு நிலை ஏற்பட்டால் சட்டவாக்கத்துக்கும் நீதித்துறைக்குமிடையில் ஏற்பட்டுள்ள மோதல் மேலும் உக்கிரமடையும் என்பது திண்ணம்.

எவ்வாறெனில், எதிர்வரும் 8 ஆம் திகதி இதுவிடயம் தொடர்பில் சபாநாயகர் சமல் ராஜபக்ஷ நாடாளுமன்றில் விசேட அறிவிப்பொன்றை விடுப்பதற்கு உத்தேசித்துள்ளார் என அறியமுடிகின்றது. மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்பு தொடர்பில் நாடாளுமன்றத்தின் பதிலாக அது அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது. எனினும், இதுகுறித்து இன்னும் உத்தியோகபூர்வ தகவல்கள் எதுவும் வெளியாகவில்லை.

அதேவேளை, அரசமைப்பில் தமக்குள்ள தத்துவங்களின் அடிப்படையில் நியமிக்கப்படும் நாடாளுமன்றத் தெரிவுக்குழு விடயத்தில் தலையிடும் அதிகாரம் வெளி நிறுவனங்களுக்குக் கிடையாது என சபாநாயகர் அறிவித்துள்ள தீர்ப்பு, மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கும் பொருந்தும் என அரச தரப்பு தெரிவுக்குழு உறுப்பினர்களுள் ஒருவரான அமைச்சர் சுசில் பிரேமஜயந்த தெரிவித்துள்ளமை இங்கு குறிப்பிடத்தக்கது.

எனவே, அமைச்சரின் கூற்றின் பிரகாரம் மேன்முறையீட்டு நீதிமன்றின் தீர்ப்பை நாடாளுமன்றம் ஏற்காது என்பதை ஊகிக்கக் கூடியதாகவுள்ளது என்றும் அவ்வாறானதொரு சூழல் உருவாகுமானால் அது சட்டவாக்கத்துக்கும், நீதித்துறைக்குமிடையில் ஏற்பட்டுள்ள பிரச்சினையை அதிகரித்து அதனைத் தொடர்ச்சியாக அழைத்துச்செல்லும் பாதையாக அமையும் என நிபுணர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

**முன்னர் எழுந்த சர்ச்சை**

தமக்கெதிராக சமர்ப்பிக்கப்பட்ட நாடாளுமன்றத் தெரிவுக்குழு அறிக்கையின் நடைமுறைப்படுத்துவதற்கு இடைக்காலத் தடை உத்தரவைப் பிறப்பிக்குமாறு பிரதம நீதியரசர் மேன்முறையீட்டு நீதிமன்றில் மனு தாக்கல் செய்தார். அப்போது பிரதம நீதியரசரின் மனுவை விசாரிக்கும் நியாயாதிக்கம் மேன்முறையீட்டு நீதிமன்றத்துக்கு இருக்கின்றதா என்ற சர்ச்சை எழுந்தது. இதற்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் அதற்கான தத்துவம் தமக்கு இருக்கிறது என்று தெரிவித்து மேன்முறையீட்டு நீதிமன்றம் குறித்த மனுவை விசாரணைக்கு ஏற்றது.

அத்துடன், குறித்த மனுவில் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டுள்ள சபாநாயகர், நாடாளுமன்றச் செயலாளர் நாயகம், தெரிவுக்குழு உறுப்பினர் ஆகியோரை நீதிமன்றில் முன்னிலையாகி அது குறித்து விளக்கமளிக்குமாறு மேன்முறையீட்டு நீதிமன்றம் அறிவிப்பு விடுத்தது.

இதன் பின்னணியிலேயே நீதித்துறைக்கும் சட்டவாக்கத்துக்கும் இடையில் பலத்த சர்ச்சைகள் எழுந்துள்ளன. இன்று மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்பைப்பொறுத்தே பிரதம நீதியரசர் விடயத்தில் அடுத்தகட்ட நடவடிக்கைகள் இடம்பெறவுள்ளன. நீதித்துறைக்கும் நாடாளுமன்றத்திற்குமிடையில் முரண்பாடு நிலைமை உருவாகினால் அதில் நிறைவேற்று அதிகாரம் தலையீடு செய்யும் நிலை இருப்பதால் இப்போது இந்த மூன்று கட்டமைப்பிற்குள்ளும் கடும் மோதல் வெடிக்க ஆரம்பித்துள்ளது. (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஊழல்களில் ஈடுபட்டால் நடவடிக்கை எடுப்பேன்

## கல்முனை மாநகர முதல்வர் எச்சரிக்கை

அம்பாறை, ஜன.3

கல்முனை மாநகர சபையில் லஞ்சம், ஊழல் போன்றவற்றுக்கு யாராவது துணையாக இருப்பது ஆதாரத்துடன் எனது கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டால், அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க ஒரு போதும் தயங்க மாட்டேன். இவ்வாறு கல்முனை மாநகர முதல்வர் சிராஸ் மீராசாஹிப் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

கல்முனை மாநகர சபையின் புத்தாண்டு சத்தியப் பிரமாண நிகழ்வு நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை காலை மாநகர முன்றலில் முதல்வர் தலைமையில் இடம்பெற்றது. அந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:- முதல்வராக நான் நியமிக்கப்பட்ட காலம் முதல் பல சவால்களுக்கு மத்தியில் இந்தச் சபையை முன்னெடுத்துச் செல்கின்றேன்.

என்மீது மக்கள் வைத்திருக்கின்ற நம்பிக்கையைப் பாதுகாக்க வேண்டும். அதனால் எனது காலப்பகுதிக்குள் மாநகர சபை மூலம் மக்களுக்கு என்ன செய்திருக்கின்றேன் என்று சுயவிசாரணை செய்து கொள்வதுண்டு.

குறுகிய காலத்துக்குள் அரசியலுக்கு வந்த நான் , உறுப்பினர்களோடு இணைந்து மக்களுக்காக என்னால் முடிந்த சேவைகளை செய்துவருக்கின்றேன். அதனால் தற்போது இந்த மாநகரசபை மக்களால் பேசப்படுகின்ற ஒரு சபையாக மாறியிருக்கின்றது.

இந்த ஆண்டு நடத்தப்படவுள்ள மாநகர முத்துக்கள் நிகழ்வில், திறமையாகக் கடமையாற்றுகின்ற மாநகர உத்தியோகத்தர்கள், ஊழியர்கள், அதிபர்கள், ஆசிரியர்கள் ஆகியோர் கௌரவிக்கப்படவுள்ளனர்.

மாநகரசபையில் கடமையாற்றுகின்ற சுகாதாரத் தொழிலாளர்களை நான் மதிக்கின்றேன்.

முகம் சுழிக்காது அவர்கள் ஆற்றுகின்ற சேவையால்தான் மாநகரம் சுத்தமாகக் காட்சி தருகின்றது. யார்வேண்டுமானாலும் எந்த நேரத்திலும் என்னை சந்தித்து அவர்களின் குறை, நிறைகளை தெரிவிக்க முடியும். என்னைச் சந்திப்பதற்கு எவரும் தயங்க வேண்டியதில்லை.

வரலாற்றிலே முதல் தடவையாக 2012 ஆம் ஆண்டு 93 லட்சம் ரூபா சோலை வரி வருமானமாகக் கிடைத்துள்ளது. மக்கள் முதல்வர் மீதும், முதல்வரின் செயற்பாட்டின் மீதும் வைத்திருக்கின்ற நம்பிக்கையின் பயனாக ஈட்டப்பட்ட வருமானமே அதுவாகும்.

மக்களுக்காகவே நாங்கள். எங்களுக்காக மக்கள் அல்ல. எனவே இந்த மாநகர சபையானது அவர்களுக்கான சேவையை சீராக வழங்க வேண்டும்.

மக்கள் எமது சேவையைப் பெறுவதற்காக வருகின்றபோது இன்முகத்தோடு அவர்களின் தேவையைக் கேட்டறிந்து, பூர்த்தி செய்யக் கூடியவர்களாக நாம் இருக்க வேண்டும்.

வார இறுதி நாள்களில் கடமையில் இருக்கின்ற பொதுமக்களால் மாநகர சபையின் சேவைகளை பெற்றுக்கொள்ள முடியாமல் இருக்கின்றது. அதனால் இந்த ஆண் டில் இருந்து கல்முனை மாநகர சபை சனிக்கிழமை களில் பிற்பகல் ஒரு மணி வரை மக்கள் பணிக்காக வழமைபோல் செயற்படும். -என்றார்.

இந்தநிகழ்வில் ஆணையாளர் ஜே.லியாகத்அலி, பொறியியலாளர் ஹலீம் ஜௌசி, கணக்காளர் எல்.ரீ.சாலிதீன் உட்பட பலர் கலந்துகொண்டனர். (ச)


Technical Reporting Multimedia Good Journalism Editing Writing

பத்திரிகைத்துறையில் பிரகாசிப்பதற்கு ஒரு சந்தர்ப்பம்

- 21 வயதுக்கும் 27 வயதுக்கும் இடைப்பட்டோர்
- ஜி.சீ.ஈ.உயர்தரத்தில் சித்தி
- ஆங்கிலமொழி அறிவு விசேட தகைமையாகக் கருதப்படும்.
- பத்திரிகைத்துறை முன் அனுபவம் உள்ளவர்களுக்கு முதலிடம்
- பிரமுகர்கள் இருவரின் நற்சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கவும்.

- நீங்கள் பத்திரிகைத் துறையில் ஆர்வம் உள்ள இளைய வயதினரா?
- தமிழ்மொழியில் இலக்கணப் பிழையின்றி எழுதும் ஆற்றல் உடையவரா?

அவ்வாறாயின் பத்திரிகைத்துறையில் முன்னேறிப் பிரகாசிப்பதற்கு இதோ ஓர் சந்தர்ப்பம்!

ஆர்வமுள்ள ஆண்,பெண் இருபாலாரும் தங்கள் விண்ணப்பங்களை 09.01.2013 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பவும்.

பிரதம ஆசிரியர்,
உதயன் பணிமனை,
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.



திருநெல்வேலி அபான்ஸ் வழங்கும்

புதுவருட கொண்டாட்டம்

வாடிக்கையாளர்களிற்காக புதுவருடச் சலுகை 08.01.2013 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

LCD, LED, 3d தொலைக்காட்சிப் பெட்டிகள் அனைத்தையும்

* மிகக்குறைந்த ஆரம்பக் கட்டணம்

* இலகு மாதாந்த தவணைக் கொடுப்பனவு

32" LED தொலைக்காட்சி பெட்டியை வாங்குவதோடு ஒரு DVD பிளேயர் இலவசம்

கேட்டு வாங்குங்கள்

இது மாத்திரமல்ல அனைத்து மின்சாதன பொருள்களையும் இலகு தவணைக் கொடுப்பனவு முறையில் பெற்றுக்கொள்ளலாம்.

2 வருட உத்தரவாதத்துடன்

அபான்ஸ்

Abans திருநெல்வேலி

269, பலாலி றோட், கந்தர்மடம்.
021 222 0247, 0774055003
0770718433


## கல்முனை மாநகரப் பிரிவில் பயணிக்க முடியாத வீதிகள்

### வீதி அபிவிருத்தி அமைச்சருக்கு மனு

கல்முனை மாநகரசபைப் பிரிவுக்குட்பட்ட பல வீதிகள் போக்குவரத்துச் செய்ய முடியாத அளவுக்கு மோசமான நிலையில் காணப்படுகின்றன.

வீதி அபிவிருத்தித் திணைக்களத்தால் நீண்டகாலமாகப் பராமரிப்பின்றி விடப்பட்டுள்ள இந்த வீதிகளின் அவல நிலை குறித்து, கல்முனை வரைவற்ற வேல்முருகு ஆசிரியர் சிக்கனக் கூட்டுறவுச் சங்கம், கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி நீர்ப்பாசன அமைச்சர் உட்பட திணைக்கள உயரதிகாரிகளின் கவனத்துக்கும் கொண்டு வந்துள்ளது.

இந்த விடயம் தொடர்பில் சங்கத் தலைவர் எஸ்.லோகநாதன், கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி நீர்ப்பாசன அமைச்சர் எம்.எஸ். உதுமாலெவ்வைக்கு மனு ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அந்த மனுவில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

கல்முனை மாநகர சபைப் பிரிவுக்குபட்ட கல்முனை அம்மன் கோயில் முன் வீதி, விவேகானந்தா வித்தியாலய வீதி, இராம கிருஷ்ண மிஷன் வித்தியாலய வீதி, இஸ்லாமாபாத் வீதி என்பன சேதமுற்று குன்றும் குழியுமாகக் காணப்படுகின்றன.

இந்த வீதிகளூடாகத் தினமும் பொதுமக்கள் உட்பட பாடசாலை மாணவர்கள், அரச திணைக்கள ஊழியர்கள், ஆலயங்களுக்குச் செல்லும் பக்தர்கள், வியாபாரிகள் பெரும் சிரமங்களுக்கு மத்தியிலேயே செல்ல வேண்டிய நிலையுள்ளது.குறிப்பாக மழை காலங்களில் வீதிகளின் பல இடங்களிலும் மழை நீர் தேங்கி நிற்பதால் பல்வேறு அவலங்களும் ஏற்பட்டு வருகின்றன.

சில வீதிகளில் வாகனங்கள், மோட்டார் சைக்கிள்கள் செலுத்திச் செல்ல முடியாத நிலைமை உள்ளது. மழை காலங்களில் விபத்துகள் ஏற்படவும் வழிவகுக்கிறன.

நீண்டகாலமாக எவ்வித புனரமைப்பு, பராமரிப்புமின்றிக் கைவிடப்பட்டுள்ள வீதிகளை மக்கள் நலன் கருதிப் புனரமைத்துத்தர வேண்டும்.-என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

மனுவின் பிரதிகள் கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தித் திணைக்களப் பணிப்பாளர், கல்முனை நிறைவேற்றுப் பொறியியலாளர், கல்முனை மாநகர முதல்வர் ஆகியோருக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. (ச-30)

# அதிகாரிகளின் தன்னிச்சையான போக்குக்கு நடவடிக்கை எடுக்குக

கிழக்கு மாகாண கல்வி விடயங்களில் ஏற்பட்ட சிக்கல்களுக்கு உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். குறிப்பாக அக்கரைப்பற்று வலயக்கல்வி அலுவலகத்தில் குறிப்பிட்ட சில அதிகாரிகளின் தன்னிச்சையான போக்குக்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இவ்வாறு புதிதாக நியமனம் பெற்றுள்ள மாகாணக் கல்விப் பணிப்பாளரிடம் கிழக்கு மாகாணசபை உறுப்பினர் ஏ.எல்.தவம் வேண்டு கோள் விடுத்துள்ளார்.

கிழக்கு மாகாணசபை உறுப்பினர் ஏ.எல்.தவத்தின் அலுவலகத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை ஆசிரியர்களுடனான கலந்துரையாடலின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கிழக்கு மாகாண கல்விப்பணிப்பாளராக நியமிக்கப்பட்டிருக்கும் எம்.ரீ.ஏ. நிசாம் நியாயமானமுறையில் தனது பணியை மேற்கொண்டு வந்தவர்.அவர் மீண்டும் கல்விப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டிருப்பது எமக்கு பெரு மகிழ்ச்சியை தருகிறது.

கிழக்கு மாகாண கல்வி நடவடிக்கைகளில் அண்மைக்காலமாக பல பிரச்சினைகள் ஏற்பட்டு வருகின்றன. [illegible] ஆசிரியர் இடமாற்றம் நியாயமான முறையில் இடம்பெறுவதில்லை.

இவற்றுக்கெல்லாம் ஒரு முற்றுப்புள்ளியாக தற்போது நியமிக்கப்பட்டிருக்கும் கல்விப்பணிப்பாளர் செயற்படுவார் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. அவர் அரசியல் ரீதியாக கடமைசெய்பவர் அல்ல. நீதியான முறையில் தனது கடமையைச் செய்பவர். எனவே கிழக்கு மாகாண கல்வி விடயங்களில் ஏற்பட்ட சிக்கல்களுக்கு உடனடியாக அனைவருக்கும் ஏற்ற நடவடிக்கைகளை எடுக்க வேண்டும்.-என்றார். (ச)

## மரண அறிவித்தல்

### நீற்றா ஜஸ்மின் சேவியர்



இல-680, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகக் கொண்ட நீற்றா ஜஸ்மின் சேவியர் நேற்றுமுன்தினம் (01.01.2013) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற N.F.-சேவியர் பாக்கியம் சேவியர் தம்பதியரின் அன்பு மகளும், P.F. சேவியரின் அன்பு மனைவியும், Dr.J.T.சேவியர், காலஞ்சென்றவர் களான வயலட் சேவியர், Dr.G.A. சேவியர், மற்றும் பென் சேவியர், மாகிறிட் ராஜேந்திரா, பேனாட் சேவியர் ஆகியோரின் பாசமிகு சகோதரியும், இந்திரஜித், ரூவணி, நிராஞ்சித், சுராஞ்சித், றொஷானி, டிலானி, நிஷானி ஆகியோரின் அன்புத் தாயும், கிறிஷான், கலிஸ்டெலா, டிலானி, ஜெகான், சுஜீவ், டினேஷ் ஆகியோரின் அன்பு மாமியும், அனா, வாணி, கவிலன், கிளரன், ரெனிட்டா, தஷேன், ருக்ஷன், நிஷ்னி, ஆகாஷ், ஆதேஷ், கரிஷ்மா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (03.01.2013) வியாழக்கிழமை பி.ப 3.00 மணிக்கு அவரது இல்லத்திலிருந்து திருப்பலிக்காக யாழ். அடைக்கல அன்னை ஆலயத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு பின் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: குடும்பத்தினர்.
680, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
0775922216

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கண்ணீர் அஞ்சலி



கிளி/ செம்பன் குன்று அ.த.க பாடசாலை ஆசிரியை திருமதி கிறிஸ்டில்லா சத்திய சீலன் அவர்களின் அன்புத் தாய்

**திருமதி குணதாசன் எலிசபேத்**

அவர்களின் மறைவையொட்டி எமது பாடசாலைச் சமூகம் சார்பில் துயர்பகிர்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

கிளி/ செம்பன் குன்று அ.த.க. பாடசாலைச் சமூகம்.

## கண்ணீர் அஞ்சலி

சாவகச்சேரி நகராட்சி மன்ற முகாமைத்துவ உதவியாளரும் சங்க உறுப்பினருமான க. ஜீவானந்தன் அவர்களின் பாசமிகு தந்தை

**வேலாயுதபிள்ளை கனகரத்தினம்**

அவர்கள் 27.12.2012 அன்று காலமானதையிட்டு அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் ஆத்மா சாந்தியடையவும் பிரார்த்திக்கின்றோம்.

சாவகச்சேரி நகராட்சி மன்ற ஊழியர் நலன்புரி சங்கம்.

(சி/2863)(3)

## கண்ணீர்க் காணிக்கை



யா/ கைதடி விக்கினேஸ்வரா வித்தியாலய பழைய மாணவர் சங்க செயலாளர் மு. பத்மநாபன் அவர்களின் பாசமிகு தந்தை

**நடராசா முருகதாசன்**

அவர்கள் 31.12.2012 அன்று இறைபதமடைந்ததையிட்டு எமது கண்ணீர் அஞ்சலியை தெரிவித்துக் கொள்வதுடன் அன்னாரது மறைவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்
யா/ கைதடி விக்னேஸ்வரா வித்தியாலயம்.

(27634)(3.14)

## 31 ஆம் நினைவஞ்சலி

மலர்வு 20 * 03 * 1973



உதிர்வு 05 * 12 * 2012

**திருமதி அம்பிகாபதி சுபாஷினி**

என்றென்றும் மறைந்திடுமோ?
புன்னகை சிந்தும் உன் முகம்
காணா நித்தும் நித்தும்
ஏங்கித் தவிக்கின்றேன்

சுவிஸ். கணவர் (அம்பிகாபதி)

## தேவை

சுன்னாகத்தில் இயங்கும் பிரபல நிறுவனம் ஒன்றுக்கு கணினி இயக்குநர், கணக்காளர் தேவை. (பெண்கள் மட்டும் விண்ணப்பிக்கவும்)

தகைமைகள்:

கணக்காளர் (உதவியாளர்)

- ★ க.பொ.த (உயர்தரம்) சித்தியடைந்திருக்க வேண்டும்.
- ★ ஆங்கிலம் எழுத, பேச தெரிந்திருக்க வேண்டும்
- ★ முன் அனுபவம் மேலதிக தகைமையாகக் கொள்ளப்படும்.
- ★ கணினி அறிவு உடையவராக இருத்தல் வேண்டும்.
- ★ வயதெல்லை 23-35 வயதுக்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

கணினி இயக்குநர்

- ★ க. பொ. த (உயரதரம்) சித்தியடைந்திருக்க வேண்டும்.
- ★ MS OFFICE நிறைவு செய்தவராக இருத்தல் வேண்டும்.
- ★ வயதெல்லை 21-30 வயதுக்கு உட்பட்டவராக இருத்தல் வேண்டும்.

மேற்குறிப்பிட்ட பதவிகளுக்கு விண்ணப்பிப்போர் தங்களது சுயவிவரக்கோவை, அடையாள அட்டை போட்டோப்பிரதி, சான்றிதழ்களின் போட்டோப்பிரதி ஆகியவற்றை இணைத்து 08.01.2013 இக்கு முன்னாதாக கீழ்க் குறிப்பிட்ட முகவரிக்கு விண்ணப்பிக்கவும்.

**விளம்பர இலக்கம் 4428, மே/ப உதயன் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

# பல்கலையின் பட்டமளிப்பு அடுத்த மாதம்

அம்பாறை,ஜன.3

தென்கிழக்குப் பல் கலைக்ழகத்தின் எட்டாவது பட்டமளிப்பு விழா எதிர் வரும் பெப்ரவரி மாதம் 6 ஆம் திகதி நடைபெறவுள் ளது.

இந்தப் பட்டமளிப்பு விழா பல்கலைக்கழக துணைவேந்தர் எஸ்.எம்.முஹம்மட் இஸ்மாயில் தலைமையில், தென்கிழக்குப் பல்கலைக்கழக ஒலுவில் வளாகத்தில் நடைபெறவுள்ளது.

இந்தப் பட்டமளிப்பு விழா வில் பல்கலைக்கழக 346 உள்வாரிப் பட்டதாரிகளும், 170 வெளிவாரிப் பட்டதாரிகளும் பட்டம் பெறவுள்ளனர்.

இந்தப் பட்டமளிப்பு விழாவில் உள்வாரியாக கலைமாணி, வணிகமாணி, வியாபாரத் துறை நிர்வாகமாணி, விஞ்ஞானமாணி பட்டங்களும், வெளிவாரியாக கலைமாணி, வணிகமாணி, வியாபாரத்துறை நிர்வாக மாணிப் பட்டங்களும் வழங்கப்படவுள்ளன என்று பல்கலைக்கழகப் பதிவாளர் எச்.அப்துல்சாத்தார் தெரிவித்தார்.

ஆரம்ப காலம் முதல் கொழும்பில் நடைபெற்றுவந்த தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாக்கள், இந்த ஆண்டு இரண்டாவது தடவ்வயாக பல்கலைக்கழக ஒலுவில் வளா கத்தில் நடைபெறவிருப்பது குறிப்பிடத்தக்கது. (ச-30)


**தைப்பொங்கலை முன்னிட்டு விசேட விலைக் கழிவில் கணினிகள்**

HP 3.0 Full Set - 24750/=
INTEL D/Core - 29750/=
Compaq CQ43 Laptop - 51500/=
Hp g6 Laptop - 60500/=

3 வருட உத்தரவாதம்

மற்றும் பல்வேறுபட்ட விலைகளில்
இச்சலுகை 14 ஆம் திகதி வரை மட்டுமே
இலவசம் / Free
WEB CAMARA / 8 GB PEN DRIVE / BAG / HEAD PHONE



ST. ANTONY'S
187, K.K.S ROAD, JAFFNA.
0212224865 / 0750698608
(14 ஆவது வருட சேவையில்)



**Room தேவை**

யாழ். பேருந்து நிலையத்திலிருந்து 2.5 km தூரத்திற்குள் அடிப்படை வசதிகள் கொண்ட தனி Room தேவை.
தொடர்புகளுக்கு: 0758637863
(27541)(3)

**கடை வாடகைக்கு**

மனோகரா தியேட்டருக்கும் சிவன் கோயிலுக்கும் இடைப்பட்ட பகுதியில் கடை வாடகைக்கு உண்டு.
தொடர்பு: 0779616895

**உதவி ஆசிரியை தேவை**

ஓரளவு ஆங்கில அறிவு கொண்ட கர்நாடக இசை ஆசிரியை தேவைப்படுகின்றார். க.பொ.த (சாதாரணம்) படித்த மாணவ, மாணவிகளும் விண்ணப்பிக்கலாம்.
தொடர்பு: 0784861254

**கணினி திருத்தம் Computer Repair**

உங்கள் கணினிகள் பழுதடைந்து விட்டனவா? உடன் உங்கள் வீடுகளுக்கே வந்து திருத்தி தருகின்றோம். அழையுங்கள் -0779086737
GUNAA BEST PC 52, HOSPITAL ROAD, JAFFNA.

**பெண்பணியாளர் தேவை**

(யாழ். நகரில்) தனியார் கல்விநிலையம் ஒன்றுக்கு Cleark ஆக பணி புரிவதற்கு ஒருவர் தேவை. நாள் ஒன்றுக்கு 5 மணிநேரம். சம்பளம் 4,000/=
தொடர்பு: 0776381371

**வேலை ஆள்கள் தேவை**

இயக்கச்சியில் உள்ள பிரபல தோட்டம் ஒன்றுக்கு சமையல் வேலைக்கு ஆள்கள் தேவை. தகுந்த சம்பளம் மற்றும் தங்குமிட வசதியும் உண்டு.
தொடர்பு:- 0773361750
(27448)(6.2.7)

**ஆங்கில வகுப்புகள்**

தரம் 3 முதல் A/L வரையான மாணவர்களுக்கு ஆங்கில வகுப்பும் Spoken With Grammar கற்க விரும்புபவர்களுக்கு (வயது கட்டுப்பாடு கிடையாது) வீடுகளில் வந்து கற்பிக்கப்படும்.(நீங்கள் வந்து எமது நிறுவனத்தில் கற்கும் வாய்ப்பும் உண்டு.
(அனுமதிகள் மட்டுப்படுத்தப்பட்டவை முந்தவும்).
தொடர்பு: K.K.S வீதி, யாழ்ப்பாணம். 0771617485.

**வீடு வாடகைக்கு**

பஸ் நிலையத்துக்கும் யாழ். வைத்திய சாலைக்கும் மிக அண்மையில் வாகன
தொடர்பு: 077 5820084
0215672024.
(27450)(6.7.4)


## கண்ணீர் அஞ்சலி



எமது சக உத்தியோகத்தர் R.S.சேவியர் அவர்களின் அன்புத்தாயார்

நீற்றா யஸ்மின் சேவியர்(மலர்)

பிரிவால் துயருற்றிருக்கும், குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதுடன் அவர்களின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

வேலைப்பகுதி,
யாழ்.மாநகர சபை உத்தியோகத்தர்கள், ஊழியர்கள்.


## E.U.T (PVT)Ltd.
### பணியாளர் வெற்றிடங்கள்

வரையறுக்கப்பட்ட தனியார் நிறுவனத்துக்கு தகுதிவாய்ந்த கீழ்வரும் பணியாளர்கள் தேவை.

1. வெல்டர் (Welder)
2. வெல்டர் உதவியாளர்கள்
3. பெயின்ரர் (Painter)
4. பெயின்ரர் உதவியாளர்கள்
5. டிசையினர் (பக்க வடிவமைப்பாளர்)
6. பான்டிக்கபேட் வேலை அனுபவமுள்ளவர்கள்
7. தொழிற்சாலைப் பணியாளர்கள் (ஆண், பெண்)

நேர்முகத்தேர்வு: - 05.01.2013 சனிக்கிழமை காலை 9.30 மணி

01. E.U.T
சுன்னாகம் கிழக்கு, சுன்னாகம்.
T.P:- 0212240110

02.கிளை அலுவலகம் 09.01.2013 புதன் கிழமை காலை 9.30 மணி.
E.U.T
இல.19, விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ் போதனா வைத்தியசாலை பின் புறம்)
T.P:- 0217200850

(சி/5228)(3.14)


## மனமுவந்து வாழ்த்துகின்றோம்

### செல்வி பேரின்பநாயகி கந்தையா



யா/ மூளாய் சைவப்பிரகாச வித்தியாலயத்தில் 29 வருடங்கள் ஆசிரியையாகப் பணி புரிந்து 19.12.2012 உடன் ஓய்வு பெற்ற செல்வி பேரின்பநாயகி கந்தையா அவர்கள் ஆரோக்கிய வாழ்வு பெற இறைவனை வேண்டி ஆசிரிய சேவைக்கு நன்றி கூறி வாழ்த்துகிறோம்.

யா/ மூளாய் சைவப்பிரகாச வித்தியாலய சமூகம்.

(C/5215)(6.7.11)

**யா/ தீவக கத்தோலிக்க இளையோர் மன்றம் அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு முடிவுகள் பரிசு பெற்றோர் விபரம்.**

| | |
|---|---|
| 1 ஆம் பரிசு | இல. - 3851 |
| 2 ஆம் பரிசு | இல. - 1516 |
| 3 ஆம் பரிசு | இல. - 635 |

மற்றும் 5 ஆறுதல் பரிசில்களுக்கான இலக்கங்கள்
1067, 463, 476, 3497, 2351

மேற்படி பரிசில்களை நாரந்தனை புனித பேதுரு பாவிலு ஆலயத்தில் பெற்றுக் கொள்ளவும்.

இளையோர் ஒன்றியம்
வண. பிதா. ஞா. பீற்றர்
நாரந்தனை.

(27583)(3.8)

## 7 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 09.01.1924

மறைவு 21.12.2005



**சீனிவாசகம் பரமேஸ்வரன்**

(ஓய்வு பெற்ற பொது சுகாதார பரிசோதக மேற்பார்வையாளர் S.P.H.I) திதி:- ஷஷ்டி

எத்தனை உறவுகள் எம்முடன் இருந்தாலும்
எம் தெய்வமே உங்களுக்கு இணையாகுமா?
வையகத்தில் வாழ்வாங்கு வாழ வழி வகுத்த எம் அன்புத்
தெய்வமே என்றும் உங்கள் நினைவு எம்மை விட்டு நீங்காது

நவக்கிரி, புத்தூர். - குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



# அரசு - பிரதம நீதியரசர் மோதல் நாட்டை எங்கு இட்டுச் செல்லும்...?

அண்மைக் காலமாக முழு நாட்டையுமே பரபரப்புக்கு உள்ளாக்கிவரும் அரசு - பிரதம நீதியரசர் ஆகிய இருதரப்புக்களுக்கும் இடையேயான மோதல் நிலை, இழுபறிநிலை நாட்டையும் நாட்டு மக்களையும் எங்கு இட்டுச் செல்லப்போகிறது என்ற கேள்வி, இன்றுவரை விடை பேதுமின்றித் தொடர்கிறது.

பிரதம நீதியரசர் ஷிராணி பண்டாரநாயக்கவின் 'றிட்' மனு தொடர்பான மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் முக்கிய அமர்வு மிகவும் பரபரப்பான சூழ்நிலையில் இன்று இடம்பெறுகிறது. நீதிச்சேவைக்கும் சட்டவாக்கத்துக்கும் (நாடாளுமன்றம்) இடையிலான பலப்பரீட்சையில் ஒரு முக்கிய கட்டமாக இன்றைய அமர்வு நோக்கப்படுகிறது.

இலங்கை அரசமைப்பில் பெரும் நெருக்கடியை ஏற்படுத்தி உள்ள இப்பிரச்சினையில் சுமுகமான தீர்வு காண்பதற்கான சகல வாய்ப்புக்களும் ஏற்கனவே அற்றுப்போய்விட்டன. அரசு பெரும்பான்மைப் பலத்தைக் கொண்டுள்ள நாடாளுமன்றத்தில் பிரதம நீதியரசருக்கு எதிரான குற்றவியல் பிரேரணையை நிறைவேற்றவும், பிரதம நீதியரசரை அவரது பதவியிலிருந்து அகற்றி விடவும் அரசதரப்பு உறுதியுடன் செயற்படுவது தெட்டத்தெளிவாகப் புலப்படுகிறது.

கடந்த டிசெம்பர் மாதம் 19ஆம் திகதி, பிரதம நீதியரசர் மேன்முறையீட்டு நீதிமன்றில் சமர்ப்பித்த 'றிட்' மனுவில் எதிரணி உறுப்பினர்கள் நால்வர் தெரிவுக்குழுவிலிருந்து விலகிக்கொண்ட நிலையில் தெரிவுக்குழு மேற்கொண்ட தீர்மானத்துக்கு ஆட்சேபம் தெரிவித்திருந்தார். தெரிவுக்குழுவின் நடவடிக்கை, நாடாளுமன்ற நிலையியல் சட்ட ஒழுங்குக்கு விரோதமானது எனவும் அவர் தமது மனுவில் சுட்டிக்காட்டியிருந்தார். இதனை விசாரணை செய்த மேன்முறையீட்டு நீதிமன்ற நீதியரசர்கள் எஸ்.சிறிஸ்கந்தராஜா(தலைவர்), அனில் குணரத்ன, ஏ.டபிள்யூ.ஏ. சலாம் ஆகியோரடங்கிய ஆயம் நாடாளுமன்ற சபாநாயகருக்கும், தெரிவுக்குழு உறுப்பினர்கள் பதினொரு பேருக்கும், மற்றும் நாடாளுமன்றச் செயலாளர் நாயகத்துக்கும் இன்று மூன்றாம் திகதி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு அழைப்பாணை அனுப்பியிருந்தது.

நாடாளுமன்றச் செயற்பாடுகளில் வேறு எந்த அமைப்பும் தலையிட முடியாது என்ற சபாநாயகரின் முன்னைய தீர்ப்பொன்றுக்கு இணங்க அரசதரப்பு உறுப்பினர்கள் மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் அழைப்பாணையை ஏற்றுக் கொள்வதில்லை என்று முடிவு செய்துவிட்டனர். எதிரணியைச் சேர்ந்த ஏனைய நான்கு உறுப்பினர்களில் ஐ.தே.க. உறுப்பினர்கள் இருவரும் கூட, தாமும் அழைப்பாணையை ஏற்கப்போவதில்லை என்று நேற்று அறிவித்துள்ளனர். எஞ்சிய இருவரில் ஒருவர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உறுப்பினர். மற்றவர் ஜே.வி.பி. உறுப்பினர். கூட்டமைப்பு நீதிமன்ற அழைப்பாணையை ஏற்கும் என்கிறார் நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன். கூட்டமைப்பு சார்பாக அவர்தான் ஆஜராக உள்ளார். ஜே.வி.பியும் நீதிமன்ற அழைப்பாணையை ஏற்க முடிவு செய்து விட்டது. இரு கட்சிகளும் எடுத்த முடிவு மிகவும் துணிச்சலானது எனக் கொள்ளலாம்.

இந்தப் பிரச்சினையில் நீதிச்சேவை ஒன்றுபட்டு நிற்கிறது. அழைப்பாணையை ஏற்பதா இல்லையா என்பதில் தெரிவுக்குழு பிளவுண்டு விட்டது. இன்று மேன்முறையீட்டு நீதிமன்றம் கூடும்போது சமுகமளிக்காத தெரிவுக்குழு உறுப்பினர்கள் தொடர்பாக மேன்முறையீட்டு நீதிமன்றம் என்ன நடவடிக்கை எடுக்கப்போகிறது என்பது ஆவலுடன் எதிர்பார்க்கப்படுகிறது. அரசமைப்புக்கு உட்பட்டே செயற்படுவதாக இரு தரப்பினரும் தெரிவிக்கின்றனர். அரசமைப்பில் உள்ள நீதிச்சேவைக்கான அதிகாரங்கள் மிகவும் பரந்தவை. ஆகவே, சட்டவாக்கத்துக்கோ நிறைவேற்று அதிகாரத்துக்கோ விட்டுக்கொடுக்க இயலாது என்பது நீதிச்சேவை தரப்பின் நிலைப்பாடு. அரசமைப்பில் நாடாளுமன்றமே அதி உயர் பீடம். அதனைக் கட்டுப்படுத்தும் எந்த ஒரு நடவடிக்கையும் செல்லுபடியற்றது, சட்டபூர்வமற்றது என்கிறார் சபாநாயகர்.

அரசமைப்பின் பிரகாரம், பிரதம நீதியரசருக்கு எதிராக குற்றவியல் பிரேரணை கொண்டுவருவதற்கு ஏற்பாடுகள் உள்ளன. அரச தரப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட, போதிய சட்ட அறிவற்ற தெரிவுக்குழு விசாரணை செய்ததுதான் இன்றைய நெருக்கடிகளுக்கு எல்லாம் பிரதான காரணம் எனவும் ஒருவகையில் கருத முடியும்.

அரசில் அங்கம் வகிக்கும் மூன்று இடதுசாரிக் கட்சிகளின் தலைவர்களும் தெரிவித்தமை போன்று ஓய்வுபெற்ற நீதியரசர்கள் அல்லது திறமைவாய்ந்த சட்டத்துறை வல்லுநர்கள் மூலம் பிரதம நீதியரசரை விசாரித்திருக்கலாம். இன்னமும் கூட இதற்கான வாய்ப்பு உள்ளது. நாடாளுமன்றக் கூட்டத் தொடரை இடை நிறுத்தி வைக்கும்போது முடிவுக்கு வராத சகல செயற்பாடுகளும் செல்லுபடியற்றதாகிவிடும். அதன் பின்பு புதிதாக ஒருதெரிவுக் குழுவை நியமிக்கமுடியும். இப்பிரச்சினையில் ஐ.நா. உட்பட சர்வதேச நாடுகள் கூர்மையான கவனம் செலுத்தி வருவதால், இவ்விடயத்தில் அரசு மிகவும் அவதானமாகச் செயற்பட்டு இன்றைய அரசமைப்பு நெருக்கடிக்குத் தீர்வு காணவேண்டிய தேவை எழுந்துள்ளது. இதனால் இவ்விடயத்தில் சர்வதேச சட்டமன்றங்களின் தலையீட்டையும் தவிர்த்துக்கொள்ள இயலும்.

மாறாக, அரசு இவ் விடயத்தில் சற்றேனும் விட்டுக்கொடுக்காமல், இறங்கிவராமல் தான் நினைப்பதைச் சாதித்தே ஆவது என்ற போக்கில் செயற்பட விளையுமானால், சர்வதேச சட்ட மன்றங்கள் தலையிடும் நிலை உருவாகவும் கூடும்.

# சட்டவிரோத மணல் அகழ்வால் நெல்வயல்களுக்குள் உவர்நீர்

## வரணி விவசாயிகள் பாதிப்பு

தென்மராட்சி, ஜன.3

வரணி நாவற்காடு, வெங்கராஜன் வெளிப்பகுதியில் உள்ள தனியார் காணியில் சட்டவிரோத மணல் அகழ்வால் சதுப்புநில நீர் நெல்வயல்களுக்குள் புகுந்து நெற்பயிர்கள் உவர்நீரினால் பாதிப்படைந்துள்ளதாக அந்தப் பகுதி நெற்செய்கையாளர்கள் தெரிவித்தனர்.

இந்தப் பகுதியில் உள்ள தனியார் காணிகளில் தினமும் பெருமளவு வாகனங்களில் சட்டவிரோதமாக மணல் ஏற்றி கொடிகாமம்- பருத்தித்துறை வீதியூடாக இரவு பகலாகக் கொண்டு செல்லப்படுகின்றன.

சட்டவிரோதமாக மணல் ஏற்றுவதைத் தடுக்கச் செல்லும் காணி உரிமையாளர்களும் பொது மக்களும் வாகனங்களில் வருவோரால் ஆயுதங்களைக் காட்டி பயமுறுத்தித் துரத்தப்படுகின்றனர்.

இது தொடர்பாக பல தடவைகள் கொடிகாமம் பொலிஸ் நிலையத்தில் முறையிட்டும் பயன்கிடைக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

சட்டவிரோத மணல் அகழ்வால் சதுப்புநில உவர்நீர், வயல்களுக்குள் புகுவதால் நெல் வயல்களில் காணப்பட்ட பயிர்கள் அழிவடைவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இதனைத் தடுக்க வரணி மகாவித்தியாலயத்தின் முன்பாக உள்ள சந்தியில் நிரந்தரப் பொலிஸ் சாவடி அமைக்குமாறு பொலிஸ் உயர் அதிகாரிகளை நெற்செய்கையாளர்கள் கேட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது. (த-9)

# நாடளாவிய ரீதியில் குறும்பட ஆக்கப் போட்டி

## கலாசாரத் திணைக்களம் நடத்துகிறது

யாழ்ப்பாணம்,ஜன.3

கலாசார அலுவல்கள் திணைக்களம் 'ரூப 2012' என்னும் குறும்பட ஆக்கப் போட்டித் தொடரினை நாடளாவிய ரீதியில் நடைமுறைப் படுத்தவுள்ளது.

இலங்கை மாற்று சினிமா கழகத்துடன் இணைந்து மேற்கொள்ளவுள்ள ஆக்கப் போட்டிகள் கலாசார அதிகார சபைகளின் கருத்திட்டமாக மேற்கொள்ளப் படவுள்ளது.

நிகழ்காலத்தில் வேகமாக பிரபல்யமடைந்து வரும் ஒரு கலைப் பிரிவாகக் கருதப்படும் குறும்பட ஆக்கத்துக்கு பயிலுநர்களை அனுமதிப்பதற்கும் மற்றும் இந்தத் துறையில் ஈடுபட்டிருக்கும் கலைஞர்களை, புதிய ஆக்கவாளர்களை அறிந்து கொள்வதற்கும் மதிப்பிடுவதற்கும் இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகிறது.

நாடு முழுவதும் பரந்திருக்கும் திறமைகளுடன் கூடிய இளைய திரைப்படப் படைப்பாளர்களின் ஆக்கபூர்வமான படைப்புக்களின் திறமைகளை தேசிய மட்டத்துக்கு கொண்டுவருதல் மற்றும் மதிப்பிடுதல் என்னும் தொலை நோக்குடன் திட்டம் மேற்கொள்ளப் படவுள்ளது.

பாடசாலை மாணவர்கள் மற்றும் திறந்த பிரிவுகளிடையே ஆக்கத் தொடர் போட்டிகள் நடத்தப் படவுள்ளன. விவரணத் திரைப் படங்களாகவும், எடுத்துரைப்பு படங்களாகவும் இருக்க வேண்டும்.

இது தொடர்பான அறிவுறுத்தல்களும் விண்ணப்பப் படிவங்களும் அந்தந்த பிரதேச செயலக கலாசார உத்தியோகத்தர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

படிவத்தினைப் பெற்று எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் (15/1) தயாரிக்கப்பட்ட படத்தினை இரண்டு டிவிடிகளில் பிரதி செய்து இலங்கை மாற்று சினிமா கழகம், தபாற்பெட்டி இல.2009, கொழும்பு என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும்.

5 பேர் கொண்ட விசேட ஜூரர் சபையினால் தெரிவு செய்யப்படும் ஆக்கங்களிலிருந்து சிறந்த இயக்குநர், சிறந்த திரைப்பட ஆக்கம், சிறந்த படப்பிடிப்பு, சிறந்த நடிகர், சிறந்த நடிகை ஆகிய பிரிவுகளாக தெரிவு செய்யப்பட்டு விருதுகள் வழங்கப்படவுள்ளதுடன் பணப் பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்படுமென கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் விஜித ஹேரத் அறிவித்துள்ளார். (த-9)

# சாவற்கட்டு சந்தையை அபிவிருத்தி செய்யுங்கள்

வலி.தென்மேற்கு, ஜன.3

இடநெருக்கடி மத்தியில் சிறிய கட்டடத்தில் இயங்கி வரும் சாவற்கட்டு சந்தையை வியாபாரிகளினதும் பாவனையாளர்களினதும் நலன்கருதி அபிவிருத்தி செய்யுமாறு வலி.தென்மேற்கு பிரதேச சபை தவிசாளரைக் கோரியுள்ள பிரதேச சபை உறுப்பினர் எஸ்.பரமகுரு, சந்தை அபிவிருத்தி செய்யப்படுவதனால் பிரதேச சபையின் வருமானமும் அதிகரிக்கும் என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

வலி.தென்மேற்கு பிரதேசத்தில் சாவற்கட்டு கிராமத்தில் இயங்கி வரும் மேற்படி சந்தையில் கடல் உணவு, மரக்கறி போன்றவை விற்பனை செய்யப்படுகின்றன.

அடிப்படை வசதிகள் இன்றி சிறிய கட்டடத்தில் இயங்கிவரும் இந்தச் சந்தையில் வியாபாரிகள் நெருக்கமாக இருப்பதனால் சந்தைக் கட்டடத்தில் பொது மக்கள் நடமாட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. இதனால் பொது மக்கள் மட்டுமல்ல வியாபாரிகளும் அசௌகரியங்களுக்கு உள்ளாகிறார்கள்.

கடந்த ஆண்டு வரவு - செலவுத் திட்டத்தில் சந்தை அபிவிருத்திக்கென சிறுதொகைப் பணம் ஒதுக்கப்பட்டிருந்தது. 2013 ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டத்தில் சந்தை அபிவிருத்திக்கான அடையாளமாகவும் நிதி ஒதுக்கப்படவில்லை. இந்தச் சந்தை அபிவிருத்தி செய்யப்படுமானால் வருமானமும் அதிகரிக்க வாய்ப்புண்டு. எனவே இந்தச் சந்தையை விரைவாக அபிவிருத்தி செய்யுமாறு தலைவரிடம் உறுப்பினர் எஸ்.பரமகுரு கோரியுள்ளார். (த-115)

# பொதுசன மாதாந்த உதவிப் பணம் தபாலகங்களுக்கு

தென்மராட்சி,ஜன.3

தென்மராட்சி பிரதேச பொதுசன மாதாந்த உதவிப் பணம், நோய்களுக்கான உதவிப் பணம் ஆகியவை பெறுவோர்களுக்கு ஜனவரி மாதக் கொடுப்பனவுகள் அந்தந்த தபால் அலுவலகங்களுக்கு பிரதேச சமூக சேவைகள் பிரிவினரால் நேற்று புதன்கிழமை அனுப்பி வைக்கப்பட்டது.

இந்தக் கொடுப்பனவினை எதிர்வரும் 15 ஆம் திகதிக்கு முன்னர் பெற்றுக் கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (த-9)

# தீவகச் சங்கங்களுக்கு விரைவில் கிளைக் குழு

யாழ்ப்பாணம்,ஜன.3

புங்குடுதீவு-நயினாதீவு, ஊர்காவற்றுறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களுக்கு விரைவில் கிளைக்குழுத் தேர்தல் நடத்தப்பட்டுப் புதிய இயக்குநர் சபைகள் தெரிவுசெய்யப்படவுள்ளன.

இதற்கான ஆரம்பகட்ட ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக யாழ்.மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் வி.கே.அருந்தவநாதன் தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்த இரண்டு சங்கங்களுக்கும் ஜனவரி மாத இறுதியில் கிளைக்குழு தெரிவுக்கான தேர்தல்கள் நடத்தப்படவுள்ளன. இதற்காக வாக்காளர் பட்டியல்களைச் சீர்செய்யும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

முதலில் நயினாதீவு-புங்குடுதீவு பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்துக்கும், பின்னர் ஊர்காவற்றுறை பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்துக்கும் இந்தத் தேர்தல் நடத்தப்பட்டு புதிய இயக்குநர் சபைகள் தெரிவுசெய்யப்படும்.-என்றார். (த-17)

# கருத்தரங்கு ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம்,ஜன.3

தென்னாசியாவில் நிலையான அபிவிருத்தியை அடைவது தொடர்பாக சமூக அபிவிருத்தி இயக்கங்களது படிப்பினைகளைக் கொண்டதான உத்தேச கலந்துரையாடல் ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

நாளை நடைபெறவிருந்த உத்தேச கருத்தரங்கில் பங்கேற்கவிருந்த பிரதான பிரமுகர்கள் கொழும்பில் நடைபெறவுள்ள முக்கிய மாநாடு ஒன்றுக்குச் செல்லவிருப்பதால் நிகழ்வை ஒத்திவைக்க நேர்ந்துள்ளதாக ஏற்பாட்டாளர்கள் தெரிவித்தனர். (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீடுகள் பற்றாக்குறை

கிளிநொச்சி, ஜன.3

கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட முரசுமோட்டைக் கிராமத்தில் வசிக்கும் 84குடும்பங்களுக்கு வீடுகளை அமைக்க வேண்டிய தேவை உள்ளதாக கிராம அலுவலரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முரசுமோட்டை கிராம அலுவலர் பிரிவில் தற்போது 284 குடும்பங்கள் வசித்து வருகின்றன. கடந்த ஆண்டு நேர்ப் திட்டத்தின் கீழ் 80 வீடுகள் கட்டி முடிக்கப்பட்டுள்ளன. யூ.என்.கபிராட் நிறுவனத்தினால் 20 வீடுகள் புனரமைக்கப்பட்டுள்ளன.

தற்போது 84 குடும்பங்களுக்கு உடனடியாக வீடுகளை அமைக்க வேண்டியுள்ளது. கடந்த 18 ஆம் திகதி கிளிநொச்சி கண்டாவளைப் பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் மேற்படி தகவல்களை முரசுமோட்டை கிராம அலுவலர் தெரிவித்துள்ளார். (க-6)

# மன்னார் குஞ்சுக்குளம் கிராமத்தில் நடமாடும் மருத்துவ சேவை



மன்னார்,ஜன.3

மழை மற்றும் வெள்ளத்தால் மோசமாகப் பாதிக்கப்பட்ட மன்னார் குஞ்சுக்குளம் கிராமத்தில் நடமாடும் மருத்துவ சேவை இடம்பெற்றுள்ளது.

அண்மையில் பெய்த கடும் மழை மற்றும் வெள்ளப் பெருக்குக் காரணமாக மடு உதவி அரச அதிபர் பிரிவில் அமைந்துள்ள குஞ்சுக்குளம் கிராமம் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளதுடன் இந்தக் கிராமத்துக்குச் செல்லும் பிரதான வீதிகள் அனைத்தும் வெள்ளத்தில் மூழ்கியிருந்தன.

இதனால் இங்கு வசிக்கும் மக்கள் தமக்கான மருத்துவ வசதிகளைப் பெற முடியாத நிலையில் இருந்தனர்.

இந்த நிலையில் மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் என்.பரீட் விடுத்த வேண்டுகோளுக்கு அமைவாக முருங்கன் வைத்திய அதிகாரி ஒஸ்மன் சால்ஸ் தலைமையிலான குழுவினர் கடந்த திங்கட்கிழமை அங்கு சென்று நடமாடும் மருத்துவ சேவையை வழங்கினர்.

சுமார் 100 க்கும் மேற்பட்ட கிராம மக்கள் இதில் கலந்து கொண்டு பயன்பெற்றமை குறிப்பிடத்தக்கது. (க-12)

# மோசமாகப் பாதிக்கப்பட்ட நிலையில் துணுக்காய் பிரதேச வீதிகள்

கிளிநொச்சி, ஜன.3

மழை வெள்ளம் காரணமாக துணுக்காய்ப் பிரதேச செயலர் பிரிவிலுள்ள அனைத்து வீதிகளும் குன்றும் குழியுமாக மாறியுள்ளதாக கிராம அபிவிருத்திச் சங்கங்களின் பிரதிநிதிகளால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் தொடக்கம் துணுக்காயில் இருந்து ஐயன்கன்குளம் வழியாக புதுக்குடியிருப்பு வரை நடைபெறவிருந்த தனியார் போக்குவரத்து சேவை ஐயன்கன்குளம் பகுதியில் வீதியில் பெரும் குழிகள் உருவாகியுள்ளமையால் இடம்பெறமாட்டாதெனத் தெரிய வருகின்றது.

இதனால் பழைய முறிகண்டி புத்துவெட்டுவான், ஐயன்கன்குளம், தேறாங்கண்டல் மக்கள் தொடர்ச்சியாக போக்குவரத்து நெருக்கடியை எதிர்கொள்ள வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-18)

# ஆசிரியர்கள் பற்றாக்குறை கல்வியில் பெரும் பாதிப்பு

## துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர் கவலை

மாங்குளம்,ஜன.3

துணுக்காய் கல்வி வலயத்திலுள்ள பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவுவதால் மாணவர்களின் கல்வியில் பாதிப்புக்கள் உள்ளதாக துணுக்காய் வலயக் கல்விப் பணிப்பாளர்திருமதி மாலினி வெனிற்றன் தெரிவித்துள்ளார்.


குறிப்பாக ஆரம்பக் கல்வி, இடை நிலைக் கல்விக்கான ஆசிரியர் பற்றாக்குறை நிலவுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

**ஆசிரியர்களும், ஆங்கில பாடத்துக்கு 59 ஆசிரியர்களும், கணிதம் மற்றும் விஞ்ஞான பாடங்களுக்கு 23 ஆசிரியர்களும் தேவையாகவுள்ளனர்.**

ஆரம்பப் பிரிவுகளுக்கு 24 ஆசிரியர்களும், ஆங்கில பாடத்துக்கு 59 ஆசிரியர்களும், கணிதம் மற்றும் விஞ்ஞான பாடங்களுக்கு 23 ஆசிரியர்களும் தேவையாகவுள்ளனர்.

இந்த நிலையில் இரண்டு வருட ஒப்பந்த அடிப்படையில் தமது கடமைகளை நிறைவு செய்த 43 ஆசிரியர்களும், வருடாந்த இடமாற்றத்தின் போது 50 இக்கும் மேற்பட்ட ஆசிரியர்களும் இடமாற்றம் செய்யப்படவுள்ளனர்.

இது தொடர்பாக வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலர், வடமாகாண கல்விப் பணிப்பாளர் ஆகியோருக்கு அறிவிக்கப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். (க-422)



பலத்த மழை காரணமாக ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் அழிவடைந்த நிலையில் காணப்படும் வவுனியா நகரப் பகுதியிலுள்ள வயல் நிலங்கள். (க-402)

# நெல் வயல்களில் தொடர்ந்தும் வெள்ளம்

## அறுவடை அழுகும் அபாய நிலை

புதுக்குடியிருப்பு,ஜன.3

வெள்ள நீர் தேங்கி நிற்பதால் புதுக்குடியிருப்பு பரந்தன் வீதியின் அருகில் காணப்படும் வயல் நிலங்கள் உட்படப் பல ஏக்கர் கணக்கான நெற்பயிர்கள் அழிவடையக் கூடிய சூழ்நிலை காணப்படுகின்றது.

கடும் மழை காரணமாக கைவேலி, புதுக்குடியிருப்பு, மன்னாகண்டல், வசந்தபுரம், கெருடமடு, உடையார்கட்டு, கோம்பாவில், தேவிபரம் போன்ற பகுதிகளிலுள்ள வயல் நிலங்களில் வெள்ள நீர் தேங்கி நிற்கின்றது.

காலபோக நெற் செய்கையின் போது விதைக்கப்பட்டு முளைத்து தற்போது கதிர் வெளிவரக்கூடிய சூழ்நிலையில் காணப்பட்ட நெற்பயிர்களை மூடி வெள்ள நீர் தேங்கி நிற்கின்றது. இதனால் இந்தப் பகுதியிலுள்ள நெற்பயிர்கள் அனைத்தும் அழிவடையும் நிலையில் காணப்படுகின்றது. (த-400)

# இடம் மாறியது அலுவலகம்

வவுனியா ஆசிக்குளம் கிராம அலுவலர் அலுவலகம் இடமாற்றப்பட்டுள்ளது.

இதுவரை காலமும் இந்த அலுவலகம் ஆசிக்குளம் சிதம்பரபுர வீதியில் இயங்கி வந்தது. தற்போது வவுனியா கோமரசன்குளம் வீதியில் உள்ள தேவாலயத்துக்கு அருகில் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இந்தக் கிராம அலுவலர் பிரிவுக்குள் ஆசிக்குளம், சிதம்பரபுரம், கோமரசன்குளம், தரணிக்குளம், வேப்பங்குளம், கல்நாட்டியகுளம் ஆகிய கிராமங்கள் அடங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-421)

# சீரமைப்புப் பணிகள்

**பாடசாலை கட்டடத்தின் வர்ணப் பூச்சுகள் அழிந்த நிலையிலும் காணப்பட்டன.**

நீண்டகாலமாக பல குறைபாடுகளுடன் காணப்பட்ட கல்நாட்டிய குளம் அ.த.க.பாடசாலையின் வளாகம் தற்போது சீரமைக்கப்பட்டுள்ளதை அவதானிக்க முடிகின்றது.

நீண்ட காலமாக இந்தப் பாடசாலையின் சுற்று வேலிகள் சீரமைக்கப்படாததால் இரவு வேளைகளில் கால்நடைகள் இந்தப் பாடசாலை வளாகத்தில் தங்கி நின்று சுகாதாரச் சீர்கேடுகளை ஏற்படுத்தி வந்தன.

இதேபோன்று பாடசாலை கட்டடத்தின் வர்ணப் பூச்சுகள் அழிந்த நிலையிலும் காணப்பட்டன. தற்போது சுற்றுவேலிகள் அமைக்கப்பட்டு வர்ணப் பூச்சுக்களும் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-421)

# வவுனியாவில் விவேகானந்தரின் 180 ஆவது நினைவு விழா

வவுனியாவில் சுவாமி விவேகானந்தரின் 180 ஆவது ஆண்டு விழா சிறப்புற இடம்பெறுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

எதிர்வரும் 12 ஆம் திகதி காலை 8 மணிக்கு சுவாமி விவேகானந்தரின் திருவுருவப்படம் தாங்கிய ஊர்தி குடியிருப்பு சித்தி விநாயகர் ஆலயத்தில் இருந்து ஆரம்பமாகி பசார் வீதி வழியாகச் சென்று அங்கு அமைந்துள்ள விவேகானந்தரின் சிலைக்கு மாலை அணிவிக்கும் நிகழ்வு இடம்பெறும்.

தொடர்ந்து வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் மண்டபத்தில் முற்பகல் 10 மணிக்கு சிறப்புரைகளும், கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

எனவே அன்றைய தினம் ஊர்தி வரும் வழியில் வீடுகளுக்கு முன்பாகவும், நிறுவனங்களுக்கு முன்பாகவும் அலங்காரம் செய்து பூரண கும்பம் வைத்து நந்திக் கொடியினையும் ஏற்றி வைக்குமாறு விழாக் குழுவினர் கேட்டுக் கொண்டுள்ளனர். (க-421)

# கண்ணிவெடி அகற்றும் பணியாளருக்குப் பயிற்சி

வவுனியா, ஜன.3

டாஸ் கண்ணி வெடி அகற்றும் நிறுவனத்தின் பயிற்சியை நிறைவு செய்து கொண்ட புதிய அணியினருக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு கிளிநொச்சி பரந்தன் பகுதியில் இடம்பெற்றது.



கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் கண்ணிவெடிகளை அகற்றும் பணிகளை மேற்கொண்டு வரும் டாஸ் கண்ணி வெடி அகற்றும் பிரிவில் ஆஸ்திரேலிய அரசின் நிதியுதவியுடன் புதிதாக இணைத்துக் கொள்ளபட்ட ஆண் அணியினருக்கான பயிற்சி நிறைவும், தகைமைச் சான்றிதழ் வழங்கும் நிகழ்வும் கடந்த வாரம் இடம்பெற்றது.

மேற்படி கண்ணிவெடி அகற்றும் பிரிவினரால் ஆஸ்திரேலிய அரசினதும் ஜப்பானிய அரசினதும் நிதியுதவியுடன் ஆனையிறவு, தட்டுவன்கொட்டி, கண்டாவளை, பெரியகுளம் ஆகிய பகுதிகளிலும் முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ள புதுக்குடியிருப்புப் பிரதேசத்தின் வேறு இடங்களிலும் கண்ணி வெடி அகற்றும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-6)

# கொள்கைக்கு முரணான வகையில் தரம் -1 இல் மாணவர் அனுமதி

## 1000 பாடசாலைத் திட்டம் கேள்விக் குறியில்

வவுனியா, ஜன.3

வவுனியா தெற்கு கல்வி வலயத்தில் 1000 பாடசாலைகளை அபிவிருத்தி செய்யும் திட்டத்தில் உள்வாங்கப்பட்ட பாடசாலைகளில் தொடர்ந்தும் தரம் 1 இல் மாணவர்கள் இணைத்துக் கொள்ளப்படுவதாகத் தெரிய வருகின்றது.

அரச கொள்கை திட்டத்தின்படி 1000 பாடசாலைத் திட்டத்தில் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் தரம் 6 தொடக்கமே மாணவர்களை உள்வாங்கிக் கொள்ள முடியும். அத்துடன் ஆரம்பக் கல்வி அயலில் உள்ள ஆரம்ப பாடசாலைகளிலேயே இடம்பெற வேண்டும். ஆனால் இதனை மீறி வவுனியா தெற்கு கல்வி வலயத்தில் இத்தகைய பாடசாலைகளில் தரம் 1 வகுப்பில் மாணவர்கள் தொடர்ந்தும் அனுமதிக்கப்படுவது குறித்து ஆரம்ப பாடசாலைகளின் அதிபர்கள் விசனம் தெரிவிக்கின்றனர்.

இதனால் கிராமங்களிலுள்ள சிறிய ஆரம்ப பாடசாலைகளை மூட வேண்டிய நிலை ஏற்படும் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் 50 இக்கும் குறைந்த மாணவர் எண்ணிக்கையுள்ள பாடசாலைகளை அபிவிருத்தி செய்யும் அரசின் கொள்கைத் திட்டம் கேள்விக் குறியாகியுள்ளதாகவும் ஊட்டல் பாடசாலை அதிபர்கள் கவலை தெரிவிக்கின்றனர். (க-402)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# பால் உற்பத்தியை யாழில் அதிகரிப்பதற்குத் திட்டம்

## பண்ணையாளர்களுக்குப் புல் துண்டங்கள்

யாழ்ப்பாணம்,ஜன.3

யாழ்.மாவட்டத்தில் பால் உற்பத்தியை அதிகரிக்கும் பொருட்டும், பாலுக்கான உற்பத்திச் செலவை குறைக்கும் முகமாகவும் பண்ணையாளர்களுக்கு புல் துண்டங்களை வழங்கி, புல் உற்பத்தியை அதிகரிக்கும் வேலைத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாக விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களப் பிரதிப் பணிப்பாளர் திருமதி வி.அமிர்தலிங்கம் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

யாழ்.மாவட்டத்தில் பால் உற்பத்தியாளர்கள் மாட்டுக்கான தீவனங்களைப் பணத்துக்கு கொள்வனவு செய்து பயன்படுத்துவதால் பாலுக்கான உற்பத்திச் செலவு அதிகமாகக் காணப் படுகின்றது. பால் உற்பத்தியை அதிகரிப்பதற்காக விலங்கு உற்பத்தி மற்றும் சுகாதார திணைக்களத்தால் பல்வேறு திட்டங்கள்முன்னெடுக்கப்பட்டபோதும் பால் உற்பத்திச் செலவை குறைக்க முடியவில்லை.

இதற்குத் தீர்வாக மாட்டுத் தீவனத்துக்கான செலவைக் குறைப்பதற்காகப் பண்ணையாளர்களுக்குப் புல் துண்டங்கள் வழங்கும் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது.

இதுவரையில் திணைக்களத்தினால் ஒரு லட்சம் புல் துண்டங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன. மேலும் புல் உற்பத்தியை அதிகரிக்கும் பொருட்டுச் சிறப்பான புல் செய்கையாளருக்குத் திணைக்களத்தினால் நீர் இறைக்கும் இயந்திரமும் வழங்கப்படவுள்ளது.

புல் உற்பத்தி அதிகரிப்பதன் மூலம் சகலரும் பால் உற்பத்தியை மிகக் குறைந்த செலவுடன் மேற்கொள்ளக் கூடியதாக அமைவதுடன் பாலுற்பத்தியில் தன்னிறைவு இலக்காக கொண்டே செயற்படுத் தப்பட்டு வருகின்றது.

புல் துண்டங்கள் தேவையான எவரும் திருநெல்வேலியிலுள்ள நமது அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு பதிவை மேற் கொண்டால் பெற்றுக் கொடுக்கலாம்- என்றார். (த-5)

# அல்லைப்பிட்டி றோ.க நேற்று மீள ஆரம்பம்



யாழ்ப்பாணம்,ஜன.03

அல்லைப்பிட்டியின் முதலாவது பாடசாலையான றோ.க. பாடசாலை மீண்டும் நேற்று புதன்கிழமை ஆரம்பிக்கப்பட்டது.

எனினும் பாடசாலை உத்தியோகபூர்வமாக எதிர்வரும் 16 ஆம் திகதி புதன்கிழமை திறந்து வைக்கப்படும் எனத் தெரிவிக்கப் பட்டது.

நேற்று வித்தியாலய அதிபர் எஸ்.பத்மநாதன் தலைமையில் நடைபெற்ற இந்த ஆரம்ப நிகழ்வில் தீவக வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் பொ.அருணகிரிநாதன், அல்லைப்பிட்டி பங்குத் தந்தை ஸ்ரனிஸ்லோஸ் பிலிப், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், பொதுமக்கள், மாணவர்கள் கலந்து கொண்டனர்.

பங்குத் தந்தை அருட்திரு ஸ்ரனிஸ் லோஸ் பிலிப், உதவிக் கல்விப் பணிப்பாளர் அருணகிரி நாதன், அதிபர் எஸ்.பத்ம நாதன் உட்பட பெற்றோர், மாணவர்கள் சார்பில் ஒவ்வொருவரும் மங்கல விளக்கேற்றி நிகழ்ச்சியைத் தொடக்கி வைத்தனர். தற்போது தரம் நான்கு வரையும் வகுப்புக்கள் ஆரம்பிக்கப்படும் எனவும் அடுத்த ஆண்டில் தரம் 5 வரை வகுப்புக்கள் இடம் பெறும் எனவும் தெரிவிக்கப்பட்டது. (த-7)

# 75 பயனாளிகளுக்கு மர முந்திரிகை கன்றுகள்

யாழ்ப்பாணம்,ஜன. 03

ஊர்காவற்றுறை பிரதேச செயலகத்தில் வைத்து 75 பயனாளிகளுக்கு மரமுந்திரிகை கன்றுகள் விநியோகிக் கப்பட்டன.

பொருளாதாரஅபிவிருத்தி அமைச்சின் திவிநெகும திட்டத்தின் கீழ் ஒவ்வொரு பயனாளிகளுக்கும் 10 என்ற வீதத்தில் மரமுந்திரிகைக் கன்றுகள் கடந்த வியாழக் கிழமை விநியோகிக்கப் பட்டதாக பிரதேச செயலக அதிகாரி ஒருவர் தெரிவித் தார்.

தொடர்ந்து பிரதேச செயலக கேட்போர் கூடத் தில் இந்த மரமுந்திரிகைக் கன்றுகளைப் பெற்றுக் கொண்ட பயனாளிகளுக்கு விசேட பயிற்சிக் கருத்தரங்கு ஒன் றும் நடத்தப் பட்டது. வேலணை விவசாய போத னாசிரியர் செ. இராமநாதனால் நடத்தப்பட்ட இந்தப் பயிற்சி வகுப்பில் மர முந்திரிகையை எவ்வாறு பராமரிப்பது என்பது தொடர்பிலான விளக்கம் வழங்கப்பட்டது. (த-17)



*யாழ்.முற்றவெளியில் மாநகர சபை வளாகத்துக்கு பின்புறமாக கடற்கரைவீதியில் உள்ள சேதமடைந்த மதகின் புனரமைப்புப் பணிக்காக அதனூடாகச் செல்லும் வாய்க்கால் மண்போட்டு மூடப்பட்டுள்ளது. இதனால் அந்த வாய்க்கால் ஊடாகக் கழிவு நீர் வழிந்தோட முடியாமல் தேங்கியுள்ளதால் சுகாதாரச் சீர்கேடு ஏற்பட்டுள்ளது. (த-17)*

# சாவகச்சேரி நகர சபையில் ஆதனவரி செலுத்த கூட்டம்

யாழ்ப்பாணம்,ஜன.03

சாவகச்சேரி நகரசபை அலுவலகத்தில் நேற்று ஆதனவரி செலுத்த பெரும் எண்ணிக்கையான வரியிறுப்பாளர்கள் வருகை தந்திருந்தனர்.

நகர சபையின் புதிய மீள் மதிப்பீடு செய்யப்பட்ட ஆதனங்களின் விவரங்கள் நகர சபையில் வைக்கப் பட்டுள்ளதை அடுத்து அதனைப் பார்வையிடும் வரியிறுப்பாளர்கள் இந்த வருடத்துக் குரிய ஆதனவரியைச் செலுத்தி வருகின்றனர்.

எதிர்வரும் 31 ஆம் திகதி வரை செலுத்தப்படும் ஒரு வருடத்துக்கான ஆதன வரித் தொகைக்கு பத்து வீத கழிவு வழங்கப்படுவதால் மக்கள் தமது ஆதனங்களுக் குரிய வரியைச் செலுத்துவதில் ஆர்வம் காட்டுவதைக் காண முடிகிறது.

ஆதனவரி செலுத்துவதக்கு காத்திருந்த வரியிறுப்பாளர்கள் கருத்துத் தெரிவிக்கையில்:-

நகரசபையில் மக்கள் பிரதிநிதிகள் தெரிவு செய்யப்பட்ட பின்னர் சபை எல்லைக்குட்பட்ட பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தித் திட்டங்களை நாம் நேரடியாக கண்ணுற்று வருகிறோம்.

எமது பிரதேச வளர்ச்சியில் நாமும் பங்களிக்க ஒரு அரிய சந்தர்ப்பமாகக் கருதி செலுத்தியுள்ளோம்.

எம்மால் செலுத்தப்படும் வரிப்பணம் எமது பிரதேசத்தின் அபிவிருத்திக்கு பயன்படுத்தப்படுவதால் அனைத்து ஆதன உரிமையாளர்களும் தமது ஆதனத்துக் குரிய வரிப் பணத்தை ஜனவரி 31 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்திப் பிரதேசத்தின் அபிவி ருத்தியை மேற்கொள்ள உதவுவோம் எனத் தெரிவித்தனர்.

புதிய மீள் மதீப்பிட்டில் வரியின் அதிகரிப்புத் தொடர்பாகக் கேட்டபோது, அண்மைக்காலமாக அத்தியாவசியப் பொருள்களின் விலை அதிகரித்து வருகின்றது.

அத்துடன் ஒப்பிடும் போது எமது வரிப்பணம் குறைவாகவே உள்ளது எனவும் தெரிவித்தனர். (ம-9)

# புதிய மதுபான நிலையங்களை அமைப்பதற்கு அனுமதி இல்லை

வடமராட்சி,ஜன.03

கரவெட்டிப் பிரதேசத்தில் இனிமேல் புதிதாக மதுபான விற்பனை நிலையங்கள் மற்றும் உணவு விடுதியுடன் கூடிய மதுபான சாலைகள் அமைப்பதற்கு பிரதேச செயலகத்தினால் அனுமதிக்கான சிபாரிசுகள் எதுவும் வழங்கப்படமாட்டாது எனத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பிரதேசத்தில் பொது மக்களுக்கு இடைஞ்சலாக உள்ள மதுபான விற்பனை நிலையங்கள் விடுதியுடன் கூடிய உணவு மதுபான சாலை என்பனவற்றை ஒதுக்குப் புறங்களுக்கு நகர்த்துதல் அல்லது மூடுதல் தொடர்பாக ஆராய்தல் தொடர்பான கூட்டத்திலேயே இந்த தீர்மானம் பற்றி அறிவிக்கப் பட்டது.

பிரதேச செயலர் ச.சிவஸ்ரீ தலைமையில் பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் கரவெட்டிப் பிரதேச சபைத் தலைவர் பொ.வியாகேசு, பருத்தித்துறை மதுவரித் திணைக்களப் பொறுப்பதிகாரி மற்றும் மதுபானசாலை விற்பனை நிலையங்கள் உணவு விடுதியுடன் கூடிய மதுபானசாலைகள் ஆகியவற்றின் உரிமையாளர்களும் கலந்து கொண்டனர்.

சில ஆண்டுகளுக்கு முன்னர் நடைபெற்ற பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தின் தீர்மானத்துக்கு அமைய நெல்லியடி நகரப் பகுதியில் உள்ள மூன்று மதுபான விற்பனை நிலையங்களையும் மக்களுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் ஒதுக்குப் புறமான இடங்களுக்கு ஆறுமாத காலத்துக்குள் நகர்த்த வேண்டும் இல்லையேல் அனுமதிக்கான சிபார்சு வழங்கப்பட மாட்டாது எனத் தெரிவிக்கப்பட்டது.

வதிரி- உடுப்பிட்டி வீதியில் உள்ள மதுபானசாலையுடன் கூடிய உணவு விடுதி 6 மாத காலத்துக்குள் மூடப்பட வேண்டும். இதற்கு 6 மாதங்களுக்குப் பின்னரும் அனுமதி வழங்கப்படமாட்டாது எனவும் கூறப்பட்டது.

நெல்லியடியில் உள்ள மதுபான விற்பனை நிலையங்களால் நகருக்கு வந்து செல்லும் மக்களுக்குப் பெரும் இடைஞ்சல்களும் கஷ்டங்களும் ஏற்படு வதாகவும் உடுப்பிட்டிப் பகுதியில் உள்ள உணவு விடுதியுடன் கூடிய மதுபானசாலை சமூகச் சீர்கேட்டுக்கு இடமளிக்கிறது எனக் குற்றஞ்சாட்டி கரவெட்டிப் பிரதேச சபையிலும் ஏகமன தாகக் கருத்துக்கள் தெரிவிக்கப் பட்டிருந்ததோடு உணவு விடுதியுடன் கூடிய மதுபானசாலை மூடப்பட வேண்டும் எனத் தீர்மானமும் நிறைவேற்றப் பட்டிருந்தது. (த-8)

# புகையிலைச் செய்கை பாதிப்பு

## கடும் மழையே காரணம்

யாழ்ப்பாணம்,ஜன.03

தீவக பிரதேசத்தில் விவசாயிகளால் மேற்கொள்ளப்பட்ட புகையிலைச் செய்கை அண்மையில் பெய்த மழையினால் பாதிப்ப டைந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தப் பிரதேசத்தில் குறைந்தது 200 ஹெக்ரேயர் நிலப்பரப்பில் இம்முறை புகையிலைச் செய்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

இந்தப்புகையிலைச் செய்கையில் 50 வீதமானவை கடந்த சில தினங்களுக்கு முன்னர் பெய்த மழை காரணமாக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளதாக அந்தப் பகுதி விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

கடும் மழையை அடுத்து ஏற்பட்ட வெள்ளம் காரணமாகப் புகையிலைச் செய்கை பாதிப்படைந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (த-17)

# பஸ்ஸில் பயணித்த வர்த்தகரின் பெருந்தொகைப் பணம் மாயம்

யாழ்ப்பாணம், ஜன.03

பஸ்ஸில் பயணித்த வர்த்தகரொருவரின் பெருந்தொகைப் பணம் திடீரென மாயமாகியுள்ளது.

கடந்த வருடம் டிசெம்பர் 29 ஆம் திகதி காரைநகரிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கி வந்த பஸ்ஸில் பயணித்த வர்த்தகரொருவரே சுமார் இரண்டு லட்சத்து 29 ஆயிரம் ரூபா பணத்தை இழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:

[illegible] பகுதியிலுள்ள கடை உரிமையாளர் [illegible] தனது கடைக்கான சிமெந்தைக் கொள்வனவு செய்வதற்கும் காப்புறுதிப் பணத்தைச் செலுத்துவதற்காகவும் பெருந்தொகைப் பணத்தை எடுத்துவந்துள்ளார்.

அவர் தனக்கு அருகில் இருந்து பயணித்த கர்ப்பிணிப் பெண்ணொருவர் ஆறுகால் மடப் பகுதியில் இறங்கியவுடன் எதேச்சையாகத் தனது காற்சட்டைப் பையை பார்த்தபோது அதிலிருந்த பணம் காணாமல் போனமை தெரியவந்ததாக பணத்தைப் பறிகொடுத்தவர் கூறினார்.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணப் பொலிஸில் முறையிடப்பட்டுள்ளது. (த-41)

# அனர்த்த முன்னெச்சரிக்கை ஒத்திகை

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் சுப்பர் மடம் (ஜே/401) பகுதியில் புதிதாக அமைக்கப்பட்ட அனர்த்த முன்னெச்சரிக்கைக் கோபுரம் தொடர்பான விழிப்புணர்வு நடவடிக்கை நாளை பி.ப 3 மணியளவில் நடைபெறவுள்ளது. இது ஒத்திகை நிகழ்வு என்பதால் அச்சமடையத் தேவையில்லையென இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் அறிவித்துள்ளது.(த-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காஷ்மீரில் பனியில் சிக்கிய 370 பேர் மீட்கப்பட்டனர்



ஜம்மு, ஜன.3

ஜம்மு காஷ்மீர் மாநி லத்தின் லடாக் பகுதியில் பனிப் பொழிவில் சிக்கிய 370 பேரை விமானப்படை நேற்று முன்தினம் மீட்டது. ஜம்மு காஷ்மீர் மாநி லத்தின் லடாக் பகுதியில் பனிப்பொழிவு கடுமையாக உள்ளது.

இதனால் ஜம்மு, லே இடையிலான நெடுஞ் சாலைகள் மூடப்பட்டன. அந்தப்பகுதியில் இருந்து வெளியேற முடியாமல் 370 பேர் சிக்கித் தவித்தனர். அவர்களை மீட்க விமானப் படை நடவடிக்கை எடுத்தது. விமானப்படையின் ஐ.எல்-76 ரக சரக்கு விமானத்தில் பொதுமக்கள் மீட்கப் பட்டனர். ஜம்முவில் இருந்து லேவுக்கு 120 பேர் அழைத்து வரப்பட்டனர். லே பகுதியிலிருந்து ஜம்முவுக்கு 250 பேர் அழைத்துச் செல்ல பட்டனர்.

### அணு உலைகள் குறித்த 22 ஆவது ஒப்பந்தம்

## இந்தியா-பாக்.இடையே ஆவணம் பரிமாறல்

டில்லி, ஜன.3

அணு உலை நிறுவுதல் தொடர்பான 22 ஆவது தொடர் ஒப்பந்தம் இந்தியா-பாகிஸ்தான் இடையே நேற்று முன்தினம் பரிமாற்றம் செய்யப்பட்டது.

இது குறித்து வெளியுறவுத்துறை அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்ததாவது:-

வருடம்தோறும் புத்தாண்டு பிறக்கும் ஜனவரி முதல் வாரத்தில் இந்த ஒப்பந்தம் புதுப்பித்துக் கொள்ளப்படும். டில்லியில் நேற்று முன்தினம் இரு நாட்டு அதிகாரிகளும் இந்த ஒப்பந்த பரிமாற்றம் செய்து கொண்டனர்.

1988 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்டு 1991 முதல் நடைமுறைக்கு கொண்டு வரப்பட்ட குறித்த ஒப்பந்தம் இரு நாடுகள் இடையேயும் கடந்த 21 ஆண்டுகளாக இருந்து வருகிறது.

அந்த ஒப்பந்தத்தின்படி இரு நாடுகளும் தாங்கள் மேற்கொள்ளும் அணு தொடர்பான நிறுவனங்கள் மற்றும், தங்களிடம் உள்ள சிறப்புக்கள் மற்றும் போர் மூளும் போது இந்த பகுதியில் தாக்குதல் நடத்தாமல் காத்துக் கொள்ளும் விதமான சரத்துக்களும் இதில் அடங்கி இருக்கும். (வ)

## காஷ்மீர் எல்லையில் 71 முறை தாக்குதல் நடத்திய பாக்.ராணுவம்

### கடந்த வருடத்தில் மட்டும்



ஜம்மு, ஜன.3

காஷ்மீரில் பாகிஸ்தானை ஒட்டிய சர்வதேச எல்லை பகுதி மற்றும் எல்லைக் கட்டுப்பாடு கோடு பகுதியில் பாகிஸ்தான் இராணுவத்தினர் கடந்த ஆண்டில் இந்திய நிலைகள் மீது 71 முறை துப்பாக்கி சூட்டில் ஈடுபட்டனர்.

இந்திய வீரர்களும் பதில் தாக்குதல் நடத்தியுள்ளனர். இந்த துப்பாக்கிச்சூட்டு சம்பவங்களில் 4 படையினர், பொது மக்கள் 2 பேர் மற்றும் பாகிஸ்தானில் இருந்து இந்திய எல்லைக்குள் ஊடுருவ முயன்ற ஒருவரும் கொல்லப்பட்டனர். 12 சிப்பாய்கள் உட்பட 15 பேர் காயமடைந்தனர். எல்லையில் பாகிஸ்தான் இராணுவத்தின் துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள் கடந்த வருடங் களைவிட அதிகரித்துள்ளது. 2011 ஆம் ஆண்டில் 51 துப்பாக்கிச் சூடுகளும் 2010 இல் இதேபோன்ற 44 சம்பவங்களும்நடைபெற்றுள்ளன. 2009 ஆம் ஆண்டில் 28 துப்பாக்கிச் சூடுகள் இடம் பெற்றுள்ளன. கடந்த ஜூலை மாதம் காஷ்மீரின் சம்பா மாவட்டத்தில் 400 மீற்றர் நீளமுள்ள சுரங்கப் பாதையை பாகிஸ்தான் இராணுவத்தினர் அமைத்தது கண்டு பிடிக்கப் பட்டதைத் தொடர்ந்து துப்பாக்கிச்சூட்டுச் சம்பவங்கள் அதிகரித்ததாக மத்திய உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. (வ)

# இலங்கை அரசின் இன நசுக்கலுக்கு இந்திய அரசு உதவி செய்கிறது

### கடுமையாகச் சாடுகிறார் வைகோ

சென்னை, ஜன.3

ஈழத்தில் இளைஞர்கள் உள்ளத்தில் தாயக உணர்வு ஏற்படக்கூடாது என்பதற்காக அவர்களை நசுக்குகின்ற வேலையில் மீண்டும் இலங்கை அரசு ஈடுபட்டுள்ளது. இதற்கு இந்திய அரசு உதவியாக உள்ளது என்று ம.தி.மு.க பொதுச் செயலாளர் வைகோ கடுமையாகச் சாடியுள்ளார்.

மறுமலர்ச்சி திராவிட முன்னேற்ற கழகத்தின் வருடத்தொடக்க ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று முன்தினம் சென்னையில் இடம்பெற்றது. சென்னையில் உள்ள ம.தி.மு.க தாயகம் அலுவலகத்தில் நேற்று முன்தினம் காலை இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் வைகோ மேலும் தெரிவித்ததாவது:-

ஈழத்தமிழர் வாழ்வு விடயம் தொடர்பில் கடந்த ஆண்டு லட்சக்கணக்கான தமிழர்கள் கொல்லப்பட்டதுடன் பல்லாயிரக்கணக்கான தமிழ் பெண்கள் பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தப்பட்டு படுகொலை செய்யப்பட்டனர். குழந்தைகள் கொல்லப்பட்டனர். இது குறித்த கவனம் உலகத்தின் பார்வைக்கு வந்திருக்கின்றது.



**உலகத்தில் எங்கெல்லாம் தமிழர்கள் வாழ்கின்றார்களோ, அங்கெல்லாம் வாக்கெடுப்பு நடத்த வேண்டும்.**

இதற்காக தொடர்ந்து பல ஆண்டுகளாக நாம் போராடிக் கொண்டிருந்தாலும், தீர்வு என்பது தமிழர் தாயகத்தில் இருக்கின்ற சிங்களவர்கள் வெளியேற்றப்பட்டு அங்கு ஒரு பொது வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டும்.

ஸ்கொட்லாந்தில் பொது வாக்கெடுப்பு நடத்தப்படவுள்ளது. உலகத்தில் பல்வேறு நாடுகளில் நடத்தப்பட்ட பொது வாக்கெடுப்பு போல சுதந்திர ஈழத்துக்கான பொது வாக்கெடுப்பு நடத்த வேண்டும். இதனை முதல் முதலாக பெல்ஜியத்தில் நான் முன் வைத்தேன்.

உலகத்தில் எங்கெல்லாம் தமிழர்கள் வாழ்கின்றார்களோ, அங்கெல்லாம் வாக்கெடுப்பு நடத்த வேண்டும். இது நிச்சயமாக நடைபெறும். இதற்காக அனைத்துலக அரசு நாடுகளில் ஆதரவினை திரட்டவேண்டிய தேவை இருக்கின்றது.

இலங்கை அரசு இந்தியா உள்ளிட்ட அணு ஆயுத வல்லரசுகளின் ஆதரவை பெற்று விடுதலைப்புலிகளுக்கு பின்னடைவை ஏற்படுத்தி லட்சக்கணக்கான மக்களைக் கொன்று குவித்துள்ளது.

அதுமட்டுமல்ல தமிழர் தாயகத்தில் இன்று சிங்களக் குடியேற்றங்களையும் பௌத்த விகாரைகளையும் அமைப்பது மட்டுமல்ல, பல்வேறு வழிகளில் தமிழர்களின் இன அடையாளத்தை அழிப்பதற்கான முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றது.

அதற்கு இந்திய அரசு முழு மையாக உதவுகின்றது. இந்தியாவில் இருந்து கடல்வழியாக தற்போது இலங்கைக்கு மின்சாரத்தை கொண்டு செல்வதற்கான ஒப்பந்தம் போடப்பட்டு அதற்கான ஏற்பாடுகளும் முன்னெடுக்கப்படுகின்றன.

இலங்கைக்கு உதவி செய்கின்றோம் என்று சொல்லி அங்குள்ள இராணு வத்துக்கு உதவிகளை மேற் கொண்டு வருகின்றது. யாழ்ப்பாண மாணவர்களை கைதுசெய்து சிறையில் அடைத்துள்ளார்கள். மாவீரர் நாளில் அமைதியாக தங்கள் துக்கத்தை வெளிப்படுதியதற்கு அவர்கள் கைது செய்யப்பட்டனர்- என்றார்.

## தரகர் வீட்டில் 28,000 கோடி ரூபா பெறுமதியான அமெ. பத்திரங்கள்

### சோதனையில் சிக்கின

கோவை, ஜன.3

கோவையில் ஒரு பங்குச்சந்தை தரகரின் வீட்டில் வருமான வரித்துறையினர் நடத்திய சோதனையில் இந்திய ரூ. 28 ஆயிரம் கோடி மதிப்புள்ள அமெரிக்க கருவூல பத்திரங்கள் சிக்கின. அவை உண்மையானவையா அல்லது போலியானவையா என்பது குறித்து அமெரிக்க தூதரக உதவியுடன் ஆய்வு இடம்பெற்று வருகிறது.

மத்திய நிதியமைச்சகத்தின் உளவுப் பிரிவு கொடுத்த தகவலின் அடிப்படையில் இந்த சோதனை நடத்தப்பட்டது. அப்போது ரூ. 28 ஆயிரம் கோடி அளவுக்கு அமெரிக்கப் பத்திரங்களில் முதலீடு செய்யப்பட்டதற்கான பங்குகளின் ஆவணங்கள் சிக்கியபோது வருமான வரித்துறை அதிகாரிகளே மலைத்து விட்டனர்.

ஒரு தனி மனிதர் இவ்வளவு பெரிய அமெரிக்க முதலீடு செய்தது எப்படி என்பது குறித்து ஆய்வு நடந்து வருகிறது. சென்னையில் உள்ள ஒரு தனியார் வங்கி மூலமாக இவர் அமெரிக்கப் பங்குகளில் முதலீடு செய்துள்ளார். மிகப் பெரிய அளவில் அவர் கோடி ரூபாவை அமெரிக்காவுக்கு பரிமாற்றம் செய்ததால் அதிர்ந்துபோன வங்கி நிதித்துறை உளவுப் பிரிவுக்குத் தகவல் வழங்கியது.

இதையடுத்தே குறித்த சோதனை நடத்தப்பட்டுள்ளது. அந்த நபரின் வீட்டிலும் அலுவலகத்திலும் ஒரே நேரத்தில் அதிகாரிகள் சோதனை நடத்தி குறித்த ஆவணங்களைக் கைப்பற்றினர்.

முதல் கட்டவிசாரணையில் இந்தப் பங்குப் பத்திரங்கள் உண்மையானவை என்றே தெரிய வந்துள்ளது. இருப்பினும் இந்த விவகாரத்தில் அமெரிக்கத் தூதரகத்தின் உதவியை வருமான வரித் துறை நாடியுள்ளது.

## மாணவியின் விவரங்களை இரகசியம் காக்கக்கூடாது

### மத்திய அமைச்சரின் கருத்தால் சர்ச்சை

சென்னை, ஜன.3

பாலியல் வன்புணர் வுக்கு உள்ளாகி சிங்கப்பூர் மருத்துவமனையில் உயிரிழந்த டில்லி மாணவி குறித்த முழு விவரங்களை வெளியிட வேண்டும் என மத்திய அமைச்சர் சசி தரூர் கூறியுள்ளதற்கு கடும் எதிர்ப்பு எழுந்துள்ளது.

உயிரிழந்த மாணவியின் பெற்றோரது சம்மதத்துடன் அவரைப் பற்றிய தகவல்களை வெளியிடலாம் என்று சசிதரூர் தனது சமூக வலைதளமான டுவிட்டரில் கூறியுள்ளார்.

பாலியல் வன்புணர்வுக்கு எதிராகக் கொண்டு வரப்படும் புதிய சட்டத்துக்கு அந்த மாணவியின் பெயரைச் சூட்டலாம் என்றும், இது அவருக்கு நாம் செலுத்தும் மரியாதை எனவும் சசிதரூர் டுவிட்டரில் குறிப்பிட்டுள்ளார்.

அவரது கருத்துக்கு தேசிய மகளிர் ஆணையம், பாரதீய ஜனதாக் கட்சி மற்றும் பல்வேறு மகளிர் அமைப்புகள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளன. (வ)


## கசாப்புக்கு கேரளா மசூதியில் தொழுகை?

### புதிய சர்ச்சையால் பரபரப்பு

கொச்சி, ஜன.3

தூக்கிலிடப்பட்ட அஜ்மல் கசாப்பின் ஆன்மா சாந்தி அடைய வேண்டி கேரள மாநிலம் கொச்சி அருகே உள்ள திரிக்கக்கரா மசூதியில் தொழுகை நடத்தப்பட்டதாக புதிய சர்ச்சை ஏழுப்பப்பட்டுள்ளது.

கடந்த நவம்பர் மாதம் 21 ஆம் திகதி மும்பைத் தாக்குதல் குற்றவாளி அஜ்மல் கசாப் தூக்கிலிடப்பட்டார். பின்னர் 23 ஆம் திகதி கசாப்புக்காக வெள்ளிக்கிழமை தொழுகை அந்த மசூதியில் நடைபெற்றுள்ளது.




அதன்போது கசாப் [illegible] ஆன்மா சாந்தி அடைவோரின் பட்டியலில் இ[illegible]ட்டதாக [illegible] எழுந்தது. இதைத் தொடர்ந்து வெள்ளிக்கிழமை தொழுகைக்குப் பொறுப்பானவரான அப்துல் ரவூப் என்பவர் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப் பட்டிருப்பதாக பள்ளிவாசல் நிர்வாகம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக தற்போது பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். ஆனால் சர்ச்சைக்குரிய ரவூப்போ தாம் அப்படிச் செய்யவில்லை என்றும் தொழுகை நடந்த போது இஸ்லாத்தைப் பின்பற்றுகிறவர்கள் கசாப் பாதையில் செல்லக் கூடாது என்றே வலியுறுத்தியதாகவும் கூறியுள்ளார். மேலும் பள்ளிவாசல் நிர்வாகத்தில் இரண்டு பிரிவுகளுக்கு இடையேயான மோதலில் தாம் பலியாக்கப்பட்டிருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார். (வ)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## புதுவருட உரை நிகழ்த்திய வடகொரிய ஜனாதிபதி

பியோங்யாங்,ஜன.3

வடகொரியத் தலைவர் கிம் ஜோங் அன் புதுவருட உரையை நிகழ்த்தியுள்ளார். பொதுமக்களுடன் குறைந்தளவு தொடர்புகளையே பேணும் கிம் ஜோங் புது வருட உரையாற்றியமை முக்கிய விடயமாகக் கருதப்படுகிறது.

2011 ஆம் ஆண்டு முதல் அதிகாரத்திலுள்ள கிம் ஜோங் அன், நாட்டின் பொருளாதாரம் முன்னேற்றப்பட வேண்டிய தன் தேவை குறித்தும், கொரிய நாடுகள் மீள ஒற்றுமைப்பட வேண்டும் என்றும் தனது உரையில் சுட்டிக்காட்டியுள்ளதுடன் முரண்பாடுகள் போருக்கே வழிவகுக்கும் என்றும் குறிப்பிட்டுள்ளார். 1994 ஆம் ஆண்டு கிம் ஜோங் அன்னின் பாட்டனார் கிம் இல் சங், தொலைகாட்சி மற்றும்வானொலி ஊடாக இவ்வாறான உரையை நிகழ்த்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.




அண்மையில் இந்தியத் தலைநகர் டில்லியில் மருத்துவக் கல்லூரி மாணவி பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்பட்டு சிகிச்சை பயனின்றி உயிரிழந்தார். உயிரிழந்த மாணவிக்கு அஞ்சலி செலுத்துமுகமாக பாகிஸ்தான், அகமதாபாத்தில் ஏராளமானோர் மெழுகுவர்த்தி ஏற்றி அஞ்சலி செலுத்தினர். குற்றவாளிகளுக்கு கடுமையான தண்டனை வழங்கவும் வலியுறுத்தினர்.

## ஈராக்கில் தொடர் குண்டு வெடிப்புகள்

### 22 பேர் சாவு; பலர் காயம்



பக்தாத், ஜன.3

ஈராக்கில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பல்வேறு குண்டு வெடிப்புக்களில் 22 பேர் பலியாகியுள்ளனர். பலர் காயமடைந்துள்ளனர்.

ஈராக்கின் பல பகுதிகளிலும் நேற்றுமுன்தினம் குண்டு வெடிப்புக்கள் இடம்பெற்றுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். எனினும் உயிரிழப்புகளின் எண்ணிக்கையை உறுதிப்படுத்த முடியாதுள்ளதாகவும் கூறப்படுகிறது.

பக்தாத்தின் தென்பகுதியிலுள்ள முஸ்ஸயிப் நகர், தென் ஹிலா நகர், பக்தாத் மாவட்டம் ஆகிய இடங்களிலேயே இந்தக் குண்டு வெடிப்புக்கள் இடம்பெற்றுள்ளன.

## சௌகலில் வாகன விபத்து: 18 பேர் சாவு


டௌபா, ஜன.3

செனகலில் இடம்பெற்ற பஸ் விபத்தில் 18 பேர் உயிரிழந்தனர். 16 பேர் படுகாயமடைந்தனர்.

செனகல், டௌபா நகரில் முஸ்லிம்களுக்கான வருடாந்தத் திருவிழா தற்போது நடைபெற்று வருகிறது. அந்தத் திருவிழாவில் கலந்து கொள்வதற்குச் சென்று கொண்டிருந்த பஸ் மீது மற்றொரு பஸ் மோதி விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் 18 பேர் உயிரிழந்தனர். 16 பேர் படுகாயமுற்றனர். காயமுற்றவர்களில் 13 பேரின் நிலை மோசமாக உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## புதிய ஏவுகணையை பரீட்சித்தது ஈரான்



தெஹ்ரான், ஜன.3

போர்க் கப்பல்களைத் தாக்கும் அதி நவீன ஏவுகணையை ஈரான் வெற்றிகரமாக ச் சோதனை நடத்தியது.

இந்தத் தகவலை ஈரான் அரச தொலைக்காட்சி நேற்று முன்தினம் செய்துள்ளது.

''ஈரானின் கடற்படைப் பயிற்சி கடந்த ஐந்து நாள்களாக நடைபெற்று வருகிறது. அதில் பல்வேறு ஆயுதங்களின் பயன்பாடு குறித்து விளக்கப்பட்டது. பயிற்சியின் இறுதிநாளான நேற்றுமுன்தினம் 200 கிலோமீற்றர் தூரம் சென்று இலக்கைத் தாக்கும் 'கேதர்' என்ற அதிநவீன ஏவுகணை பரிசோதனை செய்யப்பட்டது. கடற்படையின் இந்தச் சோதனை முயற்சி வெற்றியில் முடிந்தது'' என்று அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அணு ஆயுதங்களைத் தயாரிப்பதாக அமெரிக்கா குற்றம் சாட்டுவதை ஈரான் தொடர்ந்து மறுத்து வருகிறது. இந்நிலையில் இராணுவ வலிமையைக் காட்டவே ஈரான் ஏவுகணைச் சோதனையில் ஈடுபட்டது என்று ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றனர்.

# வம்பில் முடிந்தது வாண வேடிக்கை

## ஐவரிகோஸ்டில் 61 பேர் சாவு

அபித்ஜான், ஜன.3

மேற்கு ஆபிரிக்க நாடான ஐவரி கோஸ்டில் புத்தாண்டுக் கொண்டாட்ட வாண வேடிக்கையின் போது ஏற்பட்ட நெரிசலில் சிக்கி 61 பேர் உயிரிழந்தனர்.

மேற்கு ஆப்பிரிக்க நாடுகளில் ஒன்று ஐவரி கோஸ்ட். அந்த நாட்டின் பிரதான நகரமான அபித்ஜானில் உள்ள பெலிக்ஸ் ஹூப்பட் போய்னி மைதானத்தில் நேற்றுமுன்தினம் இரவு புத்தாண்டு விழா நடைபெற்றது. வண்ண வண்ண வாணவேடிக்கையைக் காண்பதற்காக மைதானத்தில் ஏராளமானோர் குவிந்தனர்.



மைதானத்துக்கு வெளியே திரண்ட மக்கள் உள்ளே செல்வதற்கு முண்டியடித்தனர். அந்த நெரிசலில் சிக்கி 61 பேர் உயிரிழந்தனர். 200 பேர் காயங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

''நகரின் பிரதான மைதானத்தில் நடைபெற்ற வாண வேடிக்கை நிகழ்ச்சியைக் காண மைதான வாயிலுக்கு மக்கள் முண்டியடித்தபடி சென்றதால் நெரிசல் அதிகரித்தது. ஒருவரையொருவர் தள்ளிவிட்டு உள்ளே செல்ல முயற்சித்துள்ளனர். அதில் பலர் கீழே விழுந்தனர். அதனால் பின்னால் வந்தவர்களும் அடுத்தடுத்து தடுக்கி விழுந்துள்ளனர். காயமடைந்தவர்களில் சிறுவர்களே அனேகர்'' என்று மீட்புக்குழுவின் தலைவர் இஸா சாகோ தெரிவித்தார்.

## கார் மீது துப்பாக்கிச் சூடு

### 6 பெண்கள் உட்பட 7 பேர் சாவு

இஸ்லாமாபாத், ஜன.3

பாகிஸ்தானில் கார் மீது இனந்தெரியாத நபர்கள் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் 6 பெண்கள் உட்பட 7 பேர் உயிரிழந்தனர். உயிரிழந்தவர்கள் அரச சார்ப்பற்ற தொண்டு நிறுவனப் பணியாளர்கள் என்று தெரிவிக்கப்படுகிறது.



குழந்தைகள் அறக்கட்டளை ஒன்றில் பணியாற்றி விட்டுத் திரும்பிக் கொண்டிருந்தபோதே அவர்கள் பயணித்த கார் மீது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அதில் 6 பெண்கள் உட்பட 7 பேர் உயிரிழந்தனர்.

அண்மையில் போலியோ சொட்டு மருந்து வழங்கும் பணியார்கள் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## காச நோய்க்கு புதிய மருந்து

### எப்.டி.ஏ. அனுமதி அளித்தது

வோஷிங்டன், ஜன.3

காசநோய் சிகிச்சைக்கான புதிய மருந்துக்கு அமெரிக்காவின் உணவு மற்றும் மருந்து நிர்வாகத்துறை அனுமதி (எப்.டி.ஏ) அளித்துள்ளது.

எலும்புருக்கி (டி.பி.) எனப்படும் காசநோயால் ஏராளமானவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர். இந்த நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்குவீரிய மிக்க இரண்டு மருந்துகள் தற்போது பயன்படுத்தப்படுகின்றன. இருப்பினும் இவை முழு அளவில் பயனளிப்பதில்லை. அவற்றுக்கு மாற்றாகத் தற்போது புதிய மருந்து கண்டறியப்பட்டுள்ளது.

இந்தப் புதிய மருந்துக்கு சிர்டுரோ எனப் பெயரிடப்பட்டுள்ளது. ஆனால் இந்த மருந்தை மற்ற சிகிச்சைக்கான வாய்ப்பு இல்லாதபோது மட்டுமே பயன்படுத்த வேண்டும் என்று விஞ்ஞானிகள் எச்சரித்துள்ளனர்.

மற்ற சிகிச்சை வாய்ப்புகள் இல்லாத நோயாளிகளுக்கு சிர்டுரோ மருந்தைப் பயன்படுத்துவது நல்ல பலனளிக்கும். இருப்பினும் இந்த மருந்தைப் பயன்படுத்துவதில் சில அபாயக்கூறுகள் உள்ளன. இந்த மருந்து உரிய முறையிலும் வேறு சிகிச்சை முறைகள் இல்லாத நிலையில் பயன்படுத்தப்படுவதையும் மருத்துவர்கள் உறுதிப்படுத்த வேண்டும். இந்தச் சிகிச்சை முறை சில வேளைகளில் இதயத்துக்கு பாதிப்பை ஏற்படுத்தக் கூடும் என்றும் குறிப்பிடப்பட்டுள்து.

2011ஆம் ஆண்டில் 90 லட்சம் பேர் இந்த நோயால் பாதிக்கப்பட்டிருந்தனர். அவர்களில் 4 லட்சம் பேர் மருந்துகளால் பலனற்ற நிலைக்கு தள்ளப்பட்டிருந்தனர் என உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## மொழி தெரியாது அவதியுறும் நோயாளர்கள்

பேர்லின், ஜன.3

ஜேர்மனியில் மருத்துவ சிகிச்சையின் போது தவறு ஏற்படுவதாகக் குற்றஞ்சாட்டப்படுகிறது. இதற்கு மொழிப் பிரச்சினையே முக்கிய காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இதுகுறித்து பெர்லின் மருத்துவ கழகத்தின் தலைவர் கூந்தர் ஜோனிட்ஸ் தெரிவிக்கையில்,

''மருத்துவருக்கும் நோயாளிக்கும் இடையிலான மொழிப் பிரச்சினையே தவறுகளுக்கு காரணம். ஜேர்மானிய மொழியில் தேர்ச்சி பெற்றவர்கள் மட்டுமே மருத்துவ பணிகளில் ஈடுபடுத்தப்படுகின்றனர். இந்த நிலையில் சிகிச்சைக்காக நோயாளிகள் வரும்போது ஜேர்மன் மொழி சரிவர தெரியாத காரணத்தால் சில சமயங்களில் தவறுகள் ஏற்படுகின்றன'' என்று தெரிவித்துள்ளார்.

## 13 வயதுச் சிறுவன் வெடிகுண்டு மிரட்டல்

கோலாலம்பூர், ஜன.3

வெடிகுண்டு மிரட்டல் விடுத்த 13 வயது சிறுவன் கைது செய்யப்பட்டுள்ளான்.

சிங்கப்பூரில் உள்ள களியாட்ட விடுதி ஒன்றுகே பேஸ்புக் மூலம் இவ்வாறு மிரட்டல் விடுத்துள்ளான் சிறுவன்.

''சிங்கப்பூரில் உள்ள எல்லா இடத்திலும் எச்சில் துப்பப் போகிறேன், குறிப்பாக களியாட்ட விடுதிக்கு வெடிகுண்டு வைக்க போகிறேன்'' என்று தனது மிரட்டலில் தெரிவித்துள்ளான் அந்தச் சிறுவன்.

இதுகுறித்து உடனடியாக விசாரணை நடத்திய சிங்கப்பூர் பொலிஸார் அந்தச் சிறுவனைக் கைது செய்தனர்.

எனினும் சிறுவனின் பற்றிய விவரங்கள் எதையும் பொலிஸார் வெளியிடவில்லை.

சிறுவன் மீதான குற்றம் நிரூபிக்கப்பட்டால் ஒரு லட்சம் டொலர் அபராதம் விதிக்கப் படும் அல்லது 5 ஆண்டுகள் சிறைத் தண்டனை வழங்கப்படும் என்று தெரி விக்கப்படுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாகிஸ்தானில் குண்டு வெடிப்பு: ஒருவர் சாவு



கராச்சி, ஜன. 3


பாகிஸ்தானின் கராச்சி ஜின்னா மைதானம் அருகில் நேற்று இடம்பெற்ற குண்டு வெடிப்பில் ஒருவர் உயிரிழந்தார். 13 பேர் காயமடைந்தனர்.

தரித்து நின்ற மோட்டார் சைக்கிளிலேயே குண்டுகள் பொருத்தப்பட்டிருந்தன என்று தெரிவிக்கப்படுகிறது.

இந்த குண்டுவெடிப்பில் அருகில் உள்ள கட்டிடங்கள், கடைகள் மற்றும் வாகனங்கள் சேதமடைந்தன.

சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த பொலிஸார் மீட்பு நடவடிக்கையில் ஈடுபட்டனர். வேறு இடங்களில் வெடிகுண்டு வைக்கப்பட்டுள்ளதா என்பது பற்றி சோதனை நடத்தினர்.

ஜின்னா மைதானத்தில் நேற்று நடைபெற்ற கட்சிக் கூட்டம் ஒன்றுக்குச் சென்றவர்களை இலக்கு வைத்தே இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.



வடக்கு மணிலாவில் பார்வையாளர்களைக் கவர்வதற்காக மலைப்பாம்புகளுடன் வீதியோரத்தில் சாகசம் செய்யும் ஒருவர்.

## கொலம்பிய விமானத் தாக்குதலில் 13 போராளிகள் உயிரிழந்தனர்

சிகரோடா, ஜன.3

தென் அமெரிக்க நாடான கொலம்பியாவில் பார்க் போராளிக்குழுவுக்கு எதிராக இராணுவத்தினர் மேற்கொண்ட விமானத் தாக்குதலில் 13 போராளிகள் உயிரிழந்துள்ளனர்.

இடதுசாரிப் போராளிக்குழுவான 'பார்க்' அமைப்பு அரசுக்கு எதிராக சண்டையிட்டு வருகிறது. போராளிகளுக்கு எதிராக ஆண்டியோகுயா பகுதியில் உள்ள சிகரோடோ பகுதியில் இராணுவம் விமானத் தாக்குதல் நடத்தியது. அதில் போராளிகள் 13 பேர் உயிரிழந்தனர்.



அண்மையில் போராளிகள் நடத்திய தாக்குதலில் 19 இராணுவத்தினர் கொல்லப்பட்டதற்கு பதிலடியாக இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்படுகிறது.

கியூபா நாட்டில் பார்க் போராளிகள் அமைப்புடன் பேச்சுவார்த்தைக்கு அரசு முயற்சிகள் எடுத்து வரும் நிலையில்அவர்களுக்குஎதிராக இந்த தாக்குதல் நடத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பணக்காரருக்கு அதிகவரி அமெரிக்காவில் புதிய சட்டம்

வோஷிங்டன், ஜன.3

பணக்காரர்களுக்கு அதிகமாக வரி விதிக்கும் சட்டம் அமெரிக்க பிரதிநிதிகள் சபையில் நிறைவேறியுள்ளது. அமெரிக்க நாடாளுமன்றில் நேற்று முன்தினம் நடந்த வாக்கெடுப்பில் இந்தச் சட்டத்துக்கு ஆதரவாக 257 வாக்குகளும் எதிராக 167 வாக்குகளும் கிடைத்தன.

ஏற்கனவே மேல் சபையான செனட் சபையில் நடந்த வாக்கெடுப்பில், இந்தச் சட்டத்துக்கு ஆதர வாக 89 வாக்குகளும் எதிராக 9 வாக்குகளும் கிடைத்திருந்தன.

மீண்டும் இரண்டாவது முறையாக அமெரிக்க ஜனாதிபதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டால், பணக்காரர்களுக்கு அதிகவரி மற்றும் அரசின் செலவுகளை குறைப்பது உள்ளிட்ட சட்டங்களைக் கொண்டு வருவதாக ஒபாமா தேர்தல் பிரசாரத்தின் போது தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## இமயமலை சிகரம் ஏறி அமெரிக்கர்கள் சாதனை



உலகின் உயர்ந்த மலைத் தொடர்களில் ஒன்றான இமயமலையில் ஏறி, அமெரிக்க வீரர்கள் மூவர் சாதனை படைத்துள்ளனர்.

இவர்கள் மூவரும் இமயமலையில் அமைந்துள்ள மேரு பீக் என்ற சிகரத்தின் உச்சியை அடைந்து சாதனை படைத்துள்ளனர்.

20, 700 அடி உயரம் வரை ஏறிய இவர்கள், இந்தத் தூரத்தை அடைய 11 நாள்கள் செலவிட்டுள்ளனர்.

இதற்காக கடந்த ஒரு மாதகாலமாக இந்த மலை அடிவாரத்தில் தங்கிப் பயிற்சி மேற்கொண்டதாக இவர்கள் தெரிவித்துள்ளனர்.

## நைஜீரியாவில் கிளர்ச்சியாளர் 14 பேர் சாவு

கனோ, ஜன.3

நைஜீரிய படையினருக்கும் கிளர்ச்சியாளர்களுக்கும் இடையே நடந்த சண்டையில் 14 பேர் உயிரிழந்தனர்.

நைஜீரியாவில் உள்ள மைடுகுரியில் நேற்று முன்தினம் நடந்த மேதல்களில் 13 கிளர்ச்சியாளர்களும் உயிரிழந்தன்ர் என்று அந்த நாட்டு இராணுவம் தெரிவித்துள்ளது.

தமது தரப்பில் ஒருவர் உயிரிழந்ததாவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.


WALK IN INTERVIEW

- குடி சார் இயந்திரவியலாளர்கள் (Civil Engineers) மற்றும் தொழில் நுட்ப உத்தி யோகத்தர்கள் (Technical officers) வீதி மற்றும் கட்டட நிர்மாணத்துறையில் 5 வருடத்திற்கு குறையாத முன் அனுபவம் உள்ளவர்கள் விரும்பத்தக்கது.
- பட வரைஞர் (Draughtsman) - AutoCAD வரைதலில் இரண்டு வருடங்களுக்கு குறையாத முன்னனுபவமுள்ள குடிசார் பொறியியல் துறை சார்ந்தவர்கள் விரும்பத்தக்கது.
- இயந்திரவியல் முகாரி (Mechanical Forman) - தயார்படுத்தலுக்குரிய வரைபடங்களை (Shop Drawings) தயாரித்தளிக்கக் கூடிய தகைமையைக் கொண்டிருத்தல் வேண்டும்.

மேற்குறித்த பதவிகளுக்கு 50 வயதிற்குட்பட்டவர்கள் மட்டும் விண்ணப்பிக்கலாம்.
தகுதியுள்ளவர்கள் தமது விண்ணப்பம் மற்றும் தகுதி சான்றிதழ்களுடன் நேரில் வரவும்.

யூரோவில்
இல. 45, காட்டுக்கந்தோர் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
euroville@dialognet.lk (ப/5208)(6.7.11)

விளம்பரம் தொடர்பான விவரங்களுக்கு advt@uthayan.com

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் இலங்கை
வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகு
வெளிவாரிப் பரீட்சைகள் - 2010
பொது மற்றும் சிறப்புக் கலைமாணி பகுதி - 1 - 2010 (வெளிவாரி)

மேற்படி பரீட்சைகளை 18.01.2013 (வெள்ளிக்கிழமை) தொடக்கம் 02.02.2013 (சனிக்கிழமை) வரை யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் மற்றும் வவுனியா வளாகத்திலும் நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

பரீட்சைகள் தொடர்பான நேர அட்டவணைகளையும், பரீட்சை அனுமதி அட்டைகளையும் 15.01.2013 (செவ்வாய்க்கிழமை) தொடக்கம் வெளிவாரிப் பட்டப் பதிவுகள் பரீட்சைகள் அலகிலும், வவுனியா வளாகத்திலும் அலுவலக நேரத்திற் பெற்றுக் கொள்ளலாம். மேலதிக விவரங்களுக்கு 021 222 3612 என்ற தொலைபேசி எண்ணுடன் தொடர்பு கொள்ளவும்

பதிவாளர். (சி/5199)(6.2)

வீடு வாடகைக்குத் தேவை

இணுவில், கோண்டாவில் மேற்குப் பகுதியில் சகல வசதிகளுடன் கூடிய வீடு வாடகைக்குத் தேவை.
தொடர்பு:- 0773163530 (27525)(6.2.7)

தையல் வகுப்பு

மகளிருக்கான காலை மாலை நேர
தையல் பயிற்சி
வகுப்புகள்
குழந்தைகள் சட்டை, சாறி பிளவுஸ், சுடிதார், பாவாடை சட்டை உட்பட சகலவிதமான ஆடைகளும் வெட்டித் தைப்பதற்கு பயிற்றுவிக்கப்படும்.
517, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
(ஓட்டு மடத்துக்கு இடையில்)
தொடர்பு : 077 7150883 (27447)(2.6.7)

ஈரவிழிகளுடன் முதலாமாண்டு நினைவஞ்சலி




அமரர் கனகசபை
கவீந்திரராசா (ஐயர்)
(முன்னாள் வலி. கிழக்கு பிரதேசசபை ஊழியர்)
மலர்வு
25.01.1959
உதிர்வு
14.01.2012
திதி: சஷ்டி 03.01.2013

குடும்பத்தின் குலவிளக்காய் வாழ்ந்து
எம்மை அன்புடன் அரவணைத்து
நன்நெறி காட்டி எம்மை வாழவைத்த
அன்புத் தெய்வமே!
எம்மை விட்டுப் பிரிந்து ஓர் ஆண்டு கடந்தாலும்
என்றும் எங்கள் நினைவுகளில் நீங்காது நிலைத்திருப்பீர்கள்.

காரைக்கால் வீதி, மனைவி, பிள்ளைகள்,
இணுவில் கிழக்கு, இணுவில். மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

12 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
15.08.1932
மறைவு
14.01.2001
(திதி: அபரபக்க ஷஷ்டி)

அமரர் ஆறுமுகம் முத்தையா ஐயாத்துரை
(முன்னாள் கிராம சேவையாளர்)

வாழ்க்கை எனும் பாதையிலே நீ காட்டிய
பாசமெல்லாம் எமை விட்டுப் பிரிந்து
பன்னிரண்டாண்டானதோ
உயிரோடும் உணர்வோடும் கலந்து விட்ட
உங்கள் நினைவலைகள் என்றென்றும்
எம்முடன் நிலைத்திருக்கும்.

9/1, சுப்பிரமணியம் வீதி, அரியாலை. குடும்பத்தினர்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்தனையின் விளைவே சாதனை

(12)

வாழ்க்கையில் ஏற்படுகின்ற பெரிய நிகழ்ச்சிகள், மாற்றங்கள் அனைத்துமே ஒன்றைப்பற்றி நாம் சிந்திக்கின்ற போது ஏற்படுவதாகத்தான் இருக்க முடியும். வாழ்க்கையில் சோதனைகள் ஏற்படுகின்ற போது, நம்மை முதலில் ஆட்கொள்வது கவலை. அந்தக் கவலையினிடம் முழுமையாக நம்மை ஒப்படைத்து விடுகிறோம். அது கொஞ்சம் கொஞ்சமாக நம்மை பலவீனப் படுத்தி செயலற்றுப் போகச் செய்து விடுகிறது. நாம் சிந்திக்கத் தவறுகிறபோதும், வாழ்க்கை தேக்கமடையத் தொடங்குகிறது. தேங்கிப் போன வாழ்க்கையில் சாதனைகள் நிகழ்வதில்லை.

நீங்கள் ஏழையாக இருக்கிறீர்கள். ஏழ்மை ஏன் வந்தது என்று சிந்தியுங்கள். உங்கள் வாழ்க்கையில் தோல்விகள் தொடர்கின்றன. தோல்விகளுக்கு என்ன காரணம் என்று சிந்தியுங்கள். உங்கள் ஆசைகள் எதுவும் நிறைவேறுவது இல்லை. அதற்கு என்ன காரணம் என்று யோசியுங்கள்.

முன்னேறத் துடிக்கிறீர்கள். ஒவ்வொரு படியிலும் முன்னேற்றம் தடைப்படுகின்றது. காரணத்தை ஆராயுங்கள். வாழ்க்கை நிகழ்ச்சிகள் ஒவ்வொன்றைப் பற்றியும் நாம் சிந்திக்கத் தொடங்கி விட்டால், நாம் என்ன செய்ய வேண்டுமென்று தானாகவே விளங்கிவிடும். சிந்தனையின் விளைவாகத்தான் சாதனைகள் தோன்றுகின்றன. எல்லாச் சாதனைகளும் அப்படித் தோன்றியவைதான்.

குழந்தைத்தனம் போதிக்கும் பாடம்

உலகத்தில் தினந்தோறும் எத்தனையோ மனித உயிர்கள் தோன்றிக் கொண்டே இருக்கின்றன. ஒவ்வொரு குழந்தையையும், இறைவன் உலகத்துக்கு அனுப்பி வைக்கும் போது அவன் (அவள்) சாதனை புரிய வேண்டும் என்கிற எண்ணத்துடனேயே அனுப்பி வைக்கிறான். ஆனால், அந்தக் குழந்தை வளர்கின்ற போது சாதனை புரியும் சக்தியை கொஞ்சம் கொஞ்சமாக இழக்கத் தொடங்குகிறது. ஒரு சில குழந்தைகளே இந்த விபத்துக்கு ஆளாகாமல் தப்பி சாதனைகள் புரிகின்றனர்.

ஃபிரேஞ்ச் சிந்தனையாளன் ரூசோ சமுதாய ஒப்பந்தம் என்கிற தன்னுடைய புத்தகத்தில் ஆரம்ப வாக்கியமாக ஒன்றைச் சொல்லியிருக்கிறான். இயற்கையின் செயற்பாட்டினால் தோன்றுகின்ற 'ஒவ்வொரு குழந்தையும் நல்ல குழந்தையாகவே தான் பிறக்கிறது. மனித சகவாசத்தால் அந்த குழந்தைகள் வீணாகிப் போகின்றனர் எனக் குறிப்பிடுகின்றார் ரூசோ.

இது கொஞ்சம் மிகைப்படுத்தப்பட்ட ஒரு கூற்று என்று எண்ண வேண்டாம். பிறந்த ஒவ்வொரு குழந்தையின் நடவடிக்கையையும் கூர்ந்து கவனியுங்கள். அது வளர்ச்சியடையும் போது அதனுடைய போக்குகள் மாறுவதற்கு நாம் எவ்வாறு காரணமாக இருக்கிறோம் என்பதையும் கவனியுங்கள். அப்போது மேலே சொல்லியுள்ள கூற்று சரியானதுதான் என்பதை நீங்களே புரிந்து கொள்வீர்கள்.

தாயினுடைய கர்ப்பப் பையிலிருந்து குழந்தை வெளியில் வந்தவுடன் அழத் தொடங்குகிறது. அது அழும்போது புதிய உயிர் ஒன்று உதயமாகி விட்டதை நாம் உணர்கிறோம். அதாவது, பூமிக்கு வந்தவுடனேயே பிறந்த குழந்தை அழுது தனக்கு ஒரு அங்கீகாரத்தைத் தேடிக் கொள்கிறது.

சில நிமிடங்களிலேயே அது உணவைத் தேட ஆரம்பித்து விடுகின்றது. வாயைத் திறந்து பால் சுரக்கும் இடத்தை எனக்குக் காட்டுங்கள் என்று அழுது கேட்கிறது. பின்னர் தனக்கு பால் தேவைப்படுகின்ற போதெல்லாம் அழுகிறது. அதாவது, அதன் உரிமையைக் கேட்டு அது உரத்த குரல் எழும்புகிறது.

பின்னர் மல்லாந்து படுத்திருக்கும் குழந்தை குப்புற விழுகிறது. அதன் மூக்கு அடிபடுகிறதே என்று நாம் கவலைப்படலாம். அதற்காக குழந்தை தன் முயற்சியை நிறுத்துவதில்லை. பின்னர் மார்பால் நகர்ந்து, கைகளையும், கால்களையும் பயன்படுத்தித் தவழ்ந்து, கால்களில் அமர்ந்து, கைகளால் பொருளைப் பற்றி தன்னுடைய முயற்சிகளைத் தொடர்கிறது.

எழுந்து நடக்கிறது. நடக்கும்போது விழுகிறது. விழுந்து விட்டோமே என்று மறுபடியும் எழுந்து நடக்காமல் அது இருப்பதில்லை. இப்படியாக ஒவ்வொரு கட்டத்திலும் அதனுடைய செயல்களைக் கவனித்தால், தோல்விகள் ஏற்படுகின்ற போதும் அதனுடைய முயற்சிகள் தொடர்வதைப் பார்க்கலாம். ஒரு வயதுவரை குழந்தைகள் மற்றவர்களின் வாழிகாட்டுதலுக்காகக் காத்திருப்பது இல்லை. ஒரு வயது ஆன பிறகுதான் பெற்றோர்களின், மற்றோர்களின் யோசனைகளைக் கேட்டு செயற்பட வேண்டிய நிர்ப்பந்தத்துக்கு அது ஆளாகிறது.

நாமும் நம்முடைய கைங்கரியமாக அதனுடைய முயற்சிகளுக்கு எவ்வளவு முட்டுக்கட்டை போட முடியுமோ அவ்வளவையும் போடத் தொடங்குகிறோம். செய்யக் கூடாது என்று குழந்தைகளிடம் நாம் சொல்லுவதுதான் அதிகமாக இருக்கிறது. ஆனால் குழந்தைகள் எதையாவது செய்ய வேண்டும் என்கிற ஆர்வத்தில் செயற்பட்டுக் கொண்டே இருக்கின்றனர். இறைவனது படைப்பின் நோக்கமே, ஒவ்வொரு மனிதனும் தன்னால் இயன்றதைச் செய்து தன்னளவில் ஒரு சாதனை புரிய வேண்டும் என்பதுதான். இறைவனின் இந்த நோக்கத்தை வளரும் குழந்தைகளிடம் தெளிவாகவே பார்க்க முடியும். ஆனால், சூழ்நிலைகளும் மற்றவர்களின் குறுக்கீடுகளும் மனிதர்களின் இயற்கையான தன்முனைப்புக்குத் தடையாகி விடுகின்றன.

பிறக்கும்போதே நாம் ஒவ்வொருவரும் ஒரு நோக்கத்துடன் படைக்கப்பட்டு இருக்கிறோம் என்பதை உணர்தல் வேண்டும். மனிதனின் சாதனைகளுக்கு எல்லை ஏதாவது இருக்கிறதா? வானம்தான் எல்லை. வரலாற்றைப் படித்தால் சாதனைகளின் பட்டியலை உணர முடியும். வரலாற்றில் இடம்பெறாத சாதனைகளும் நிறைய இருக்கின்றன. எல்லா சாதனைகளுமே வரலாற்றில் இடம்பெறத் தக்கவையாக இருக்க வேண்டும் என்கிற அவசியம் இல்லை.

பி.சி.கணேசன் (தொடரும்)

# சமூகத்தில் நற்பிரஜைகளை உருவாக்குவதற்கு ஆசிரியருடன் பெற்றோரின் ஒத்துழைப்பும் அவசியம்

## ஸ்கந்தவரோதய அதிபர் வலியுறுத்துகிறார்

யாழ்ப்பாணம், ஜன.3

பெற்றோர்கள் தமது பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்பும் போது, தமது பிள்ளைகள் தமது வாழ்க்கையைத் தாமே முன்னெடுத்துச் சென்று சமூகத்தில் தலை நிமிர்ந்து வாழக்கூடிய நற்பிரஜைகளாக வரவேண்டும் என்ற எதிர்பார்ப்பையே கொண்டிருக்கின்றனர். இதனை நிறைவேற்றிக் கொடுப்பதற்காக நல்லொழுக்கமுள்ள பிரஜைகளாக உருவாக்குவதற்காகப் பாடசாலை தனதுமுழுப் பொறுப்பையும் செய்கின்றது பெற்றோர்களும் அதற்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

எந்தெந்த வகையில் மாணவரை அணுகி அவர்களை நற்பிரஜைகள் ஆக்கவேண்டுமோ அந்தந்த வகையில் ஆசிரியர்கள் திருத்துகிறார்கள். இவ்வாறு தெரிவித்தார் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அதிபர் இ.ஈஸ்வரதாசன். மேற்படி கல்லூரியின் பரிசளிப்பு விழாவில் அவர் தலைமையுரை ஆற்றுகையில் மேலும் தெரிவித்ததாவது:-

சாம, பேத, தானம் ஆகிய செயற்பாடுகள் மூலம் திருத்த ஆசிரியர்கள் முயற்சிக்கின்றார்கள். இது மாணவர்கள் தமது பிழைகளை உணர்ந்து திருந்துவதற்கே என்பதை பெற்றோர் ஏற்றுக்கொள்ள வேண்டும். ஆசிரியர்களின் செயற்பாடுகளை விமர்சிப்பதை விட்டு அவர்களோடு இணைந்து பிள்ளைகள் நலனுக்காக ஒத்துழைக்க வேண்டும்.

இன்றைய நிலையில் பாடசாலை மாணவர்களிடையேயான ஒழுக்கமின்மை மிகவும் பெரிய விளைவுகளைச் சமூகத்தில் ஏற்படுத்துகிறது. இன்றைய மாணவர்களிடையேயான ஒதுங்கி வாழுதல், திடீர் முடிவுகளை மேற்கொள்ளல், கற்றலில் ஈடுபாடு குறைதல், பாடசாலைச் சமூகத்துடன் நல்லுறவைப் பேணாமை, பெற்றோர் பெரியோரை மதிக்காது முரண்படுதல், இலத்திரனியல் ஊடகங்களில் ஈடுபாடு, போதைப்பொருள் பயன்பாடு என்பவை பெரிய பிரச்சினைகளாக உள்ளன. இவை கிராமப்புறங்களை விட நகர்ப்புற மாணவர்களிடையே அதிகம் காணப்படுகின்றன.

எனவே வீட்டில் செல்லப் பிள்ளைகளாக வளர்க்கப்படும் தம் பிள்ளைகளைப் பாடசாலை கட்டுப்பாட்டுடன் வளர்த்தெடுக்கும் போது எதிர்கால நன்மைகளைக் கருத்திற் கொண்டு பெற்றோர் அதிபருக்கும் ஆசிரியர்களுக்கும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் - என்றார்.

ஒறேற்றர் மண்டபத்தில் நடைபெற்ற இப்பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராக ஸ்கந்தவரோதயனும், வவுனியா பொது வைத்தியசாலை சத்திரசிகிச்சை நிபுணருமான பு.ஆதவன் கலந்து கொண்டார். திருகோணமலை வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் க.அரியநாயகம் நினைவுப் பேருரை நிகழ்த்தினார். (வ)



விழிப்புலனற்றோர் சங்கத்தின் கைதடி தொழிற் பூங்காவில் இடம்பெற்ற கிறிஸ்மஸ் ஒளி விழா நிகழ்வில் இடம்பெற்ற வில்லுப்பாட்டு நிகழ்வின்போது எடுக்கப்பட்ட படம். (17)

# வல்வை முத்துமாரி அம்மன் ஆலய நிர்வாகம் நடத்திய போட்டி முடிவுகள்

யாழ்.வல்வை ஸ்ரீ முத்துமாரி அம்மன் கோவில் தேவஸ்தானத்தால் நடத்தப்பட்ட கட்டுரை, பேச்சு, பண்ணிசைப் போட்டி முடிவுகள் வெளிவந்துள்ளன.

அவற்றின் முதலாம், இரண்டாம், மூன்றாம் இடங்களைப் பெற்றவர்களின் விவரம் வருமாறு:-

தரம் 1 ம.அன்புமதி (வல்வை சிவகுரு வித்தி.), ப.சாந்தரூபி, கி.ஹரிசன் (இருவரும் வல்வை மகளிர் மகா வித்தி.).

தரம் 2 -கு.கஜேந்தினி (வல்வை சிவகுரு வித்தி.), செ.வர்மிலா, ரா.ராகுல் (வல்வை அ.மி.த.க. பாடசாலை).

தரம் 3 -க.கவிகரன், ச.ஜெயந்தினி, (இருவரும் வல்வை றோ.க.த.க.பாடசாலை), வி.விதுசன் (வல்வை சிவகுரு வித்தி.).

தரம் 4 - த.பிரவீணா, (யாழ்.சிதம்பராக் கல்லூரி),சி.பூவிகா, ம.லக்சிகா (இருவரும் வல்வை சிவகுரு வித்தி.).

தரம் 5 - சி.தனுசியா, அ.அஜய் (இருவரும் வல்வை சிவகுரு வித்தி.), ஏ.மயூரி ( வல்வை றோ.க.த.க.பாடசாலை).

தரம் 6 - ம.கிருஷ்ணவி (வல்வை சிதம்பராக் கல்லூரி), இ.கவிநிலா, பா.பிரியதர்சினி (இருவரும் வல்வை சிவகுரு வித்தி.).

தரம் 7 ஜெ.தமிழ்ப்பிரியா (வல்வை மகளிர் மகா வித்தி.), தி.லக்ஷிகா (வல்வை சிதம்பராக் கல்லூரி).

தரம் 8 - ர.பிருதா , மு.தனுஷியா (இருவரும் வல்வை மகளிர் மகா வித்தி.).

தரம் 10 - சு.விஜயகுமார் (வல்வை சிவகுரு வித்தி.).

கட்டுரைப்போட்டி

தரம் 6 - இ.பவிதா, பா.பிரியதர்சினி (இருவரும் வல்வை சிவகுரு வித்தி.), ஜீ.கஜீந்தினி (வல்வை சிதம்பராக் கல்லூரி).

தரம் 7 இ.இந்துசா (வல்வை மகளிர் மகா வித்தி.).

தரம் 8 ச.கிதுஷன் (வல்வை சிதம்பராக் கல்லூரி), ர.பிருதா (வல்வை மகளிர் மகா வித்தி.).

தரம் 10 - மு.புவித்ரா (வல்வை மகளிர் மகா வித்தி.), இ.சுபாசினி (வல்வை சிவகுரு வித்தி.), சி.டிசாந்தி (வல்வை மகளிர் மகா வித்தி.).

பேச்சுப்போட்டி

தரம் 6 - இ.பவிதா, இ.கவிநிலா (இருவரும் வல்வை சிவகுரு வித்தி.), ஞா.பிறேமிலன் (வல்வை சிதம்பராக் கல்லூரி).

தரம் 8- ர.பிருதா (வல்வை மகளிர் மகா வித்தி.).

தரம் 10- மு.புவித்ரா (வல்வை மகளிர் மகா வித்தி.), இ.சுபாசினி (வல்வை சிவகுரு வித்தி.), ப.அருணா (வல்வை மகளிர் மகா வித்தி.).

தரம் 11- அ.பிருந்தா (வல்வை சிவகுரு வித்தி.). (வ)

## நிர்வாக உத்தியோகத்தர் தெரிவு

வடமராட்சி, ஜன.3

தொண்டமானாறு ஒற்றுமை விளையாட்டுக் கழகத்தின் வருடாந்த பொதுக் கூட்டம் அண்மையில் நடைபெற்றபோது பின்வருவோர் புதிய உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்- ரி.இராஜசிங்கம், உபதலைவர்- த.மணிவண்ணன், செயலாளர் -வி.சுரேஸ்குமார், உப செயலாளர் -எஸ்.செல்வகணேஷ் பொருளாளர்- ரி.பாரத். செயற்குழு உறுப்பினர்களாக வி.சேகர், க.ஜெகநாதன், சோ.இளங்கோ, ந.ரமணன், ம.பிரசாத், கு.தனுஷன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர். (வ-8)

## நியமனம்

நவாலி, ஜன.3

கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரியாக இதுவரை கடமையாற்றிய அன்ரன் சுதாகரன் சுரனுதா சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரியாக கடந்த முதலாம் திகதியிலிருந்து நியமனம் பெற்றுள்ளார். சண்டிலிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரியாக முன்னர் பணியாற்றிய க.சிவபாதம் ஓய்வு பெற்றுச் சென்றுள்ளார். (வ-100)

## சமாதான நீதிவானாக சத்தியப் பிரமாணம்



கொக்குவில் கிழக்கு பிரம்படியைப் பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் கலட்டி அம்மன் வீதியை நிரந்தர வதிவிடமாகவும் கொண்ட தங்கராசன் ஜெகதீஸ்வரன் சமாதான நீதிவானாக யாழ். மாவட்ட நீதிபதி ஏ.ஆனந்தராஜா முன்னிலையில் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

யாழ். இந்து ஆரம்பப்பாடசாலை, யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவனும், யாழ். இந்து ஆரம்பப் பாடசாலையின் சிரேஷ்ட ஆசிரியர் அமரர் மு.தங்கராசனின் புதல்வருமான இவர், கலட்டி கற்பகவிநாயகர், எச்சாட்டி மகாமாரியம்மன் ஆலயங்களின் நிர்வாக சபை அங்கத்தவருமாவார். யாழ்ப்பாணம் ஹற்றன் நஷனல் வங்கியில் இவர் பணியாற்றுகின்றமை குறிப்பிடத் தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களை இனி யார் காப்பாற்றுவார்?





> விடுதலைப்புலிகளின் தளபதியாய் இருந்த கருணாவுக்கோ, முன்னாள் முதலமைச்சரும் தற்போதைய ஜனாதிபதியின் ஆலோசகருமான பிள்ளையானுக்கோ, சர்வதேச ஆயுதக்கடத்தல்களை மேற்கொண்ட கே.பிக்கோ யார் புனர்வாழ்வு கொடுத்தார்கள்

■ கண்ணாயுதன்

யாழ். பல்கலைக் கழக மாணவர்கள் கைது செய்யப்பட்டு ஒருமாதம் கடக்கும் நிலையில் அவர்களை விடுவிப்பதற்கான எந்த நடவடிக்கையும் ஏற்பட்டதாகத் தெரியவில்லை. மாறாகத் தொடர்ந்தும் தடுத்து வைக்கப்படுவார்கள் என்ற தொனியிலேயே யாழ் மாவட்ட இராணுவத் தளபதி ஹத்துருசிங்க கூறியுள்ளார்.

மாணவர்கள் விடுதலை செய்யப்பட வேண்டுமெனப் பல்வேறு கவனயீர்ப்புப் போராட்டங்களை தமிழ் தேசிய கூட்டமைப்பும், தமிழ் தேசிய மக்கள் முன்னணியும், பல்கலைக்கழக சமூகங்களும், கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்களும் முன்னெடுத்தும் இதுவரை அத்தனை அறவழிப் போராட்டங்களையும் அரசு கணக்கில் எடுத்ததாகத் தெரியவில்லை. மாறாக எதிர்மறையான இனவாதக் கருத்துகளை வெளியிடுவதை மட்டுமே காணக்கூடியதாய் உள்ளது.

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தாபய ராஜபக்ஷ, அவர்களைப் புனர்வாழ்வு வழங்கி விடுவிக்கவிருப்பதாகக் கூறிய செய்தியானது மாணவர்களின் சுதந்திர நடவடிக்கையை தடுப்பதற்கான ஒரு செயலாகவே காணமுடிகிறது.

விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களுக்கு மட்டுமே புனர்வாழ்வு வழங்குவதாகக் கூறிய அரசு, தற்போது சாதாரண மாணவர்களுக்கும் புனர்வாழ்வு வழங்க வேண்டும் எனக் கூறியிருப்பது வெலிக்கடை முகாமுக்கு மாணவர்களைத் தொடர்புபடுத்தும் நடவடிக்கை என்பதை புரிந்து கொள்ள முடியும்.

ஏற்கனவே மாணவர்களை கைது செய்தபோது யாழ்ப்பாணத்தில் காரியாலயம் திறந்துள்ள சிறிரெலோ கட்சியின் அலுவலகத்திற்குப் பெற்றோல் குண்டு வீசிய சந்தேகத்தில் இரண்டு மாணவர்கள் கைது செய்யப்பட்டதாகக் கூறப்பட்டது. உண்மையில் அக்காரியாலயத்தில் பல்கலைக்கழக மாணவர்கள் குண்டு வீசுவதற்கான எந்தத் தேவையும் இல்லை. ஆனால், யாழ். பல்கலைக்கழக மாணவர்களைக் கைது செய்வதற்காக சிறிரெலோ காரியாலயத்துக்குத் திட்டமிட்டு அரச படைகளின் ஆதரவாளர்களால் குண்டு வீசப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகமும் மக்கள் மத்தியில் தோன்றியுள்ளது.

சிறிரெலோ கட்சியின் தலைவர் என்பவர் வவுனியாவிலும் ஒரு காரியாலயம் திறந்துள்ளார். இவர் ஏற்கனவே வவுனியாவில் நடைபெற்ற நகரசபைத் தேர்தலில் அரசு ஆதரவுடன் தேர்தலில் போட்டியிட்டுப் படுதோல்வியை தழுவியவர்.

கடந்த 21 ஆம் திகதி தமிழ் தேசியக்கூட்டமைப்பினால் ஒழுங்கு செய்யப்பட்ட உண்ணாவிரதப் போராட்டத்திற்காக ஒழுங்கு செய்யப்பட்ட தந்தைசெல்வா சதுக்கத்தில் அமைக்கப்பட்டிருந்த கூடாரம் முதல் நாளிரவு உடைத்துத் தள்ளப்பட்டிருந்தது. இந்த வேலையைச் செய்தவர்கள் யார் என்பது வெளிப்படையாக மக்களுக்குத் தெரியாவிட்டாலும் உண்மையில் இதைச் செய்தவர்கள் யார் என்பது யாழ். மக்களுக்கு நன்கு தெரியும். இதுவரை மாணவர்களை விடுதலை செய்யுமாறு அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவோ, சிறிரெலோ உதயராசாவோ அரசைக் கேட்கவில்லை ஏன்?

உண்மையில் பல்கலைக் கழக மாணவர்களை விடுவிக்காமல் அதற்கான அறவழிப் போராட்டங்களைச் செய்யும் போது அதனைத் தடுப்பதற்கான நடவடிக்கைகளையே அரசு தொடர்ச்சியாக மேற்கொள்கிறது.

நீங்கள் எந்தப் போராட்டங்களையும் நடத்துங்கள் நாங்கள் ஒன்றுக்குமே அசையமாட்டோம் என்ற மமதையுடன் தான் யாழ். கட்டளைத் தளபதியின் கருத்துகளை அறியமுடிகிறது. குறிப்பாகப் பல்கலைக்கழக மாணவர்களை விடுவிக்கும் வரை பல்கலைக்கழகம் திறக்க முடியாது என பல்கலைக்கழக சமூகம் அறிவித்திருந்த போது அதற்கு கருத்து கூறிய கட்டளைத் தளபதி, பல்கலைக் கழகம் மூடினாலும் மாணவர்களை விடுவிக்க முடியாது எனக் கூறி இருப்பதை அவதானிக்கும்போது தமிழ் மாணவர்களின் கல்வி எப்படிப் போனாலும் தமக்கு அக்கறையில்லை. நாம் நினைத்ததைச் செய்வோம் என்ற தொனியில் கட்டளைத் தளபதியின் கூற்று அமைந்திருந்ததை அவதானிக்கலாம்.

விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் உயிருடன் இருப்பதாக அந்தப் பல்கலைக் கழக மாணவர்கள் நம்பி இருப்பதாகவும் விடுதலைப் புலிகளுடன் இம்மாணவர்கள் தொடர்பு வைத்திருப்பதாகவும் வேண்டா விதமாக சோடிக்கப்பட்ட குற்றச்சாட்டுகள் இம்மாணவர்கள் மீது சுமத்தப்பட்டிருக்கின்றன.

இதற்கான சரியான பதிலை யாழ். பல்கலைக்கழகப் பேராசிரியர் ஒருவர் யாழ். கட்டளை தளபதிக்கு முகத்தில் அறைந்ததை போல் கூறியுள்ளார். இவ்வாறான புத்திஜீவிகளே எமக்கு இன்று தேவை. எல்லா விடயங்களுக்கும் அரசியல்வாதிகள் பதில் கொடுப்பார்கள் என்பதை விட்டு சிவில் சமூகத்திலிருந்து உண்மையான கருத்துகள் வரும்போது, அதை இலங்கை அரசு ஏற்றுக்கொள்ளாவிட்டாலும் சர்வதேச சமூகம் நிச்சயமாக உள்வாங்கும்.

விடுதலைப் புலிகளை உருவாக்கியவர்கள் தமிழ் மக்களல்ல, மாறி மாறி வந்த அரசுகள்தான். தமிழினத்திற்கான ஏற்றுக் கொள்ளக் கூடிய அரசியல் தீர்வை [illegible] காரணமாகவே ஆயுதப் போராட்டம் ஏற்பட்டது என்ற உண்மை நிலையை யாழ். பல்கலைக்கழக பேராசிரியர், கட்டளைத் தளபதிக்கு நேரடியாகவே எடுத்துரைத்தார்.

இதே கருத்தைக் கடந்த 7ஆம் திகதி நாடாளுமன்றத்தில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா. சம்பந்தனும் கூறியிருந்தார். உண்மையை அரசியல்வாதி கூறினாலும் சரி, பேராசிரியர் கூறினாலும் சரி, இனவாத நெஞ்சுடன் பணி செய்யும் இலங்கை நாட்டின் தலைவரானாலும் சரி, சாதாரண படைத்தளபதியானாலும் சரி ஏற்றுக்கொள்ள மாட்டார்கள் என்பது எவருக்கும் தெரியும். ஆனால் சரியான நேரத்தில் சரியாக பதில்களைக் கொடுக்க வேண்டிய தேவை தமிழர் தரப்புக்கு நிச்சயமாக இருக்கின்றது.

போரில் மாண்ட விடுதலைப் போராளிகளான மாவீரர்களுக்கு தீபமேற்றி அஞ்சலி செய்ய இந்த நாட்டில் தடை. ஜே.வி.பி. கிளர்ச்சியாளர்கள் கொலை செய்யப்பட்ட போது அவர்களை நினைவுகூர அனுமதியுண்டு என்ற கருத்தை தமிழ் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களும் மலையகத்தின் தலைவர்களில் ஒருவரான மனோ கணேசனும் அடிக்கடி கூறும் வார்த்தையாகும்.

இந்தக் கோரிக்கையை உதாசீனம் செய்யும் வகையில்

## சர்வதேச சமூகமும் தொடர்ந்து மௌனம்

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஜே.வி.பி. கிளர்ச்சியாளர்களை நியாயப்படுத்தியதுடன் விடுதலைப் புலிகளைப் பயங்கரவாதிகள் எனவும், நாட்டைப் பிரிப்பதற்கான போர் செய்தவர்கள் எனவும், அவர்களை நினைவு கூர முடியாது எனவும் கூறிய கருத்தானது இனவாதத்தின் வெளிப்பாடே அன்றி வேறில்லை.

விடுதலைப் புலிகள் தமிழர்கள், ஜே.வி.பி சிங்களவர்கள் தமிழர்களை நினைவுகூர முடியாது; சிங்களவர்களை நினைவுகூரலாம். ஒருவேளை விடுதலைப் புலிகள் சிங்களவர்களாக இருந்திருந்தால் ஜனாதிபதி இந்தக் கருத்தைக் கூறியிருக்கமாட்டார்.

போரில்வெற்றியீட்டியசிங்களப் படையினருக்குப் பாராட்டு விழா நடத்தலாம்; இறந்த படைசிப்பாய்களை நினைவுகூரலாம். அவர்கள் எல்லாம் தமிழர்கள் அல்ல. விடுதலைக்கான போரை நடத்திமாண்டவர்களை நினைவுகூரமுடியாது. அப்படி செய்தால் [illegible] இது தான் நீதி.

விடுதலைக்கான போரில் மாண்டவர்களை எந்தத் தமிழனும் பயங்கரவாதிகளாகக் கருதமாட்டான். அவர்களை நினைவு கூர வேண்டியவன் தமிழன் மட்டுமே. தமிழன் நினைவுகூர உரிமை இல்லை என்பதால் சட்டங்கள் தடுத்தாலும் தன் மனதால் என்றும் நினைத்துக் கொண்டே இருப்பான். அதை எவராலும் தடுக்க முடியாது.

இலங்கையில் மட்டும் இந்த தடை இருந்தாலும் அனைத்துலகத்தில் மிகவும் எழுச்சி பூர்வமாக மாவீரர் நாள் அனுஷ்டிக்கப்படுவதை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவோ, அவரின் சகோதரர் கோத்தாபய ராஜபக்ஷவோ தடுக்கமுடியாது.

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் இம்முறை மட்டும் மாவீரர் தினத்தில் விளக்கேற்றவில்லை. தொடர்ச்சியாக 2009 இல் இருந்து யாழ் பல்கலைக்கழகத்தில் விளக்கேற்றி அஞ்சலி செலுத்தியே வருகின்றனர்.

அடக்குமுறை உள்ளவரை தொடர்ச்சியாக இது இடம்பெறும் என்பதை அனைவரும் உணர வேண்டும்.

அவசரகாலச் சட்டம் இல்லாத சூழலில் பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் மாணவர்கள் கைது செய்யப்பட்டு தற்போது வெலிக்கடை புனர்வாழ்வுமுகாமில் அவர்களுக்குப் புனர்வாழ்வு வழங்கப்படுவதாக அரசு கூறுகிறது.

அப்படியானால், விடுதலைப் புலிகளின் தளபதியாய் இருந்த கருணாவுக்கோ, முன்னாள் முதலமைச்சரும் தற்போதைய ஜனாதிபதியின் ஆலோசகருமான பிள்ளையானுக்கோ, சர்வதேச ஆயுதக்கடத்தல்களை மேற்கொண்ட கே.பிக்கோ யார் புனர்வாழ்வு கொடுத்தார்கள்?

கருணாவுக்கு நாடாளுமன்றத்தில் புனர்வாழ்வும், பிள்ளையானுக்கு கிழக்கு மாகாணசபையில் புனர்வாழ்வும், கே.பிக்கு நட்சத்திர விடுதியில் புனர்வாழ்வும் கொடுக்கும் அரசு, அப்பாவி மாணவர்களின் கல்வியைச் சீர்குலைத்து அவர்களை வதைமுகாமில் அடைத்து வைத்துக் கொண்டு புனர்வாழ்வு என சர்வதேசத்துக்குக்காட்ட முயல்கிறது.

மாணவர்களை விடுவிக்கக் கோரி பல்வேறுபட்ட போராட்டங்களைத் தாயகத்திலும், புலம்பெயர் தேசமெங்கும் எமது உறவுகள் மேற்கொள்ளும் போராட்டங்களையும் கணக்கில் எடுக்காமல் 'செவிடன் காதில் ஊதிய சங்கு' போன்று சர்வதேச சமூகமும் இருப்பது தான் வேதனையாகவுள்ளது.

அறவழிப்போராட்டம் எதையுமே மதிக்கும் நாடாக இலங்கை இல்லை என்பது பாலர் வகுப்பு மாணவர் தொடக்கம் படுக்கையில் இருக்கும் தாத்தா வரையும் தெரியும். ஆனால் அறவழிப் போராட்டங்களை செய்வதன் நோக்கம் இலங்கை அரசை விழிக்கவைப்பதற்கு மட்டுமல்ல, சர்வதேச சமூகம் உண்மை நிலையை உணர்ந்து இலங்கை அரசுக்கு அழுத்தங்களைக் கொடுப்பதற்காகவே இவ்வாறான போராட்டங்களைத் தமிழ் சமூகம் முன்னெடுக்கிறது. இருந்த போதும் சர்வதேச சமூகமும் தொடர்ச்சியாக மௌனம் காப்பதானது, இலங்கை அரசின் அடாவடித்தனங்களுக்குத் துணைபோவதாகவே கருதமுடியும்.

சிலவேளை இவ்வாறான போராட்டங்களைத் தமிழ் சமூகம் முன்னெடுக்காமல் விட்டால், ஒரு வேளை பல்கலைக்கழக மாணவர்கள் விடுவிக்கப்பட்டிருப்பார்கள் என்ற கருத்தும் சிலரால் முன்வைக்கப்படுவதை அறியக் கூடியதாய் உள்ளது. இதில் சில நியாயங்களும் இருக்கத்தான் செய்கின்றன.

போர் வெற்றியை மட்டும் முதலீடாகக் கொண்டு ஆட்சி செய்யும் மஹிந்த குடும்பம் தமிழர் தரப்பால் முன்னெடுக்கும் எந்தப் போராட்டங்களையும் அலட்சியம் செய்வதும், அவ்வாறான போராட்டங்களுக்கு செல்வோர் மீது கழிவுநீர் ஊற்றுவதும், வாகனங்களைத் தாக்குவதும், போராட்டத்தை குழப்புவதையும் நாம் கண்டோம். போராட்டத்திற்கான உண்மைநியாயங்களைஉள்வாங்கி

(21 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தரைக்கீழ் நீருக்கு உயிர் கொடுப்போம்

■ காயத்ரி விஜயரட்ணம்,
(திட்டமிடல், புவியியல் துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.)

வரலாற்றுக் காலம் முதல் மனித வாழ்வுக்கும், வளத்திற்கும் அடிப்படையாக இருந்து வரும் வளங்களில் தரைக்கீழ் நீர் வளம் முக்கிய பங்கு வகிக்கின்றது. இலங்கையைப் பொறுத்தவரை புத்தளத்திலிருந்து பரந்தன், முல்லைத்தீவை இணைக்கும் கோட்டுக்கு வடமேற்காகவுள்ள பகுதிகள் மயோசின்கால சுண்ணக்கல்பாறையமைப்பைக் கொண்டுள்ளதுடன் நீரை உட்புகவிடும் மண்ணினையும் கொண்டு விளங்குகின்றது. வடமாகாணத்தின் மொத்தக் குடித்தொகையில் 70சதவீதத்தினைக் கொண்டுள்ள யாழ்குடாநாட்டினைப் பொறுத்தவரை மனிதனது அனைத்து நடவடிக்கைகளும் தரைக்கீழ்நீர் வளத்தை அடிப்படையாகக் கொண்டே மேற்கொள்ளப்படுகின்றது. கிறிஸ்துவுக்கு முற்பட்ட காலத்திலிருந்து இன்றுவரை குடிநீர் தேவை, விவசாயத் தேவைகளுக்காக அதிகளவான நீர் பயன்படுத்தப்பட்டு வருகின்றது. இவ்வாறு அதிகரித்து வரும் அளவுக்கதிகமான நீர்ப்பாவனை காரணமாக இன்று யாழ். குடாநாட்டின் தரைக்கீழ் நீருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளமை ஆய்வுகள் மூலம் அறியவந்துள்ளது. 1967இல் ஆய்வினை மேற்கொண்ட இஸ்ரேலிய நிபுணர்கள் "இன்னும் இருபத்தைந்து வருடங்களில் யாழ். குடாநாடு பாலைவனமாகும்" என எச்சரித்துச் சென்றுள்ளனர். இருந்தும் எமது முன்னோர்கள் இவ் எச்சரிக்கையை அலட்சியம் செய்ததன் விளைவே 45 வருடங்கள் கடந்துவிட்ட நிலையிலும் கூட நாம் இப்பிரச்சினைக்கு தீர்வுகாண முடியாதவர்களாக இருக்கின்றோம்.

அதிகரித்து வரும் குடித்தொகைப் பெருக்கமும், தேவைகளின் அதிகரிப்பும் நீருக்கான கேள்வியை தூண்டிவிட்டுள்ளது. இன்று வீட்டுக்கு வீடு வாசல்படி போல் ஒவ்வொரு வீட்டுக்கும் கிணறோ அல்லது குழாய்க் கிணறோ கட்டாயம் இருக்கும். அதேபோல் தோட்ட நிலங்களிலும் கூட குறைந்தது ஒரு கிணறாவது இருக்கும். யாழ். குடாநாட்டைப் பொறுத்தவரை 66,000 - 70,000 வரையான கிணறுகள் வீட்டுத் தேவைக்காகவும், 18,000 - 20,000 கிணறுகள் விவசாயத் தேவைக்காகவும் பயன்படுத்தப்படுகின்றன. நீரின் நுகர்வு அதிகரித்து வருவதனால் அதிகமான நீரிறைப்புக் காரணமாக வறண்ட மாதத்தில் உவர்த்தன்மையை யாழ்குடாநாட்டின் 23வீதம் பரப்புக் கொண்டிருக்கும். மார்கழியில் இந்நிலை 10 வீதம் ஆகக் குறைவடையினும் 23வீதம் பரப்பு உப்பு நீரைக் கொண்டுள்ளமையால் எப்படியும் நீர்வளம் தவிர்ந்தே தீரும். யாழ்குடாநாட்டின் தீவுப்பகுதிக் கிணறுகள், கரையோரக்கிணறுகள் பலவும் ஏற்கனவே உவராகிவிட்டன. தற்போதும் கூட ஏனைய கிணறுகள் உவராகி வருகின்றன.

நைத்ரசன் செறிவு அதிகரிப்பது கூட இன்று பெரிய பிரச்சினையாக உருவெடுத்து வருகின்றது. யாழ்.மாவட்டத்தில் அனேகமானோர் விவசாயத்தில் ஈடுபடுவதனால் அதிகளவான செயற்கை உரங்களையும் கிருமிநாசினிகளையும் பாவிக்கின்றனர். இதனால் நீர்நஞ்சாவதுடன் நைத்திரேற் செறிவும் அதிகரிக்கின்றது. வழமையாக ஒரு லீற்றரில் 100வீதம் - 150வீதம் நைத்திரேற்றுக் காணப்பட வேண்டும். ஆனால் இங்குள்ள விவசாயக் கிணறுகளில் 50மூ ஆனவை ஒரு லீற்றருக்கு 45 - 150 அபநைத்திரேற்றைக் கொண்டுள்ளது. உதாரணமாகக் கூறின் பருத்தித்துறையின் சில பகுதிகளில் ஒரு லீற்றருக்கு 122 - 174மூஷனஜெனிடுவேறுபடுகின்றது. இதனைப் போலவே கிணற்றுக்கும் மலசலகூடத்திற்குமான தூரத்தைப் பொறுத்தும் நைத்திரேற்றின் தன்மை தீர்மானிக்கப்படுகின்றது. யாழ்மாநகரசபையை அண்டிய பகுதிகளில் சனத்தொகை அதிகமாக உள்ளமையால் நிலப்பரப்புக் குறுக்கமடைவதுடன், கிணற்றுக்கும் மலசலகூடத்துக்குமான தூரம் குறுக்கமடைகின்றது. இதனால் இப்பகுதி நீர் மஞ்சள் நிறமாக மாறும் தன்மை அவதானிக்கப்பட்டுள்ளது.

இன்னுமொரு மிகப்பெரிய அச்சுறுத்தலை ஏற்படுத்தும் அம்சம் யாதெனில், யாழ்குடாநாட்டின் வலிகாமம் வடக்குப் பிரிவு போருக்குப் பிந்திய இன்றைய காலம் வரை, உயர்பாதுகாப்பு வலயமாக பிரகடனப்படுத்திய இடமாக உள்ளதுடன் இப்பகுதியிலிருந்தே சத்தம் சந்தடியில்லாமல் அதிகளவான சுண்ணக்கற்கள் அகழப்பட்டு தென்னிலங்கைக்குக் கொண்டு செல்கின்றனர். குறிப்பாக கீரிமலை தொடக்கம் மாவிட்டபுரம் வீதியின் இருமருங்கிலும் அகலமாகவும், ஆழமாகவும் சுண்ணக்கல் அகழப்படுவதால் நீர்வெளித்தோன்றுவதுடன் கோடை காலங்களில் கடல்நீர் உட்புகும் அபாயம் ஏற்படுகின்றது. இந்தச் சுண்ணாம்புக் கற்பாறையைப் பொறுத்தவரை 100 கன அடி அளவுள்ள பாறை 10 கன அடி நீரினை உறிஞ்சி வைத்திருக்கும் தன்மையுடையதால் ஒரு கியூப் கல் உடைத்து எடுக்கப்படும் போது 10 கன அடி நீர் (62.4 கலன்கள்) வெளியேற்றப்படும். இவ்வாறு செல்லுமாயின் நீண்டகாலப்போக்கில் நீர்ப்பற்றாக்குறையை எதிர்நோக்குவதுடன், உவர்நீர் பரவவும் வழிசமைக்கின்றது. இதனைப் போலவே புனரமைப்புத் தேவைகள், புதியகட்டடத்தேவைகளுக்காக வகைதொகையின்றி மணலகழ்வு இடம்பெற்று வருகின்றது. குறிப்பாக நாகர்கோவில், குடத்தனை, அம்பன், அரியாலைப் பகுதி, சாட்டி, பூநகரி, மன்னார், பிரதேசங்களில் இவை அதிகமாக இடம்பெறுகின்றன. இதனால் நிலங்கள் ஆழமாக்கப்படுவதால் கடல்நீர் உட்புகுவதற்கான வாய்ப்புக்கள் ஏற்பட்டுள்ளன. இவ்வாறு அகழப்படும் மணல் சில வெளிநாட்டு நிறுவனங்களுக்கு தாரைவார்த்துக் கொடுக்கப்படுவதால் எதிர்காலத்தில் இந்த வளங்கள் இல்லாமல் போவதுடன் சுற்றாடலும் பாதிக்கப்படும்.

வடமாகாணத்தில் மன்னர் காலத்திலிருந்து உருவாக்கப்பட்ட குளங்கள் பல காணப்படுகின்ற போதும் அவை முறையான பயன்பாட்டிற்கு உட்படுத்தப்படாமையால் மாசடைந்து வருகின்றன. யாழ்மாவட்டத்தை எடுத்து நோக்கின் 650குளங்களும், 440 கேணிகளும் எந்தவித

## நீருக்கான கேள்வி துண்டாடப்படுகிறது

புனரமைப்புக்கும் உட்படுத்தப்படாமல் மாநகரக் கழிவுகளாலும், நச்சுக்கழிவுகளாலும் நிரம்பி வழிகின்றன.

குடிநீர் கிணறுகளுக்கும் இதே நிலையே ஏற்பட்டு வருகின்றது. அண்மையில் ஏற்பட்ட பிரச்சினைகளில் ஒன்று சுன்னாகம் பிரதேசத்திலுள்ள மின்நிலையத்திலுள்ள ஜெனரேற்றர்களுக்குப் பயன்படுத்தப்படும் ஒயில் அப்பகுதியின் அயலிலுள்ள கிணற்று நீருடன் கலப்பதாக சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. இதனால் நீரின் நிறம் மாற்றமடைவதுடன் தற்காலத்தில் இதன் தாக்கம் சரியாக உணரப்படாதுபோயினும் நீண்டகாலத்தில் பெரிய விளைவினை மக்கள் சந்திக்க நேரிடும்.

இதனைக் குறைப்பது தற்கால சந்ததியினராகிய நம் ஒவ்வொருவரினதும் கடமையாகும். தரைக்கீழ் நீர் தொடர்பான பிரச்சினைக்கு உயிர் கொடுக்கும் பட்சத்திலேயே அடுத்தடுத்த சந்ததியினரும் அதனை அனுபவிக்க வழியேற்படும். எப்போதும் "தன்கையே தனக்குதவி" என்பதற்கிணங்க நிலத்தடி நீரை சேமிப்பதற்கான சகல முயற்சிகளையும் இந்தக் கணப்பொழுதிலிருந்து மேற்கொள்ள வேண்டும். அதனடிப்படையில் பின்வரும் ஆலோசனைகள் முன்வைக்கப்படுகின்றன.

வருடந்தோறும் பெய்யும் மழை நீரில் அதிகளவான நீர் எம் நிலப்பரப்பை விட்டு வீணே கடலுடன் சங்கமமாகின்றது. இதனைத் தடுப்பதற்கு மழை அதிகமாகப் பெய்யும் காலங்களில் மழைநீரை சேமிக்க வேண்டும். குளங்களினை புனரமைத்தும், தூர்வையை அகற்றியும், வீட்டு வளவுகளில் இடவசதிக்கேற்றவாறு ஒரு சிறிய அகழியை அமைத்தும் கூட நீரைத் தேக்கலாம்.

முறையற்ற விவசாய நடவடிக்கை, உரப்பாவனை என்பவற்றைத் தடுத்தல். இதற்காக எமது பிரதேசத்திலுள்ள ஆட்டெரு, மாட்டெரு, கூட்டெரு, இலைகுழைகள் போன்ற கழிவுகளைப் பயன்படுத்தி மீண்டும் பழைய விவசாய முறைக்கு முற்றுமுழுதாக மாறாவிட்டாலும் ஓரளவாவது மாறுவதற்கு முயற்சிக்க வேண்டும்.

ஒருங்கிணைந்த குழாய் மூல கழிவகற்றலை மேற்கொள்வதுடன் கிணற்றுக்கருகில் மலசலகூடங்கள் அமைப்பதைத் தடுத்தல்.

சுண்ணக்கல் அகழ்வு, மணல் கழ்வோருக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுத்தல்.

கடல்நீர் உட்புகாமலும், மழைநீர் வெளிச்செல்லாமலும் அணைகள் கட்டப்பட்டு பராமரிக்கப்பட வேண்டும். யாழ்குடாநாட்டைப் பொறுத்தவரை நீண்ட காலத்திட்டத்தின் அடிப்படையில் நன்னீர் ஏரிகளாக மாற்றக் கூடிய 13 கடனீரேரிகளும், 33 உவர்நீர்த் தடுப்புத் திட்டங்களும் உள்ள போதிலும் 13 கடனீரேரிகளில் ஆனையிறவு மேற்கு, கிழக்கு கடனீரேரிகளும், உப்பாறு, தொண்டமனாறு கடனீரேரிகளும் அதிக செலவின்றி நன்னீரேரியாக மாற்றக் கூடிய வாய்ப்பினைக் கொண்டுள்ளன. அதேபோல மண்டைதீவையும், வேலணையையும் பிரிக்கும் கடனீரேரி, பண்ணை, அராலி தாம்போதிகளை முற்றாக மூடுவதன் மூலம் யாழ் நகரத்தின் தென்மேற்குப்பகுதியில் பெரிய நன்னீர்த்தேக்கத்தை ஏற்படுத்தலாம். இவற்றை செயற்படுத்தின் நன்னீர் வளம் பெருகுவதோடு நிலப்பரப்புக்களில் உவர்த்தன்மை நீக்கப்பட்டு அவற்றை வளமான விளைநிலங்களாக மாற்ற முடிவதால் இத்திட்டம் யாழ்குடாநாட்டுக்கு ஓர் வரப்பிரசாதமாக அமையும் எனலாம்.

நீர் இறைக்கும் போது இரவு வேளையில் இறைப்பது சிறந்த வழியாகும். பகலில் இறைக்கும் போது நீர் வெளியேறும் அளவு அதிகரிப்பதுடன் உவர்நீர் உட்புகும் வாய்ப்பு அதிகரிக்கும். இதனால் இரவில் இறைப்பது சிறந்த வழியாகும். சிலவேளைகளில் இரவில் இறைக்க முடியாத சந்தர்ப்பங்களில் பகலில் இறைப்பதாயின் இரண்டு மணி நேரத்துக்கு ஒருமுறை சிறிய இடைவெளிவிட்டு தொடர்ச்சியற்ற நிலையில் இறைத்தல் நீர்ப் பாதுகாப்புக்கு வழிவகுக்கும்.

வற்றமுடியாத பெரிய கிணறுகளிலிருந்து நீரை எடுத்து விநியோகித்தல். உதாரணமாக நோக்கின் யாழ்ப்பாணத்தில் உள்ள நிலாவரைக் கிணற்றிலிருந்து நாள் ஒன்றுக்கு பத்து மணித்தியாலங்களில் 30,000 - 40,000 கலன் நீரை பெறக்கூடியதாக உள்ளது என ஆய்வுகள் மூலம் அறியவந்துள்ளது. எனவே இதனை முறையாக மேற்கொள்ளின் நீர்ப் பிரச்சினைக்கு ஓரளவாவது தீர்வு காணலாம்.

தரைக்கீழ் நீரானது குகை வழிகள் மூலம் கடலை சென்றடையும் நிலையைத் தடுப்பதற்கு அனைத்துக் குகைவழிகளும் கண்டறியப்பட்டு அவற்றை நிலத்தின் கீழாக அணைகட்டித் தடுக்கப்பட வேண்டும். கீரிமலைக் கேணிக்கு குகையூடாக வரும் நீர் இதற்கு சிறந்த உதாரணமாகும். அத்துடன் வழுக்கையாறு, தொண்டைமானாறுப் பகுதிகளில் உவர்நீரிலிருந்து நன்நீரை ஒரு பகுதியாக்கி பாவனைக்கு ஏற்றால்போல் ஆக்கப்பட்டுள்ளது. இதற்கு பொது மக்களின் பங்களிப்பு தேவைப்படுகின்றது.

பூநகரிப் பிரதேச சபை குடிதண்ணீருக்கு இரண்டு ரூபாய் வரி அறவிடுவது போல் யாழ் மாநகரசபைக்குட்பட்டவர்களிடமிருந்தும் வரி அறவிடுதல் வேண்டும். இழந்துகொண்டிருக்கும் தரைக்கீழ் நீர் வளத்தை இனியேனும் பேணுவதற்கு ஒன்றிணைந்து உழைப்போம். ★





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிறவி என்னும் பெருங்கடல்

உலகில் வாழும் உயிர்களுக்குப் பிறவிகள் ஏராளம். ஒவ்வொரு உயிர்க்கும் பிறவிகள் பல.

**''எழுகடல் மணலை அளவிடின்**
**அதிகம் எனதிடர்ப் பிறவி''**

என்றார் அருணகிரிநாதர்.

**''புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப்**
**பல்மிருகமாகிப் பறவையாய் பாம்பாகிக்**
**கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்**
**வல்லசுரராகி முனிவராய்த் தேவராய்ச்**
**செல்லாஅ நின்ற இத் தாவர சங்கமத்துள்**
**எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தே னெம்பெருமான்''**

என்கிறார் மாணிக்கவாசகர்.

ஓரறிவு முதல் ஆறறிவு வரையுள்ள உயிர்கள் இம் மண்ணில் வாழ்கின்றனர்.

அத்தனை பிறவியும் ஓர் உயிர்க்குண்டு.

ஆனால் இறைவனை எளிதில் அடைந்து, பிறவியற்ற நிலையை அடையும் பேறு மனிதப் பிறவிக்கே உண்டு.

இந்த மனிதப் பிறவியைத் தவறவிட்டுவிட்டால் அடுத்து என்ன பிறவி வருமோ?

''எண்ணரிய பிறவிதனில் மானிடப் பிறவிதான்
யாதினும் அரிதரிது காண்
இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ?
ஏதுவருமோ? அறிகிலேன்''

எனத் தாயுமானவர் பிறவியைப் பற்றி எண்ணி அஞ்சுகிறார்.

ஆதலால் உனக்குக் கிடைத்திருப்பது நல்ல வாய்ப்பு.

இந்த மனிதப் பிறவியை இறைவனை அடைவதற்கே பயன்படுத்து.

நீ மனிதனாக இப்புவியில் பிறந்திருப்பது, முற்பிறப்பில் செய்த பாவ புண்ணிய பலனே.

புண்ணிய பலன் அதிகம் இருந்தால் தான் மனிதப் பிறவி வாய்க்கும். எனினும் முற்பிறப்பில் செய்த பாவங்கள், இப்பிறப்பில் உன்னைக் கஷ்டப்படுத்தும்.

கிடைத்தற்கரிய இந்த மனிதப் பிறவியை நல்வழியில் பயன்படுத்தி இறைவனை அடைய முயற்சி செய். பாவம், புண்ணியம் இரண்டும் பிறப்புக்குக் காரணம்.

இந்த இரண்டையும் இறைவன் வசம் ஒப்படைத்து விடு.

இரண்டு வினைகளையும் இறைவன் திருவடியில் சமர்பித்துவிட்டால் உன்னைத் துன்பங்கள் தீண்டா.

'இருள் சேர் இருவினையும் சேரா இறைவன்
பொருள் சேர் புகழ்புரிந்தார் மாட்டு'' என்பது வள்ளுவம்.

இனி பிறவி வேண்டாம்.

அதற்கு இறைவனைச் சரணடைவதே வழி.

ஒவ்வொரு ஜீவனுக்கும் முத்தியளிக்கவே இறைவன் காத்திருக்கிறான்.

சீவன் சிவனை அடைவதே முத்தி.

ஆனால், நீயோ கிடைத்த மனிதப் பிறவியை வீணடித்துக்கொண்டிருக்கிறாயே!

உனக்குக் கிடைத்திருக்கின்ற அறிவை இறைவனை அடைவதற்காகப் பயன்படுத்து.

பிறவி என்பது கடப்பதற்கு அரிய கடினமான பெருங்கடல்.

இறைவனைச் சரணடைந்தால் பிறவிக் கடலை எளிதாகக் கடக்கலாம்.

**'பிறவிப் பெருங்கடல் நீந்துவார் நீந்தார்**
**இறைவனடி சேராதார்''**

என்பது வள்ளுவர் வாக்கு.

பிறவிப் பெருங்கடலை நீந்திக் கரையேற இறையருளே தெப்பமாகப் பயன்படும்.

இனி பிறவி வேண்டாம் என்று இறைவனை இறுகப் பற்றிவிடு.

முத்தி உனக்கு நிச்சயம்.



**பரமஹம்ஸ ஸ்ரீமத் பரத்வாஜ் ஸ்வாமிகள்**

# முதியோர் நலன்களைப் பேணும் அத்தியடி மாதர் கிராம அ.சங்கம்




(கடந்தவாரத் தொடர்ச்சி......)

லக்ஸ்மன்

சிறுகைத்தொழில் பயிற்சிகள் மட்டுமே வாழ்வாதாரத்துக்குப் போதும் என்பதால் வீட்டுத் தோட்ட நடவடிக்கைகளிலும் குடும்பப் பெண்கள் தமது ஓய்வு நேரத்தைச் செலவிடுவதன் மூலம், நச்சுத் தன்மையற்ற உணவுப் பொருள்களைப் பயன்படுத்த வாய்ப்புகள் உள்ளன.

மத்திய கல்லூரியில் நடைபெற்ற விஞ்ஞான தொழில் நுட்பக் கண்காட்சியில் எமது உறுப்பினர்களால் உற்பத்தி பண்ணப்பட்ட பொருள்கள் காட்சிப்படுத்தப்பட்டு அதற்கு இரண்டாவது இடம் கிடைத்ததும் குறிப்பிடத்தக்கது. சிறிய அளவிலான கட்டுமான ஒப்பந்தங்களைப் பெற்று நிறைவு செய்து வருகின்றது.

மகளிர் தினம், முதியோர் தினம் பயனுள்ள வகையில் கொண்டாடப்படுகின்றன. மகளிர் தினத்தில் மகளிரின் தற்போதைய பிரச்சினைகள் எதிர்காலத்தில் அவர்கள் எடுக்க வேண்டிய செயற்பாடுகள் குறித்த அறிவுரைகளை துறைசார் பெண்களிடம் பெற்று ஏனையவர்கள் தெரிந்து கொள்ள கூடியதாக இருக்கின்றது.

முதியவர்கள் பாதுகாக்கப்பட வேண்டியவர்கள். முதியோர்களைப் பராமரிப்பதில் பெண்களின் பங்களிப்புகள் தொடர்பாக கலந்துரையாடப்படுவதுடன் அவர்களுக்கு உடைகளும் தொகைப் பணமும் வழங்கிக் கௌரவிக்கப்படுகின்றனர். சுய தொழில் முயற்சியில் பிரதேச அபிவிருத்தி வங்கியும் எமக்கு நிதி உதவிகளைக் கடனாக வழங்கியுள்ளது. கடன் உதவிகளை மீளச் செலுத்துவதிலும் சங்க உறுப்பினர்கள் அக்கறை காண்பிக்கின்றனர். இந்தப் பகுதி சுகாதார பரிசோதகர் விஜயகுமார் ஊடாக தேவைப்பட்ட மக்களுக்கு நுளம்பு வலைகள் வழங்கப்பட்டன. பிரதேச செயலக மகளிர் பொறுப்பாளர் செல்வி உதயராணி சங்க உறுப்பினர்களில் இருபது பேருக்கு சுய தொழில் முயற்சிக்கான கடன் உதவிகளைப் பெற்றுக் கொள்ள உதவியிருந்தார்.

காளான் செய்கை முக்கியமான ஒன்று. அதுதொடர்பாக சங்கக் கோரிக்கையை ஏற்று யாழ். விவசாயத் திணைக்களம் அதற்கான பயிற்சிகளை வழங்கியதுடன் காளான் கூடுகளையும் உதவியாக வழங்கியுள்ளனர். சிறுவர்களது விளையாட்டுத் துறையிலும் முடிந்த உதவிகளை குறித்த மாதர் சங்கம் வழங் கியுள்ளது.

காளான் செய்கை முக்கியமான ஒன்று. அதுதொடர்பாக எமது கோரிக்கையை ஏற்று யாழ்.விவசாயத் திணைக்களம் எமக்கான பயிற்சிகளை வழங்கியதுடன் காளான் கூடுகளையும் உதவியாக வழங்கியுள்ளனர். சிறுவர்களது விளையாட்டுத் துறையிலும் முடிந்த உதவிகளை குறித்த மாதர் சங்கம் வழங்கியுள்ளது.

சிறுவர் தின விளையாட்டு விழாவுக்கு மாதர் சங்கம் கடந்த முறை ரூபா 16 ஆயிரம் வழங்கி உதவியது. ஒவ்வொரு துறையிலும் இந்த மாதர் சங்கப் பெண்கள் சிறந்த அறிவைப் பெற்றிருக்க வேண்டும் என்பதிலும் பயிற்சி பெற்றவர்களாக விளங்க வேண்டும் என்பதிலும் சங்கத்தின் அனைத்து உறுப்பினர்களுக்கும் அக்கறை உண்டு. சங்கத்தின் முன்னைய தலைவர்கள் அதன் வளர்ச்சிக்கு ஆரம்பகாலம் முதலே தேவையான முயற்சிகளை எடுத்திருந்ததுடன் தற்போதும் தமது முழு ஒத்துழைப்பையும் வழங்குகின்றனர்.

தற்போது பெண்களுக்கு எதிரான வன்முறைகள் அதிகரித்துள்ளன. இவ்வாறான அசம்பாவிதங்களில் இருந்து அவர்கள் தங்களைப் பாதுகாத்துக் கொள்ளக் கூடியவர்களாக இருத்தல் வேண்டும். சிறுவர் துஷ்பிரயோகம், பாலியல் பலாத்காரங்களில் இருந்து அவர்களைப் பாதுகாத்துக் கொள்ள பெண்கள் மத்தியில் விழிப்புணர்வுக் கருத்தரங்குகளை மாதர் சங்கங்கள் நடத்த வேண்டும் என யாழ்ப்பாணம் பிரதேச செயலர் திருமதி சுகுணரதி தெய்வேந்திரம், கிராம உத்தியோகத்தர் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் ஆகியோர் கருதுகின்றனர். அடுத்த ஆண்டில் இருந்து அதற்கான விழிப்புணர்வுக் கருத்தரங்குகளையும் நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்த முயற்சிகளுக்கு பிரதேச செயலர், பாரம்பரிய கைத்தொழில் அமைச்சர், தொண்டு நிறுவனங்கள், பிரதேச மக்களின் உதவியும் ஒத்துழைப்பும் நல்ல முறையில் வழங்கப்படுகின்றன.

அத்தியடிப் பகுதியின் வளர்ச்சிக்காக யுவதிகளின் வாழ்வாதாரத்திற்காக எதிர்காலத்தில் மேலும் பல திட்டங்களை முன்னெடுப்பதே சங்கத்தின் தற்போதைய இலக்காக உள்ளது.

நாங்கள் எல்லோருமே ஒருங்கிணைந்து தான் எமது எதிர்கால வளர்ச்சியை நோக்குகின்றோம். தற்போது இந்தப் பகுதியினரின் பாதுகாப்புக்கென ஒரு குழு உள்ளது. அதில் இந்தச் சங்கமும் உள்ளது. இதன் மூலம் எமது அத்தியடிப் பகுதியின் வளர்ச்சிக்காக யுவதிகளின் வாழ்வாதாரத்திற்காக எதிர்காலத்தில் மேலும் பல திட்டங்களை முன்னெடுப்பதே தற்போதைய எமது இலக்காக உள்ளது. எல்லோருமே ஒருங்கிணைந்து தான் எதிர்கால வளர்ச்சி திட்டமிடப்படுகிறது.

சங்கத்தின் பதிவு இலக்கம் என் பி/ டீ. ஆர்.டி/ ஜே 36/ ஜே 78/ ஜே 213 . அத்தியடி வளர்ச்சியடைந்த பகுதியாக எதிர்காலத்தில் உருவாகும் என்பதற்கு இந்தப் பகுதி மாதர் கிராம அபிவிருத்திச் சங்கம் அடையாளமாக இருக்கும்.

தற்போது சங்கத்தின் பிரதான தேவைகளுக்கு அத்தியடி சிதம்பர நடராஜர் வீரகத்தி விநாயகர் மண்டபம் பயன்படுத்தப்படுகின்றது. இதற்கென ஒரு சொந்தக் கட்டடம் இல்லாமை ஒரு குறையாகும். பணிகளுக்கான வருமானங்களை சேவை உள்ளம் கொண்ட மக்கள் அவ்வப்போது உதவுகிறார்கள். ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சம்மாந்துறை பிரதேச செயலக உத்தியோகத்தர்களின் சத்தியப்பிரமாண நிகழ்வு நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது. பிரதேச செயலர் ஏ.மன்சூர் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் உத்தியோகத்தர்கள் சத்தியப்பிரமாணம் செய்கின்றனர்.

## சம்மாந்துறை மக்களுக்கு காணி உத்தரவுப் பத்திரங்கள்

மட்டக்களப்பு,ஜன.3

சம்மாந்துறைப் பிரதேசத்தில் காணி உத்தரவுப்பத்திரம் வழங்கப்படாமல் இருந்த குடும்பங்களுக்கு காணி உத்தரவுப்பத்திரங்கள் வழங்கப்பட்டன.

இந்தப் பத்திரங்கள் வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை சம்மாந்துறை பிரதேச செயலக கேட்போர்கூடத்தில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் 120 குடும்பங்களுக்கு காணி உத்தரவுப் பத்திரங்கள் வழங்கப்பட்டன.

பிரதேச செயலர் ஏ.மன்சூர் தலைமையில் நடைபெற்ற இந்தநிகழ்வில், அம்பாறை மாவட்ட அரச அதிபர் நீல் டி அல்வீஸ், மாவட்ட சமுர்த்தி உதவி ஆணையாளர் அனுருத்த பியதாச, உதவிப் பிரதேச செயலர் ஏ.எம்.அப்துல் லத்தீப் உட்பட பலர்கலந்துகொண்டனர்.

இதேவேளை சமூகசேவைத் திணைக்களத்தால் வலது குறைந்தோர்களுக்கு மாதாந்தம் 3000 ரூபா வழங்கும் வேலைத் திட்டத்தின் கீழ் தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கான காசோலைகளும் வழங்கப்பட்டன. (ச)

# எமக்குரிய கட்டடத்தை எம்மிடம் ஒப்படையுங்கள்

### அல் இக்பால் மாணவர்கள் ஆர்ப்பாட்டம்

மட்டக்களப்பு,ஜன.3

மட்டக்களப்பு மத்தி கல்வி வலயத்தின் கீழ் உள்ள புதிய காத்தான்குடி றிஸ்வி நகர் அல் இக்பால் வித்தியாலய மாணவர்கள் நேற்று புதன்கிழமை காலை ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்தப் பாடசாலை சுனாமி இடரால் சேதமடைந்திருந்தது. சேதமடைந்த கட்டடம், நோர்வே நாட்டு நிதியுதவியுடன் நிர்மாணிக்கப்பட்டு குறித்த பாடசாலைக்கு 2007 ஆம் ஆண்டு வழங்கப்பட்டது.

இந்தப் பாடசாலையின் புதிய கட்டடம் தேசிய தொழிற்பயிற்சி அதிகார சபையின் தொழிற்பயிற்சி நடவடிக்கைகளுக்காக 2009 ஆம் ஆண்டு வழங்கப்பட்டது.

அதனால் றிஷ்வி நகர் அல் இக்பால் வித்தியாலயம் பழைய கட்டடத்தில் சிரமத்துக்கு மத்தியில் இயங்கி வருகிறது.

இந்தநிலையில் புதிய கட்டடத்தை தமக்கு வழங்க வேண்டும் என்று கோரி பாடசாலை மாணவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த மாணவர்கள் வலயக் கல்விப் பணிப்பாளரே எங்களுக்கான புதிய கட்டடத்தை மீட்டுத்தாருங்கள், எங்களை நுளம்பிலிருந்து காப்பாற்ற உதவுங்கள், சிறுவர் அபிவிருத்தி மகளிர் விவகார அமைச்சரே சிறுவர்களாகிய எங்களின் கல்வியைத் தொடர உதவுங்கள் போன்ற வசனங்கள் எழுதப்பட்ட சுலோகங்களை தாங்கி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

மாணவர்களின் ஆர்ப்பாட்டத்தில் பெற்றார்களும் இணைந்திருந்தனர்.



இந்த ஆர்ப்பாட்டம் தொடர்பில் மட்டக்களப்பு மத்தி வலயத்தின் வலயக் கல்விப் பணிப்பாளரை தொடர்பு கொள்ள முயற்சித்தபோது தொடர்பு கிடைக்கவில்லை.

அல் இக்பால் வித்தியாலயம் கட்டடம் தேசிய தொழிற்பயிற்சி அதிகார சபைக்கு பிரதி அமைச்சர் ஹிஸ்புல்லாவின் முயற்சியால் உள்வாங்கப்பட்டு, அமைச்சர் டளஸ் அழகப்பெருமவால் திறந்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)

## தோற்றாத்தீவுக் கிராமத்தில் உலோகப் பொருள் உற்பத்தி



மட்டக்களப்பு,ஜன.3

மட்டக்களப்பு, தேற்றாத்தீவு கிராமத்தில் கலப்பு உலோகப் பொருள் உற்பத்தி மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

இந்தியாவில் இருந்து வந்த கிறிஸ்தோம்பு வேலாயுதம் சாந்த பத்மலால், இந்தக்கிராமத்துக்கு வந்து உலோக உற்பத்திப் பொருள்களை உற்பத்தி செய்கின்றார்.


இதுகுறித்து உலோகப் பொருள் உற்பத்தியில் ஈடுபடும் கிறிஸ்தோம்பு வேலாயுதம் சாந்த பத்மலால் தெரிவித்ததாவது:-

வளப்பற்றாக்குறை நிலவினாலும் கிடைத்த வளங்களைக் கொண்டு உலோகப் பொருள் உற்பத்தியை மேற்கொள்கிறேன்.

பித்தளை, செம்பு, ஈயம், வெண்கலம், அலுமினியம், வெள்ளீயம், தங்கம், இரும்பு, செம்பு உள்ளிட்ட பல உலோகங்களைக் கொண்டு உலோகப் பொருள் உற்பத்தியை மேற்கொள்கின்றேன்.

கோவில் மணி, கொடித்தம்பம், கலசம், உருவம், வேல், திரிசூலம், பஞ்சமணி, பூசைமணி, நாகதீபம், கற்பூரத்தட்டு, திருவாசி உள்ளிட்ட பல பொருள்களைச் செய்து வருகின்றேன்.-என்றார்.

## தீ பரவியதால் உடைமைகள் சேதம்



மட்டக்களப்பு,ஜன.3

மட்டக்களப்பு, களுவாஞ்சிக்குடி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சூரையடிக் கிராமத்திலுள்ள வீடொன்றில் தீ பரவியதால் வீட்டிலுள்ள உடைமைகள் சேதமடைந்துள்ளன.

இந்தத் தீ நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் பரவியுள்ளது.

இந்தத் தீ விபத்துத் தொடர்பில் களுவாஞ்சிக்குடி பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

### வடமத்திய மாகாணத்தில்

## வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு மாற்றுக் காணிகள்

இரத்தினபுரி,ஜன.3

வட மத்திய மாகாணத்தில் வெள்ளப்பெருக்கால் பாதிக்கப்படும் மக்களுக்கு மாற்றுக் காணிகளை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அநுராதபுரம் மாவட்டத்தில் வெள்ளப் பெருக்கால் அவலமுறும் குடும்பங்களுக்குக் கட்டுக்கெலியாவ பகுதியில் காணிகள் வழங்கப்படவுள்ளன.

இவ்வாறு வட மத்திய மாகாண முதலமைச்சர் எஸ்.எம்.ரஞ்சித் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மல்வத்து ஓயாவை அண்மித்த அநுராதபுரம், லேன் பகுதிகளில் 250 குடும்பங்கள் வசிக்கின்றன. அவர்கள் அடிக்கடி வெள்ளப் பெருக்குகளால் பாதிக்கப்படுகின்றனர்.

இதேவேளை, பொலனறுவை மாவட்டத்தில் அடிக்கடி வெள்ளப்பெருக்கால்

**வட மத்திய மாகாணத்தில் வெள்ளப்பெருக்கால் பாதிக்கப்பட்ட மக்களுக்குப் போதியளவு உலர் உணவுப்பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன**

பாதிக்கப்படுவோருக்கு வெலிக்கந்த பகுதியில் காணிகளை வழங்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

லங்காபுர சங்கபோதிகம மற்றும் கல்கெட்டிகம பகுதிகளில் வசிக்கும் 120 குடும்பங்களுக்கே வெலிக்கந்த பகுதியில் காணிகள் வழங்கப்படவுள்ளன.

வட மத்திய மாகாணத்தில் வெள்ளப்பெருக்கால் பாதிக்கப்பட்டு நலன்புரி நிலையங்களிலுள்ள மக்களுக்குப் போதியளவு உலர் உணவுப்பொருள்கள் வழங்கப்பட்டுள்ளன.-என்றார். (ச)

## பிரதேச சபை உறுப்பினர்கள் கல்வி வளர்ச்சிக்கு பங்களிப்பு

### கிழக்கு மாகாண சபை உறுப்பினர் பாராட்டு



மட்டக்களப்பு,ஜன.3

நாதன்வெளி பிரதேச சபை உறுப்பினர்கள் கல்வி வளர்ச்சிக்காக அயராது உழைத்து வருகின்றனர்.

இவ்வாறு கிழக்கு மாகாண சபை உறுப்பினர். த.கலையரசன் தெரிவித்தார்.

தேசியவாசிப்பு மாதத்தை முன்னிட்டு நாவின்வெளி பிரதேச சபையில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு உரையாற்றிபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

இந்தப் பிரதேசம் போரால் பெரிதும் பாதிக்கப்பட்ட பிரதேசமாகும். அதனால் கற்றல் செயற்பாடுகளில் பின்தங்கிய நிலையில் காணப்பட்டது.

இந்தச் சந்தர்ப்பத்தில் அரசசார்பற்ற நிறுவனங்கள் மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்காக பிரத்தியேக வகுப்புக்களையும், விசேட வகுப்புகளையும் நடத்தி கல்வியின் அடைவு மட்டத்தை மேம்படுத்தினார்கள்.

இந்தப் பிரதேசம் அனைத்துத் துறைகளிலும் முன்னேற்றமடைய வேண்டுமானால் அனைவரும் மாற்றங்களைக் கொண்டு வருவதற்கு அயராது பாடுபட வேண்டும்.

அவ்வாறு இல்லாமல் சமூகத்தில் இருந்து விலகி சமூகத்துக்குத் தீங்கு செய்வதற்கு முனைந்தால் அந்தச் சமூகமே அவர்களுக்கான பாடத்தைப் புகட்டும். - என்றார். (ச)

## விபத்தில் நால்வர் காயம்

கண்டி,ஜன.3

ஹற்றன், வட்டவளை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் லொறி ஒன்று வீதியை விட்டு விலகிச்சென்று விபத்துக்கு உள்ளாகியதில் 4 பேர் படுகாயமடைந்துள்ளனர்.

பாதுக்கையிலிருந்து சிவனொலிபாதமலைக்கு பயணித்த லொறியே வீதியை விட்டு விலகிச் சென்று சுமார் 20 அடி பள்ளத்தில் வீழ்ந்துள்ளது.

நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு இடம்பெற்ற இந்த விபத்தில், லொறியில் பயணித்தவர்களே காயமடைந்துள்ளனர்.

லொறியின் சாரதி தப்பியோடியுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்துத் தொடர்பில் வட்டவளை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தருவது வித்தியா

## இன்றைய நாள் உங்களுக்கு எப்படி?

**மேடம்:** திட்டமிட்ட காரியங்களை சிறப்பாகச் செய்து முடிப்பீர்கள். உடல் ஆரோக்கியம் திருப்திகரமாக இருக்கும். பணம் தேவையான அளவு இருக்கும். சகோதரவகையில் மகிழ்ச்சி தங்கும். நண்பர்களின் ஒத்துழைப்பு அதிகரிக்கும்.

**இடபம்:** எதிர்பார்த்த இடத்திலிருந்து பணம் வரும். புதிய சிந்தனைகள் மனதில் தோன்றும். உடன்பிறந்தவர்களின் ஆதரவு கிடைக்கும். தாய்வழி உறவினர்களால் நன்மையுண்டு. வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள்.

**மிதுனம்:** திறமையுடன் செயற்பட்டு சில காரியங்களை முடிப்பீர்கள். மனக் குழப்பங்கள் நீங்கும். உத்தியோகத்தில் மேலதிகாரியின் பாராட்டைப் பெறுவீர்கள். வேற்று மதத்தினரால் நன்மை கிடைக்கும். முன்கோபம், வீண் அலைச்சல் விலகும்.

**கடகம்:** சவால்கள், ஏமாற்றங்களைத் தாண்டி வெற்றியடைவீர்கள். பழைய கடனை டைசல் செய்யும் அளவிற்கு பணவரவு உண்டு. வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். வீண் பதற்றம், அலைச்சல் நீங்கும். வெளியூர் பயணங்களால் ஆதாயம் பெறுவீர்கள்.

**சிங்கம்:** ஒரே நாளில் முக்கியமான பல வேலைகளைப் பார்க்க வேண்டி வரும். இதை முதலில் முடிப்பதா, அதை முதலில் முடிப்பதா என்ற பதற்றம் இருக்கும். நண்பர்கள், உறவினர்கள் உங்களிடம் அதிக உரிமை எடுத்துக்கொள்வார்கள்.

**கன்னி:** குடும்பத்தில் சின்ன சின்ன வாக்குவாதங்கள் வந்து நீங்கும். வாகனத்தை இயக்கும் போது தொலைபேசியில் பேச வேண்டாம். எதிர்மறை எண்ணங்கள் ஏற்படலாம். அரசு விவகாரங்களில் அலட்சியம் காட்டாதீர்கள். உத்தியோகத்தில் சக ஊழியர்களால் சங்கடங்கள் ஏற்படும்.

**நாளை**

மார்கழி -20 வெள்ளிக்கிழமை 04.01.2013
திதி: ஸப்தமி மா. 06.32 வரை
நட்சத்திரம்: உத்தரம் மு.ப 11.14 வரை
சுபநேரம்: 06.31- 08.01 வரை
ராகுகாலம்: 11.01- 12.31 வரை

**துலாம்:** வெளியூரிலிருந்து நல்ல செய்தி வந்து சேரும். உத்தியோகத்தில் வேலைச்சுமை குறையும். உடன்பிறந்தவர்களின் ஆதரவு கிடைக்கும். தாயாருக்கு மருத்துவச் செலவுகள் குறையும். ஆடம்பரச் செலவுகளை தவிருங்கள். நட்பு வட்டாரம் விரியும்.

**விருச்சிகம்:** தன்னம்பிக்கையுடன் செயற்பட்டு சில வேலைகளைச் செய்து முடிப்பீர்கள். உங்களைச் சுற்றியிருப்பவர்களால் இருந்து வந்த தொல்லைகள் அகலும். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். உறவினர்கள், நண்பர்களின் சந்திப்பு நிகழும்.

**தனுசு:** எதிர்பார்த்த உதவிகள் தக்கசமயத்தில் கிடைக்கும். பிரியமானவர்களுக்காக அதிகம் செலவு செய்வீர்கள். குடும்ப வருமானத்தை உயர்த்துவீர்கள். வெளியூர் பயணங்கள் மகிழ்ச்சி தரும். வியாபாரத்தில் புதிய முயற்சிகளால் லாபத்தை அதிகரிப்பீர்கள்.

**மகரம்:** மனதில் இனம்புரியாத பயம் வந்து போகும். அடுத்தவர்களைக் குறைக் கூறுவதை நிறுத்துங்கள். நெருங்கியவர்கள் சிலரால் தர்மசங்கடமான சூழ்நிலையைச் சமாளிக்க வேண்டி வரும். வியாபாரத்தில் அலைச்சல் இருக்கும்.

**கும்பம்:** எண்ணம்போல் செயற்பட வேண்டுமென எண்ணுவீர்கள். குடும்பத்தினரின் ஆதரவு கிட்டும். சொத்து சம்பந்தப்பட்ட பிரச்சினைகளுக்கு சுமுகமான தீர்வு கிடைக்கும். பணவரவு திருப்திகரமாக இருக்கும். உத்தியோகத்தில் மறைமுக எதிர்ப்புகள் விலகும்.

**மீனம்:** பேச்சில் கம்பீரம் பிறக்கும். தடைப்பட்ட காரியங்களை உடனே முடிப்பீர்கள். உடன்பிறந்தவர்களால் பணஉதவி கிடைக்கும். தந்தைவழி உறவினர்களால் மகிழ்ச்சியுண்டு. ஆன்மீகத்தில் நாட்டம் அதிகரிக்கும். வெளியூர் பயணங்களால் ஆதாயம் உண்டு.

## சுடோக்கு
### எண் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 2 | | | | | 3 | | |
| | 5 | 1 | 8 | 7 | 3 | | 2 | |
| | 3 | 4 | | 2 | | | 5 | 1 |
| | 8 | | 3 | | | | | 4 |
| | | | 2 | 1 | 5 | | | |
| 5 | | | | | 8 | | 7 | |
| 3 | 1 | | | 8 | | 6 | 4 | |
| | 4 | | 7 | 5 | 6 | 2 | 1 | |
| | | 6 | | | | | 8 | |

### சுடோக்கின் நேற்றைய விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 1 | 6 | 7 | 9 | 5 | 8 | 3 | 4 |
| 4 | 8 | 9 | 6 | 3 | 2 | 7 | 5 | 1 |
| 7 | 3 | 5 | 8 | 1 | 4 | 6 | 9 | 2 |
| 8 | 4 | 2 | 3 | 5 | 6 | 9 | 1 | 7 |
| 9 | 6 | 3 | 1 | 4 | 7 | 5 | 2 | 8 |
| 5 | 7 | 1 | 2 | 8 | 9 | 3 | 4 | 6 |
| 1 | 5 | 8 | 4 | 7 | 3 | 2 | 6 | 9 |
| 3 | 2 | 4 | 9 | 6 | 8 | 1 | 7 | 5 |
| 6 | 9 | 7 | 5 | 2 | 1 | 4 | 8 | 3 |

சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்குபடுத்தல்தான் இதன் அடிப்படை. 1—9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1—9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வராமல் நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப்படுகையில் உள்பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1—9 இலக்கங்கள் இரட்டைப்படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் 'தனி எண்' என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனமான 'நிகோலி' இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரமாக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

# மரண அறிவித்தல்

## திருமதி பராசக்தி நாகதீபன்



சங்கானை இலகடியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட பராசக்தி நாகதீபன் 01.01.2013 செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற நல்லம்மாவின் அன்புச் சகோதரியும், நாகேஸ்வரன் (உதவிப் பிராந்திய முகாமையாளர், மக்கள் வங்கி- யாழ்ப்பாணம்), சத்தியநேசன் (பிரான்ஸ்), திருக்குமார் (பிரான்ஸ்), சீமந்தினி (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத் தாயாரும், நந்தினி (ஆசிரியை- சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி), சாந்தினி (பிரான்ஸ்), குமுதினி (பிரான்ஸ்), மகேந்திரராஜா (ஜேர்மனி) ஆகியோரின் அன்பு மாமியும், லக்ஷிகன் (R.D.A பொறியியலாளர்), கீர்த்திகா, சாகித்தியா, லக்ஷிகா, அனுசியா, லக்ஷ்மன், மீரா, விஷ்மன், நிவேதா, சாரங்கன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.01.2013) வியாழக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக சங்கானை கரைச்சி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(C/5211)
(6.2.7)

தகவல்:
**மகன் நா.நாகேஸ்வரன்**
(உதவிப் பிராந்திய முகாமையாளர், மக்கள் வங்கி, யாழ்ப்பாணம்)

இலகடி, சங்கானை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாவனைக்கு உதவாத கருவாடு மீட்பு

கொழும்பு,ஜன.3

பாவனைக்கு உதவாத 2000 கிலோகிராம் கருவாடு புறக்கோட்டையில் மீட்கப்பட்டுள்ளது. அந்தக் கருவாட்டை வைத்திருந்த வர்த்தகருக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று நுகர்வோர் அதிகாரசபை தெரிவித்துள்ளது.

இந்தக் கருவாடு புறக்கோட்டையில் 4 ஆம் குறுக்கு தெருவிலுள்ள கடையொன்றில் இருந்தே நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை மீட்கப்பட்டுள்ளது என்று அதிகாரசபை அதிகாரிகள் தெரிவித்தனர். (ச)



கொழும்பு மாநகர சபையின் www.cmc.lk என்ற இணைய தளம் பாதுகாப்புச் செயலர் கோத்தபாய ராஜபக்ஷவால் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை ஆரம்பித்து வைக்கப்பட்டது. அருகில் மாநகர முதல்வர் ஏ. ஜே. எம். முஸம்மில் மற்றும் அவரது பாரியார் காணப்படுகின்றனர்.

## நிவாரணம் வழங்குவதை தடுக்கின்றது அரசு

**சரத் பொன்சேகா குற்றச்சாட்டு**



கொழும்பு,ஜன.3

வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிவாரணங்கள் வழங்குவதை அரசு தடுக்கிறது.

இவ்வாறு முன்னாள் இராணுவத் தளபதி சரத் பொன்சேகா குற்றம் சாட்டியுள்ளார்.

வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட வெல்லாவ பிரதேச மக்களுக்கு நிவாரணங்களை வழங்கியபோதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

பிரதிபலன்களை எதிர்பார்த்து மக்களுக்கு நிவாரணங்களை வழங்கவில்லை.

மக்களுக்கு அரசியல் ரீதியான லஞ்சங்களை வழங்குவது எனது நோக்கமல்ல.

குறைவாகப் பேசி கூடுதலான சேவை செய்வதனையே நான் விரும்புகின்றேன்.

இடர்களின் போது மக்களுடன் நாம் இருக்கின்றோம் என்பதனை உணர்த்தும் நோக்கில் இந்த உதவிகள் வழங்கப்படுகின்றன.-என்றார். (ச)

# இனங்களுக்கிடையே மீண்டும் கலவரத்தை ஏற்படுத்த முயற்சி

**சாடுகிறார் ரவூப் ஹக்கீம்**

கொழும்பு,ஜன.3

சிங்கள, முஸ்லிம் மக்களிடையே மீண்டுமொரு கலவரத்தைத் தூண்ட சிறு குழுவினர் முற்படுகின்றனர்.

இவ்வாறு நீதி அமைச்சர் ரவூப் ஹக்கீம் தெரிவித்தார்.

மறைந்த கலாநிதி டி.பி. ஜாயாவின் 123ஆவது நினைவுப் பேருரை முஸ்லிம் மகளிர் கல்வி சங்கத்தில் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை இடம்பெற்றது.

அந்த நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அன்று வர்த்தகத்தை மையமாகக் கொண்டு கம்பளையில் கலவரம் தூண்டப்பட்டது போன்று, இன்றும் வர்த்தகத்தை மையமாகக் கொண்டே கலவரத்தை ஆரம்பிக்க முயற்சிக்கின்றனர்.

இந்தச் செயல்களுக்கு எதிராக முஸ்லிம் நாடாளுமன்ற உறுப்பினர்கள் சகலரும் இணைந்து செயற்பட வேண்டும்.

பிரிட்டன் காலனித்துவ ஆட்சியிலிருந்து இலங்கை சுதந்திரமடைந்தபோது முஸ்லிம்கள் அன்று பல பிரச்சினைகளை எதிர்நோக்கினர். அதுபோன்றே 30 வருட காலம் நடைபெற்ற போர் நிறைவடைந்த பின்னர் இன்று இலங்கை முஸ்லிம்கள் பல பிரச்சினைகளை எதிர்நோக்குகின்றனர்.

அன்று வர்த்தகத்தை மையமாகக் கொண்டு 1915 ஆம் ஆண்டு கம்பளையில் சிங்கள - முஸ்லிம் கலகம் தூண்டப்பட்டது.

அதேபோன்று இன்றும் வர்த்தகத்தை மையமாக கொண்டே கலகத்தை ஆரம்பிக்க முயற்சிக்கின்றனர்.

இந்த தீய நோக்கம் ஹலால் சான்றிதழ் மற்றும் சட்டக் கல்லூரி நுழைவுப் பரீட்சை போன்ற பல கோணங்களில் வெளிப்படுத்தப்படுகின்றது.

சட்டக் கல்லூரி நுழைவுப் பரீட்சை சர்ச்சை மற்றும் ஹலால் சான்றிதழ் பிரச்சினைகள் வர்த்தகத்தின் பின்னணியில் ஏற்படுத்தப்பட்டுள்ளது.

நீதி அமைச்சர் என்ற வகையில் சட்டக் கல்லூரி நுழைவுப் பரீட்சை தொடர்பாக எழுந்துள்ள சர்ச்சை தொடர்பில் எதிர்வரும் 8ஆம் திகதி நாடாளுமன்றத்தில் விசேட உரையாற்றவுள்ளேன்.

இந்த உரைக்கு தேவையான சகல தரவுகளையும் தற்போது சேகரித்துக்கொண்டிருக்கின்றேன்.

பெரும்பான்மை சமூகத்திலுள்ள சிறிய ஒரு குழுவினரே இன்று இலங்கை முஸ்லிம்களுக்கு எதிராக செயற்படுகின்றனர். இவர்கள் சந்தர்ப்பங்கள் கிடைக்கும் போதெல்லாம் இனவாத முலாம் பூசுகின்றனர்.

எனவே இந்தப் பிரச்சினைகளுக்கு அவசரப்பட்டு பதிலளிக்காமல் திட்டமிட்ட முறையில் பதிலளிக்க வேண்டும்.



அப்போதுதான் எமது கருத்துக்கள் வரவேற்கப்படும். இந்த இனவாத சக்திகளுக்கு எதிராக பெரும்பான்மை சமூகத்தில் உள்ள சிறுப்பான்மையினருக்கு ஆதரவாக செயற்படுகின்றவர்களுடன் இணைந்து போராட வேண்டும்.- என்றார். (ச)

## இயற்கை இடர்களினால் நான்கு லட்சம் பேர் பாதிப்பு

**இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் தகவல்**

கொழும்பு,ஜன.3

7 மாகாணங்களில் 18 மாவட்டங்களில் ஏற்பட்ட இயற்கை இடர்களினால் இதுவரை ஒரு லட்சத்து 18 ஆயிரத்து 785 குடும்பங்களைச் சேர்ந்த 4 லட்சத்து 29 ஆயிரத்து 634 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு இடர் முகாமைத்துவ மத்தீய நிலையம் அறிவித்துள்ளது.

இதுதொடர்பில் இடர் முகாமைத்துவ மத்திய நிலையம் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை விடுத்துள்ள அறிக்கை ஒன்றிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

இயற்கை இடர்களினால் இதுவரையிலும் 43 பேர் உயிரிழந்துள்ளனர். 19 பேர் காயமடைந்துள்ளனர். 7 பேர் காணாமற் போயுள்ளனர்.

**பாதிக்கப்பட்டவர்களில் 4153 குடும்பங்களைச் சேர்ந்த 14 ஆயிரத்து 616 பேர் 93 தற்காலிக முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.**

29 ஆயிரத்து 761 வீடுகள் சேதமடைந்துள்ளன. அதில் 4229 வீடுகள் முழுமையாகச் சேதமடைந்துள்ளன.

பாதிக்கப்பட்டவர்களில் 4153 குடும்பங்களைச்சேர்ந்த 14 ஆயிரத்து 616 பேர் 93 தற்காலிக முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)

## சுற்றுலா வந்த செக். குடியரசு நபர் சாவு

கொழும்பு,ஜன.3

ஹிக்கடுவ,பண்டாரவத்தை பகுதியில் உள்ள சுற்றுலா விடுதியில் தங்கியிருந்த வெளிநாட்டு நபர் ஒருவர் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் குறித்து பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டதை அடுத்து குறித்த இடத்துக்குச் சென்ற பொலிஸார் விசாரணை நடத்தி சடலத்தை மீட்டுள்ளனர்.

உயிரிழந்த நபர் செக் குடியரசைச் சேர்ந்த ஹஸ்டர் ஜோசப் (வயது-60) என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

இந்தச் சம்பவம் குறித்து ஹிக்கடுவை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச)

## பாரத கொலை வழக்கு; ஐந்து பேருக்கு பிணை

கொழும்பு,ஜன.3

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பாரத லக்ஸ்மன் பிரேமச்சந்திர கொலை வழக்குடன் தொடர்புடைய சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட ஐந்து பேர் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கொலையுடன் தொடர்புடைய சந்தேகத்தில் 16 பேர் கைது செய்யப்பட்டனர்.

அவர்களில் ஐந்து பேருக்கு தலா 250000 ரூபா ரொக்கம், 200000 ரூபா சரீரப் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஏனைய சந்தேகநபர்களை எதிர்வரும் 11 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்பு பதில் நீதிவான் கனிஷ்க விஜேவர்தன உத்தரவிட்டுள்ளார்.

2011 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 8 ஆம் திகதி நடைபெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலின்போது இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் பாரத லக்ஸ்மன் பிரேமசந்திர உட்பட நான்கு பேர் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)

## வறுமையை ஒழிப்பதற்கு கூடுதல் முக்கியத்துவம்

**பஸில் சொல்கிறார்**

கொழும்பு,ஜன.3

இந்த ஆண்டு வறுமை ஒழிப்பிற்குக் கூடுதல் முக்கியத்துவம் அளிக்கப்படும்.

இவ்வாறு பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஸில் ராஜபக்ஷ தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

2015ஆம் ஆண்டளவில் நாட்டு மக்களின் வறுமையை இல்லாதொழிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

வறுமையற்ற இலங்கையை கட்டியெழுப்ப திவிநெகும உள்ளிட்ட பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

இந்த அபிவிருத்தித் திட்டங்கள் நகர மற்றும் கிராம மட்டங்களிலும் முன்னெடுக்கப்படுகின்றன.



கீழ்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

திவிநெகும திட்டத்துடன் இணைந்து கொண்டவர்களுக்கு விசேட நிதி வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்படும். இந்த நிதி உதவிகள் அரச வங்கிகளின் ஊடாக வழங்கப்படவுள்ளது.-என்றார்.(ச)

## சொத்து விவரம் குறித்து நாளை விசேட பேச்சு

ஆண்டறிக்கை, சொத்து விவரங்களை ஒப்படைக்காத கட்சிகள் குறித்து நாளை வெள்ளிக்கிழமை தீர்மானிக்கப்படவுள்ளது.

இந்த விசேட பேச்சு கட்சியின் செயலாளர்களுக்கும், தேர்தல் ஆணையாளர் மஹிந்த தேசப்பிரியவுக்கும் இடையில் நடைபெறவுள்ளது.

அதில், பதிவு செய்யப்பட்ட அனைத்து அரசியல் கட்சிகளையும் இணைந்து கொள்ளுமாறு தேர்தல் ஆணையாளர் அழைப்பு விடுத்துள்ளார்.

குறித்த அறிக்கைகளை சமர்ப்பிக்காத அரசியல் கட்சிகளின் பதிவுக் காலத்தை நீடிப்பதில்லை என்று தேர்தல் செயலகம் தீர்மானித்துள்ளது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யா/ எழுது மட்டுவாழ் ஸ்ரீ கணேசா வித்தியாலயம்

**மணி விழாவில் மகிழ்வுறுவோம்**
**03.01.2013**

எழுது மட்டுவாழ் ஸ்ரீ கணேசா வித்தியாலயத்தின் முதல்வராகப் பணியாற்றி அர்ப்பணிப்புடன் செயல் புரிந்த வித்தியாலய அதிபர்



**வாரித்தம்பி சடாச்சரம்**

அவர்களின் அகவை அறுபதில் அன்புப்பணி தொடர அக மகிழ்ந்து வாழ்த்துகின்றோம்.

Best Wishes

**பாடசாலைச் சமூகம்.**

(5207)(6.7.11)

## 2013 ஆம் ஆண்டுக்கான புதிய ஆங்கில, கணினி பாடநெறிகள் ஆரம்பம்

யாழின் முதன்மைக் கல்லூரியில் இணைவதனூடாக சர்வதேச தராதரங்களை வென்றிடுங்கள்

அனைத்துப் பாடநெறிகளும் ஆரம்பமாகின்றன...

**05.01.2013 காலை 9.00 மணி**

O/L பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான 6 மாத Cambridge Univercity யின் சான்றிதழுடன் கூடிய Diploma In English

உயர்கல்வி மாணவர்களுக்கான சர்வதேச சான்றிதழ்களுடன் கூடிய Diploma In English

வெளிநாட்டு விசாக்களுக்கான ஆங்கில பாடநெறி மற்றும் அதற்கான பரீட்சைகள்.

தரம் 04 - 08 வரையான மாணவர்களுக்கான SPOKEN ENGLISH COURSE

Computer Courses (50% கட்டணக் கழிவுடன் பாடநெறிகளைத் தொடருங்கள் CSS ISO 9001 - 2008)

Spoken Sinhala Courses (04 months)

0774924166/ 0777364362/ 0770610271

**E-CITY College Of English**

பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்.

பிரதான வீதி, சங்கானை (மல்லாகம்சந்தி முன்பாக)

## கண்ணீர் அஞ்சலி



இலங்கை வங்கி மேற்றரக்கிளை முகாமையாளர் பொன் பாலக்குமார் அவர்களின் பாசமிகு தாயார் திருமதி **பொன்னுத்துரை பாலாம்பிகை** அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அவரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனைப்பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி !

யாழ் வீதி, மானிப்பாய்.

சுந்தர்சன்,
உரிமையாளரும் சக ஊழியர்களும்.

(c/5210)(6.7.11)

## கண்ணீர் அஞ்சலி



கண்டாவளை பிரதேச செயலக நிகழ்ச்சித் திட்ட உதவியாளர் ப.சுரேந்திரன் அவர்களின் அன்புத் தந்தை **இராமலிங்கம் பசுபதிப்பிள்ளை** அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன், அவரது ஆத்மா சாந்தியடைய இறைவனைப்பிரார்த்திக்கின்றோம்.

**பிரதேச செயலகம், கண்டாவளை.** **பிரதேச செயலாளர், ஊழியர்கள்.**

## ஆச்சிரமத்தின்ஆன்மிக நிகழ்வு

தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவை-சந்நிதி யான் ஆச்சிரமத்தில் நடத்தி வரும் ஆன்மிகநிகழ்வு வரிசையில் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு ரி.எம். வாசகர் குழுவினரின் மங்கல இசை இடம்பெறும்.(வ-8)

## பொங்கலை முன்னிட்டு ஞாயிற்றுக்கிழமை சலூன் திறப்பு

தைப்பொங்கல் தினத்தைமுன்னிட்டு வாடிக்கையாளர்களின் நலன் கருதி எதிர்வரும் 13 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முழுநாளும் சலூன்களைத் திறந்து தொழில் புரியுமாறுவடமராட்சிசிகை ஒப்பனையாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

இதேவேளை எதிர்வரும் 6 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வழமை போல வாராந்த விடுமுறையை நடைமுறைப் படுத்துமாறும் சங்கம் கேட்டுள்ளது.(வ-8)

## வாடகைக்கு

யாழ். நகரில் உரிய வசதிகளுடன் அனெக்ஸ் ஒன்று வாடகைக்குண்டு.படிக்கும், வேலை செய்யும் பெண்கள் அல்லது சிறிய குடும்பத்துக்கு பொருத்தமானது.

தொ.பே: 077 2768470

(27450)(6.7.4)

## யாழ்ப்பாணக் கல்வி நிலையம்
## The Jaffna Education Centre

(சீயோன் தேவாலயத்துக்கு அருகில்)

Spoken English With Grammar

சிங்களம்

Shorthand Typing இருமொழிகள் மூலமும்கற்பிக்கப்படுகின்றன.

புதிய பிரிவு ஆரம்பம்: 04.01.2013

ஆசிரியை: இ.லோகநாயகி

T.P: 077 6779340.

பாடமுடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.

(27457)(6.7.4)

## தென்மராட்சி கிழக்கு ப.நோ.கூ.சங்கம் (வ-து) கொடிகாமம் கட்டடத் தொகுதி வாடகைக்கு விடுவதற்கான கேள்வி கோரல்

எமது சங்கத்தினால் கொடிகாமம் மத்திய பேருந்து நிலையத்திற்கருகில் (ஹற்றன் நஷனல் வங்கி அருகில்) புதிதாக அமைக்கப்பட்டுள்ள நான்கு பகுதிகளைக் கொண்ட கட்டடத் தொகுதி வாடகைக்கு வழங்கப்படவுள்ளது. இக் கட்டடமானது வங்கி,நிதி நிறுவனங்கள் மற்றும் ஏனைய ஸ்தாபனங்கள் செயற்பாட்டிற்கு பொருத்தப் பாடானதாகவுள்ளமையின் பொருட்டு தேவைக்குரியவர்கள் கட்டடத்தினை பார்வையிட்டுக் கொள்வதுடன் கூடிய வாடகையினையும் கூடிய கட்டடத்திற்கான முற் பணத்தினையும் கோருபவர்களுக்கு இக்கட்டடம் உரிய முறையில் ஒப்பந்தம் செய்து வழங்கப்படும்.

மேலும் கேள்விதாரர் தங்கள் கூறு விலையினை ''தலைவர், தென்மராட்சி கிழக்கு ப.நோ. கூ. சங்கம் (வ.து) பருத்தித்துறை வீதி, கொடிகாமம்'' எனும் பெயருக்குதெளிவாக தங்கள் நிறுவன கடிதத் தலைப்பிலான கூறு விலைக் கடிதத்தினையும், கடித உறையிலும் மேற்படி முகவரியிட்டு குறித்த கடித உறையின் இடது பக்க மேல் மூலை யில் ''கட்டடத்தொகுதி வாடகைக்கு விடுவதற்கான கூறுவிலை'' என எழுதி பதிவுத்தபால் மூலமாக 31.01.2013 திகதியன்றோ அல்லது அதற்கு முன்பதாகவோ இக் கூறு விலையினை அனுப்பிவைக்கவும்.

தென். கிழக்கு ப.நோ.கூ. சங்கம்(வ.து)
பருத்தித்துறை வீதி,
கொடிகாமம்.

தலைவர்.

(சி/2862) (6.7.4)

## UNIVERSITY OF JAFFNA

### INVITATION FOR BIDS

### CONSTRUCTION OF SINGLE STOREY Buildings at Faculty of Engineering, University of Jaffna, Kilinochchi

1. The Chairman, Procurement Committee of University of Jaffna, now invites sealed bids from eligible and qualified bidders.

   This shall be a **measure and pay** contract.
2. Bidding will be conducted through National Competitive Bidding Procedure.
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall be registered in the field of building construction with the Institute for Construction Training and Development (ICTAD).
4. Bids shall be accompanied by a Bid Security as per the information given in the table.

| Bid ID | Description of work | Estimated Cost | Contract period | Minimum Required Grade | Required Bid Security | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | Security Amount | Valid Period |
| YA/CWP/Eng-KLN/2012 B1 | Construction of single storey Administration Building at Faculty of Engineering, Kilinochchi | Rs. 11.0 Million | 90 Calendar Days | C6 | Rs. 110,000.00 | 19th May 2013 |
| YA/CWP/Eng-KLN/2012 B2 | Construction of single storey Lecture Hall Building at Faculty of Engineering, Kilinochchi | Rs. 10.0 Million | 90 Calendar Days | C7 | Rs. 100,000.00 | 19th May 2013 |
| YA/CWP/Eng-KLN/2012 B3 | Construction of single storey Drawing Office Building at Faculty of Engineering, Kilinochchi | Rs. 7.4 Million | 90 Calendar Days | C7 | Rs. 74,000.00 | 19th May 2013 |
| YA/CWP/Eng-KLN/2012 B4 | Construction of single storey Laboratory Building at Faculty of Engineering, Kilinochchi | Rs. 11.0 Million | 90 Calendar Days | C6 | Rs. 110,000.00 | 19th May 2013 |


5. Interested bidders may obtain further information from the **Deputy Registrar, Capital Works & Planning Unit, University of Jaffna, Thirunelvely, Jaffna** and view the Bidding Documents at the same address on any working day from **9:00hrs to 16:00 hrs.**

   Contact numbers are: Phone.**021 2219201**, Facsimile: **021 2219201**.
6. A complete set of Bidding Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Deputy Registrar, Capital Works & Planning Unit, University of Jaffna, Thirunelvely, Jaffna** from the **01st of January, 2013** until **15th of January, 2013 from 9:00 hrs to 15:00 hrs and** upon payment of a non-refundable fee of **Rupees two thousand five hundred (Rs. 2,500.00) for each work.**
7. Sealed Bids shall be delivered or sent by registered post to **The Chairman, Procurement Committee of University of Jaffna, P.O Box 57, Thirunelvely, Jaffna** to reach **on or before 14.00 hrs on the 22nd of January, 2013.** Bids will be opened soon after closing, at **14.15 hrs on the 22nd of January 2013** at the same venue in the presence of the bidders' representatives who choose to attend.
8. Bids shall be valid for a period of **91 Days** from the date fixed for closing of Bids or any extended period.
9. All Bids shall be accompanied by a Bid Security which shall be;
   - in the form included in the Section 09 in the Bidding document.
   - in favour of ***"Vice Chancellor, Chairman, Procurement Committee, University of Jaffna."***
   - issued by one of the agencies indicated in the clause 16.2 of the Bidding Data.
10. Pre bid meeting will be held at Engineering Faculty, Kilinochchi at **10.30 hrs on the 9th January, 2013**

Vice Chancellor
Chairman, Procurement Committee,
University of Jaffna,
P.O Box 57, Thirunelvely,
Jaffna.

(சி/6128)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பெரும்பாலும்மேகக் கூட்டத்துடன் கூடிய வானிலை நிலவும்.

# தமிழ் - சிங்கள மக்களின் நலனுக்கு இரு அரசுகளின் தீர்வே உகந்தது

## புதுவருட செய்தியில் நா.க. த. அ. பிரதமர் உருத்திரகுமாரன் கருத்து



புதிய ஆண்டில் போராட்டம் திருப்பம் பெற வேண்டும். அனைத்துலக அரங்கில் சிங்களம் மேலும் தனிமைப்படுத்தப் படவேண்டும்.

நாடு கடந்த தமிழீழ அரசின் பிரதமர் விஸ்வநாதன் உருத் திரகுமார் வெளியிட்டுள்ள புத்தாண்டு செய்தியில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இரு அரசுகள் தீர்வு முறையே தமிழர் சிங்களவர்களின் நலன்களுக்கும் உகந்தது என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

மலர்ந்திருக்கும் 2013 ஆம் ஆண்டு புத்தாண்டை முன்னிட்டு நாடு கடந்த தமிழீழ அரசின் பிரதமர் உருத்திரகுமாரன் வெளியிட்டிருக்கும் அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:-

மலரும் 2013 ஆம் புதிய ஆண்டை உலகம் நம்பிக்கையுடன் வரவேற்றுக் கொண்டாடும் இத்தருணத்தில் ஈழ மக்களுக்கும் தமிழ்நாடு மற்றும் உலகம் முழுவதும்வாழ் தமிழ் மக்களுக்கும் நாடுகடந்த தமிழீழ அரசின் சார்பில் எனது புத்தாண்டு வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதில் பெருமகிழ் வடைகிறேன்.

2012 ஆண்டு மலர்ந்த போது நான் விடுத்திருந்த செய்தியில் 2012 ஆம் ஆண்டு எமக்கு ஒரு முக்கியமான ஆண்டாக அமையும் எனத் தெரிவித்திருந்தேன். கடந்துசென்ற 2012 ஆம் ஆண்டு அனைத்துலக அரங் கில் இலங்கை அரசு சவால் களையும் நெருக்கடிகளையும் சந்திக்க ஆரம்பித்த ஆண்டாக அமைந்திருக்கிறது.

2013 ஆம் ஆண்டும் ஈழத்தமிழர் தேசத்தைப் பொறுத்தவரை போராட்டம் திருப்பம் காணும் ஆண்டாகவே அமைய வேண்டும். இந்த ஆண்டில் அனைத்துலக அரங்கில் இலங்கை அரசை மேலும் தனிமைப் படுத்துவதில் நாம் காத்திரமான அடிகளை எடுத்து வைத்தாக வேண்டும்.

ஈழத்தாயகத்தில் இலங்கை அரசின் இன அழிப்பு நடவடிக்கைகளுக்கு எதிரான மக்கள் போராட்டங்கள் இவ்வாண்டு மேலும் வலு வடைய வேண்டும். இந்த வருடத்தின் போது 1983 ஜூலை தமிழ் இனப்படு கொலையின் 30 ஆவது வருட நினைவுகள் எமது கூட்டு நினைவினில் எழுவது தவிர்க்க முடியாதது. ஜூலை இனப்படுகொலையும் முள்ளிவாய்க்கால் இன அழிப்பும் சிங்களத்தின் ஆக்கிரமிப்பின் மத்தியில் தமிழர் தேசம் அவர்களுடன் இணைந்து வாழமுடியாது என்பதனைப் உணர்வுபூர்வமாக வெளிப்படுத்திய இரத்த சாட்சியங்கள்.

இலங்கையின் தேசிய இனப்பிரச்சினைக்கு இரு அரசுகள் தான் தீர்வுமுறை என்பது குறித்து அனைத்துலக சமூகத்தின் கூடுதல் கவனத்தை ஈர்க்கும் வகையிலான செயற்பாடுகளைத் தீவிரமாக மேற்கொள்வது என்பது 2013 ஆம் ஆண்டில் நாடு கடந்த தமிழீழ அரசின் பிரதான செயற்றிட்டமாக அமைகிறது-என்றுள்ளது. (வ)

## உண்ணாவிரதத்தில் மேலும் 5 பேர் இணைந்தனர்

செங்கல்பட்டு சிறப்பு முகாமில் நடைபெறும் அகதிகள் உண்ணாவிரதப் போராட்டத்தில் மேலும் 5 பேர் இணைந்தனர்.

கியூ பிரிவுப் பொலிஸாரால் பல்வேறு வழக்குகளில் கைது செய்யப்பட்ட ஈழத் தமிழர்கள் 41 பேர் செங்கல் பட்டு முகாமில் வைக்கப் பட்டுள்ளனர். அவர்களில் 7 பேர், தங்களை விடுவிக்கக்கோரி 8 ஆவது நாளாக நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமையும் உண்ணாவிரதம் மேற்கொண்டனர்.

இந்தநிலையில், அவர்களுக்கு ஆதரவாக மேலும் 5 பேர் போராட்டத் தில் ஈடுபட்டனர். அவர்களில் 6 பேர் மயங்கி விழுந்து செங்கல் பட்டு அரசு மருத்துவனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். (வ)

## இலங்கை கடற்பரப்பில் மீன் பிடிக்க அனுமதி கோரி போராட்டம்

இலங்கை கடற்பரப்புக்குள் இந்திய மீனவர்கள் மீன் பிடிப்பதற்கு தமிழக அரசு அனுமதி பெற்றுத் தரவேண்டும் என்று கோரி நாகை மற்றும் காரைக்கால் விசைப்படகு மீனவர்கள் ஆரம்பித்த வேலை நிறுத்தப் போராட்டம் தொடர்கிறது.

நாகையில் 5 ஆவது நாளாக மீனவர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட் டுள்ளனர்.

இதேவேளை மேற்படி போராட்டம் காரைக்காலில் கடந்த ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் ஆரம்பமாகியது. இதன் மூலம் காரைக்கால் துறை முகத்திலிருந்து சுமார் 400 விசைப் படகுகள் தொழி லில் ஈடுபடா என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. 3 ஆவது நாளாக மீனவர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர். இலங்கைக் கடற்பரப்பில் குறித்த சில காலப் பகுதிகளில் அதிகளவான மீன்களைப் பிடிக்க முடியும் என்றும் அக்காலத்தில் இந்திய மீனவர்கள் அங்கு மீன்பிடிக்க அனுமதி பெற்றுத் தருமாறு கோரியும் அவர்கள் வேலை நிறுத்தத்தில் ஈடு பட்டுள்ளனர். (வ)

## ஆங்கில கற்கைநெறி மீள் பதிவு ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஜன. 3

இலங்கைத் திறந்த பல்கலைக்கழகத் தினால் நடத்தப்படும் ஆங்கிலக் கற்கை நெறிக்கான மீள் பதிவுகள் நேற்றுத் தொடக்கம் வெள்ளிக்கிழமை வரை 3 தினங்கள் இலங்கை திறந்த பல்கலைக் கழக யாழ். பிராந்திய நிலையத்தில் இடம்பெறும்.

இந்தக் கற்கைநெறிக்கு ஏற்கனவே விண்ணப்பித்து இறுதிப்பரீட்சைக்குத் தோற்றியவர்களும் தங்களுடைய மீள்பதிவுகளை மேற்கொள்ள வேண்டும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (வ)

**வீடு விற்பனை**

சென்.யோசப் வீதி, வளன்புரம்
கொழும்புத்துறையில் 2 ½ பரப்புக் காணியில் சகல வசதிகளுடனான வீடு விற்பனைக்கு உண்டு.
(27056)(2.8) தொடர்பு : 0776146434

**நாய்க்குட்டிகள் விற்பனைக்கு**

வெள்ளைநிற [illegible]
நாய்க் குட்டிகள் விற்பனைக்கு உள்ளன.
தொடர்பு:
517, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.077 715 0883
(27446)(6.2.7)

**great way**

வவுனியாவில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட Innovage (Multinational) கம்பனிக்கும் அதன் கிளைகளுக்கும் முகாமைத்துவத்துக்கான ஆள் சேர்ப்புக்கள் இடம்பெறுகின்றன. O/L, A/L சித்தி பெற்றிருப்பின் Distributor, Supervisor, Assistant Manager போன்ற பதவிகளுக்கு விண்ணப்பிக்கலாம். தங்குமிட வசதி இலவசம். 6 பேர் மட்டும் சேர்க்கப்படுவர்.
தொடர்புகளுக்கு:
B.Srikanth 0750400477 (24395)(6.2.7)

**மரண அறிவித்தல்**

சின்னராசா பத்தர் ஜெயக்குமார்
(சமாதான நீதிவான்)
மேற்படி மரண அறிவித்தல் 02.01.2013 இல் வெளியாகிய உதயன் பத்திரிகையில் தகனம் செய்யப் படும் எனத் தவறுதலாக வெளிவந்துள்ளது. அன் னாரின் பூதவுடல் 02.01.2013 இல் நல்லடக்கம் செய்யப்பட்டது.
தகவல்: சந்திரா, அபிராமி ஜுவலஸ்.
0777865549, 023 222 2785
116/36, சென்.செபஸ்தியான் வீதி,
சென்.ஜோசேப் ஒழுங்கை, மன்னார்.
(27427)(6.2)

**வீடு விற்பனைக்கு**

இரண்டு பரப்புக் காணியுடன் சகல வசதியும் கூடிய வீடு வளவு விற்பனைக்குஉண்டு.
இராசவீதி, தோப்பு, அச்சுவேலி.
தொடர்பு: இ.சந்திரபாலா
0776231509.
(26443)(6.7.4)

**வீடு விற்பனைக்கு**

யாழ்ப்பாணம், சுண்டுக்குளி
சோமசுந்தரம் அவெனியுவில்
1½ (ஒன்றரை) பரப்புக்காணி
வீட்டுடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு:- 0776146434
(27471)(6.7.11)

**SUBRA** **2015 - A/L**

கலை, வர்த்தக, கணித, விஞ்ஞான பிரிவுகள்
தரமானதும் தகுதியானதுமான ஆசிரியரின் வழிகாட்டல்
05.01.2013 - சனி மாலை 5.00 மணி

**கலைப்பிரிவு**

| பாடம் | சித்தன்கேணி | வட்டுக்கோட்டை |
|---|---|---|
| தமிழ் | K. பரீந்தன் BA. (Hons) | அமரசிங்கம் |
| அளவையியல் | E.S.பவன் BA. (Hons) | E.S.பவன் BA. |
| நாடகம் | கணேஷ் BA (Hons) | R.வினோ BA. |
| இந்து நாகரிகம் | க.சிவாகரன் BA. | T. ரீநின் BA. |
| அரசியல் | K.சுகாஷ் LLB. (Hons) | S. இளங்கோ BA. |
| வரலாறு | R.R.ஆனந்தன் BA. | நிரோபன் |
| புவியியல் | S. ஜங்கரன் MA. | நவநீதன் |
| மனைப்பொருளியல் | S. மஜீபன் BA | S. மஜீபன் BA. |
| விவசாயம் | ரசி | ரசி |
| GIT | சி. ரசிகரன் B.Sc. | S. அர்ரி BSc. |

**வர்த்தகப் பிரிவு**

| பாடம் | சித்தன்கேணி | வட்டுக்கோட்டை |
|---|---|---|
| வணிகக்கல்வி | N. நந்தீஸ் BBA (Hons).MEd | ரிரோஜன் BBA |
| கணக்கீடு | A. சுபோஷன் BBA (Hons).M.A | கருணாநாஸ் BBA |
| பொருளியல் | S. ஜெயக்குமார் BA. (Hons).MA. Econ | S.S.ரீர் B.Com. |

**கணித/ விஞ்ஞான பிரிவு**

| பாடம் | சித்தன்கேணி | வட்டுக்கோட்டை |
|---|---|---|
| இணைந்த கணிதம் | விஜேந்திரன் B.Sc. A. தயாசிங்க B.Sc | தவசேகர் B.Sc. Med |
| பௌதிகவியல் | R. மதி B.Sc. உமிரோவியம் B.Sc | [illegible] B.Sc |
| இரசாயனவியல் | S. வர்மன் B.Sc. | [illegible] B.Sc. |
| உயிரியல் | S. திவாகரன் B.Sc. | [illegible] B.Sc. |

(T/5197) (45.6.7)

**ஈர விழிகளுடன் அன்பாக அழைக்கின்றோம்**

அமரர் சின்னப்பா குணரத்தினம்

(பளை - முன்னாள் உப தபாலதிபர்.
கனகராயன் குளம்)

மலர்வு
02.01.1941



உதிர்வு
05.12.2012

"தள்ளாடும் கால்களும் தடுமாறும் இதயமும்
சொல்லிட முடியாத வேதனையும் இனி - எமக்கு
நிரந்தரம் தானே அப்பா - நீங்கள் எம்முடன்
இல்லை என்பது நிஜம் தானா அப்பா......"?

எமது அன்புத் தந்தையை இழந்து தவித்த எமக்கு நல் உறவாக
எம் துயரில் பங்கெடுத்த யாவர்க்கும்

தவறுதலாக தனிப்பட்ட அழைப்பில் தங்களைத் தவறவிட்டிருப்பின் இதனை தனிப்பட்ட
அன்பு அழைப்பாக ஏற்று நாளை (04.01.2013) வெள்ளிக்கிழமை
எமது இல்லத்தில் நடைபெறவுள்ள தந்தையின் வீட்டுக்கிருத்திய நிகழ்விலும்,
மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் கேட்டுக்கொள்கின்றோம்.

இல.394, கண்டி வீதி,
சாவகச்சேரி.

குடும்பத்தினர்.

(18003) (45.6.7)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# வாழ்க்கை ஒரு தேடல்......!

வாழ்க்கை ஒரு தேடல் பயணம் என்பதை எல்லோரும் ஏற்றுக் கொள்ளுவார்கள். ''தேடல் உள்ள உயிர்களுக்கு தினமும் பசியிருக்கும்'' என்பது ஒரு கவிஞனின் பாடல் வரிகள். பசியும் தாகமும் தேடல் உள்ளவர்களுக்கே ஏற்படும். தேடல் உள்ள ஒருவரால் மட்டுமே சாதிக்க முடியும். உண்மையைக் கண்டு வாழ்வை அனுபவிக்க முடியும். இவர்களால் தான் புதிய புதிய கண்டுபிடிப்புக்களை மேற்கொள்ள முடியும். நாம் எவ்வளவு காலம் வாழ்ந்தோம் என்பது முக்கியமானதல்ல. எப்படி வாழ்ந்தோம் என்பதே வாழ்வுக்கு அர்த்தத்தை கொடுக்கிறது.

வாழ்க்கை என்பது ஒரு வண்ணப்பூங்கா. அது வருடமெல்லாம் வண்ணத்துப்பூச்சியின் சிறகின் கீழ் வசிப்பதில்லை. இங்கு இலை உதிர்க்காத மரங்களுமில்லை. மழைத்துளி படாத மண் பருக்கைகளும் இல்லை. எனினும் பூக்களைத் தந்து வண்டுகளைக் கவராமல் போவதுமில்லை. போராடி வாழும் பூமித்தாய் பிரசவித்த பூக்கள் நாம். தோல்வியைக் கண்டு மனமுடைந்து போகக் கூடாது.

''ஏழைகள் உணவைத் தேடுகின்றனர். செல்வந்தர்கள் பசியைத் தேடுகின்றனர்'' என்றார் கவிஞர். இன்பமும் துன்பமும் சுழல் சக்கரம் என்பார்கள். எம்மால் காற்றை நிறுத்த முடியாது. ஆனால் காற்று வீசும் திசையை அறிந்து எம் வாழ்க்கைப் பயணத்தை மாற்றியமைக்க முடியும். உன் வாழ்க்கைக்கு தேவையான அனைத்து சக்திகளும் உன்னிடமே உள்ளன'' என்றார் சுவாமி விவேகானந்தர். வளமில்லை என்று ஏங்காமல் இருப்பதைக் கொண்டு இயன்றவரை முயற்சி செய்ய வேண்டும். மாவீரன் கோலியாத் கூட வீழ்ந்தது தாவீதின் சிறு துண்டு கல்லால்தான். செயலில் வேகம் இருந்தால் போதும் வெற்றி பெற்றுவிடலாம்.

வலியை எண்ணி வருந்தாதே; காயம் கண்டு கண்ணீர் வடிக்காதே; எல்லாம் கணப்பொழுதில் ஆறிவிடும். அதை எண்ணிக் கலங்காதே. உண்மை வழி நட கனவுகள் எல்லாம் காணும் முன்பே நிஜமாகும். காலம் நல்ல துணையாகும். இயற்கை இனிய நண்பனாவான். வரலாறு உனக்கு வழிகாட்டியாகும். வானம் வசப்படும். நீங்கள் நினைத்தது மட்டுமல்ல நினைக்காதது கூட நிகழ்ந்தேறும். உங்களைப் பழித்தவர்கள் உங்கள் பாதம் கழுவுவர்.

வலிகள் எல்லாம் துளிகளாகி தூளாகிப் போகும். எப்போதும் வலிகள் தெரியாது. மனதில் வடுக்கள் தோன்றாது. வெற்றி உன்னைத் தொடரும் உன் தேடல் சரியாக உள்ளவரை மட்டும்தான்.

உங்களுடைய வாழ்க்கை என்னும் போர்க்களத்தில் உண்மை தவறாத தேடல் மூலம் கிடைக்கும் தோல்வி எல்லாம் வெற்றியை தேடிச் செல்லும். ஏமாற்றிப் பெறும் வெற்றியை விட நேர்மையாகப் பெறும் தோல்வி மேலானது. ஆணி வேரை அறுக்க நினைக்கும் நீரோட்டம் தான் ஆற்றங்கரை மரங்களை விருட்சமாக்கிறது. காலம் தோல்விகளை விழுங்கித்தான் வெற்றியைத் துப்பும்.

**போ.சித்திரா,** மானிப்பாய்.



## காலம் பதில் சொல்ல வேண்டுமிங்கு..

தமிழராய்ப் பிறந்த நாமெல்லாம்
இந்த நாட்டில் ஏன் பிறந்தோம்
என்றே கலங்குகின்றோம்
மாணவர்க் கிங்கின்று புனர்வாழ்வு
ஏன் இந்த அவல வாழ்வு

மனுநீதி கண்ட சோழன் காட்டினான்
மனுநீதியை கடைப்பிடிக்கும் தலைமை
எங்கே?
அரசன் எவ்வழி குடிகளும்
அவ்வழி வாழுதல் இயல்பன்றோ
ஜனநாயகம் என்கின்றனர்
ஜனநாயகமெங்கே?

பல்கலைக்கழகத்தில் நிலவியது சமாதானம்
புகுந்தது அராஜகம்
அரும்பாடுபட்டு பெற்றெடுத்த
பிள்ளைகளை
பெரும்பாடு படுத்தி மனநிறைவு கொண்டது
இத்தனை தாங்குமோ இள இதயங்கள்

தமிழனாய் பிறந்ததன்றி யாம் புரிந்த
குற்றமென்ன
தண்டமிழைப் பேசித் தன்னிலத்தில் வாழ
இங்கு
பேரினத்தால் ஏன் இந்த இடையூறு
தம்மவர்க்கு இது நடந்தாற் தாங்குமோ
அவர் இதயம்
காலந்தான் பதில் சொல்ல வேண்டுமிங்கு

***எஸ்.சாந்தி, திருநகர், கிளிநொச்சி***

## நவநாகரிகத்தை அதிகம் நாடிச் செல்வது பெண்களே!

ஆசைகள் மனிதர்களை தின்பது வழமை ஆனாலும் பெண்களையும் பெண் பிள்ளைகளையும் அதிகம் தின்று கொண்டு வருவதை யாராலும் மறுக்க முடியாது. மூத்த குடி சமூகம் இன்றுவரைக்கும் ஆண்களுக்கென வரையறைகள் வகுத்ததை விட பெண்களுக்காக வகுக்கப்பட்டவையே அதிகம். பெண்ணானவள் விலை மதிக்க முடியாத கற்பை உடையவள் என்பதே காரணம்.

ஆனாலும், அந்தக் கட்டுப்பாடுகளும் விதிமுறைகளும் உடைக்கப்பட்டு கற்புக் களவெடுப்பும், கடத்தல் கருக்கலைப்பும் இன்று தலைவிரித்தாடுகிறது. இதற்கெல்லாம் பிரதான காரணம் நாகரிகத்தை அதிகம் நாடிச் செல்லும் பெண்களே.

சந்தி பார்த்து கைகொட்டிச் சிரிக்க வைக்கும் அரை குறை ஆடையை அணிந்து வரும் பெண்களை உங்களில் யாரும் கண்டதில்லையா? மெல்லிடை கொண்ட மேனியை இறுக்கி பிழிந்து உலர வைக்கும் இறுக்கப் பாவாடைகளையும் கொங்கைகளை குழைய வைக்கும் மேலங்கிகளையும் அணிந்து கொண்டு அசைந்து வரும் பெண்களை கண்டதில்லையா? நிலத்திலிருந்து ஒரு சாண் உயரத்தில் குதியுடைய காலணிகளை அணிந்து பஸ்களில் பயணிக்கும்போது அடுத்தவரின் கால்களை மிதித்தும் நெரிசலிலே சிக்கியிருக்கும், அறிமுகம் இல்லாதவரை கூட அழ வைக்கும் பெண்களைக் கண்டதில்லையா?

உதட்டிலும், கண்மடலிலும் வர்ணப் பூச்சுக்கள், குரங்கு வால் போன்ற வடிவமைத்த கூந்த திலகமற்ற பரந்த நெற்றி. இவைகளை அதிகம் நாடிச் செல்லும் இன்றைய பெண்களையும் மஞ்சள் பூசி தன் கூந்தலுக்கு மல்லிகை சூடி உடல் நிறைந்த சேலையுடன் திலகமிட்டு இயல்பான கயல் கண்களுடனான அன்றைய பெண்களையும் ஒப்பிட்டு பார்க்கும்போதே தெரிகின்றது. நவநாகரிகத்தை அதிகம் நாடிச் செல்வது பெண்களே என்று. நவநாகரிகத்தையே அதிகம் நாடிச் செல்லும் பெண்கள் கூட்டம் ஒரு பெண்ணுக்கு எது அழகு என்பதை புரிந்துகொள்ளும் வரைக்கும் நவநாகரிகத்தை அதிகம் நாடிச் செல்வது பெண்கள் தான் என்ற முடிவிலிருந்து யாரும் மாறப் போவதில்லை.

**எஸ்.ஜே.ஆதி,**
யாழ்ப்பாணம்.



## கடற்கரையினிலே...

நிலவில் ஒரு சோலை வனம்
தேன் சொரியும் பாலைவனம்
மணலில் கால் புதையும் கணம்
மறைந்து போகும் தீய குணம்

நட்சத்திரங்களின் கண்காட்சி
நிலவு ராணியின் நல்லாட்சி
தென்றலும் அதற்கு ஒரு சாட்சி
தீய குணங்களின் பெரும் வீழ்ச்சி

இயற்கை அன்னையின் ஒரு
நட்டம்
இனிய மலர்களின் இதழ் வாட்டம்
மலர்களே யில்லா ஒரு கட்டம்
மதியின் வரவால் அல்லிக்
கூட்டம்

கடலலைகளின் சிரிப்பொலி
இனிமை சேர்க்கும் தண்ணொளி
நல்லிதயங்களுக்கு ஒரு முகவுரை
- இயற்கை
நன்றி மறந்தோர்க்கு முடிவுரை

எஸ்.வினோஜினி.





## விமர்சனம்

நீங்களும் எழுதலாம்....

**நவநாகரிகத்தை அதிகம் நாடிச் செல்வது**

**ஆண்களா? பெண்களா?**

உங்கள் காரணங்களை விமர்சனப் பகுதியில் முன் வைத்து விமர்சியுங்கள்.

தரமான விமர்சனங்கள் பிரசுரமாவதோடு சிறந்த விமர்சனங் களுக்குப் பரிசுகளும் வழங்கப்படும்.

## இளைஞர், யுவதிகளே!

உங்களின் திறமைகளை வெளிக்கொணரவும் பிரச்சினைகள் பற்றிப் பேசவும் தேடல்களுக்குத் தீனி போடவும் 'இளவல்கள் வட்டம்' என்ற இந்தப் பகுதி மலர்ந்துள்ளது. இந்தப் பகுதிக்கான உங்கள் படைப்புக்களையும் ஏதாவது சந்தேகங்களையும் விமர்சனங்களையும் கீழேயுள்ள படிவத்தோடு இணைத்து அனுப்பிவையுங்கள்.

பெயர் :-..........................................................

முகவரி :- ......................................................

..........................................................

........................ திகதி

........................ கையொப்பம்

**'இளவல்கள் வட்டம்',**
'உதயன்', 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

## பள்ளிப் பருவம்

சிட்டுக் குருவி போல் சிறகடிக்கும் பருவம்
குழப்படி என்னும் கடலில் நீச்சல் அடிக்கும் பருவம்
நட்பு என்னும் பெரும் சொத்தை சம்பாதிக்கும் பருவம்
கல்வி என்னும் இனிய தேனை அருந்தும் பருவம்
பரீட்சைகள் என்னும் சவால்களை எழுத ஆரம்பிக்கும் பருவம்
ஆசான் என்னும் தெய்வத்தின் ஆசி பெறும் பருவம்
நம் கலைகளை கலைக்களஞ்சியங்களாக மாற்றியமைக்கும்
பருவம்
வாழ்வின் சவால்களைப் பற்றி அறிய வைக்கும் பருவம்
[illegible]
[illegible] இந்தப் பள்ளிப் பருவம்



**ஜனனி பிரேம்குமார்,** வராகி அம்மன் கோயிலடி, கொக்குவில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## திருமதி குலசிங்கம் வள்ளிநாயகி



சோதிவீதி, காங்கேசன்துறையைப் பிறப்பிடமாகவும், மணற்புலம், அளவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி குலசிங்கம் வள்ளிநாயகி நேற்று(02.01.2013) புதன்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.01.2013) வியாழக்கிழமை மு.ப. 10.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக் கிரிகைக்காக மல்லாகம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மணற்புலம், அளவெட்டி. தகவல்: குடும்பத்தினர்.

## நன்னி அப்புத்துரை



*(ஓய்வு பெற்ற புகையிரத ஊழியர்)*

கோண்டாவில் வடக்கு, வீரபத்திரர் வீதியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட நன்னி அப்புத்துரை கடந்த (25.12.2012) செவ்வாய்க்கிழமை இரவு 9.00 மணியளவில் காலமானார்.

அன்னாரின் நல்லடக்க ஆராதனை இன்று (03.01.2013) வியாழக்கிழமை மு.ப 9.00 மணியளவில் கொட்டைக்காடு மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வீரபத்திரர் வீதி, கோண்டாவில் வடக்கு, கோண்டாவில். தகவல்: பூரணம் (மனைவி)

## திருமதி பேரின்பமலர் சண்முகம்



விறாச்சி உடுப்பிட்டியைச் சேர்ந்த பேரின்பமலர் சண்முகம் நேற்று முன்தினம் (01.01.2013) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா குமாரசாமி சிவயோகரத்தினம்மா தம்பதியரின் அன்பு மகளும், சிதம்பரபிள்ளை சண்முகத்தின் (J.P. ஓய்வுபெற்ற கணக்காய்வு அத்தியட்சகர்) அன்பு மனைவியும், பிரதீபா, தயாளினி, விஜிதா ஆகியோரின் அன்புத் தாயும், துஷ்யந்தன், அமிர்தசொரூபன், சசிகுமார் ஆகியோரின் அன்பு மாமியும், அனிஷ், டனேஷ், சேயோன் ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (02.01.2013) புதன்கிழமை பி.ப 1.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கரும்பாவெளி இந்துமயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

விறாச்சி, உடுப்பிட்டி. தகவல்: குடும்பத்தினர். 0212263187

# மரண அறிவித்தல்

## திருமதி குணதாசன் எலிசபெத்



கச்சாய் வடக்கு, கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி குணதாசன் எலிசபெத் நேற்று (02.01.2013) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற குணதாசனின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான அந்தோனி - சூசானம் தம்பதியரின் மகளும், காலஞ்சென்றவர்களான சிங்கராஜா - றோசாமுத்து தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்றவர்களான லூர்த்துமலர், செபஸ்தியாம்பிள்ளை, மரியநாயகம் ஆகியோரின் அன்புச் சகோதரியும், இமெல்டா (ஆன்), பிளிசிடா (புனிதா), லிஸ்ரர்ஜோசப் (நிமலன்), கிறிஸ்சில்டா (ஆசிரியை கிளி/ செண்பன் குன்று அ.த.க பாடசாலை, பூநகரி), ஜெயசில்டா (ஆசிரியை, யா/சென்ஜேம்ஸ் ஆண்கள் மகா வித்தியாலயம்), கிறிஸ்ரிஜோசப் (அமலன்), உரிமையாளர் (அக்னா பான்சி சுன்னாகம்) ஆகியோரின் அன்புத் தாயும், செல்வராஜன் (செல்வக்குமார்), ஜெய ரட்ணம், நிர்மலா (ஆசிரியை, யா/ யூனியன் கல்லூரி தெல்லிப்பழை), ஜெயசிங் சத்திய சீலன், மரிய அன்ரனி, Dr. றோஸ்சுகந்தி (D.A.M) ஆகியோரின் அன்பு மாமியும், ஆண்டனியா, ஆணிடிலக்ஷி (உயர்தர மாணவிகள், யா/ கொடிகாமம் திருநாவுக்கரசு மகா வித்தியாலயம்), ஜேம்ஸ்டனிஸ்வரன், சறோன் கிறிஸ்ரின், ஜெரன்சி, லங்கினி, அறோன், எமரிஸ், ரிவாங்கனி, அனற்அபிஷேகா, அக்னற்லித்வினா ஆகியோரின் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான கபிரியேல் அமிர்தனாதன், கிறிஸ்தோத்தோம், வரப்பிரகாசம், அலோசியஸ், தர்மராஜா மற்றும் நட்சத்திரம், மேரிகிறஸ்ரீனா, மேரி அஞ்சலீனா, மாசறிப்போல், அன்னம்மா, ஞானசம்பூர்ணம் ஆகியோரின் மைத்துனியும், அருட்பணி றொபின்சன் யோசப் (லண்டன்), அருட்சகோதரி விமலினி (A/L) ஆகியோரின் மாமியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் நல்லடக்கத்துக்காக (03.01.2013) முற்பகல் 10.30 மணிக்கு அவரது இல்லத்தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு கச்சாய் புனித இராயப்பர் ஆலயத்தில் இரங்கல் திருப்பலியின் பின் இராயப்பர் ஆலய சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கச்சாய் வடக்கு, கொடிகாமம். தகவல்: குடும்பத்தினர். T.P. 0779587208

(c/2864)(3)

புதிதாக அமைக்கப்பட்டும்

# திறக்கப்படாத கட்டடம்

### விசனம் தெரிவிக்கிறார் துணுக்காய் பிரதேச சபைத் தலைவர்

அக்கராயன், ஜன.3

புதிதாக அமைக்கப்பட்ட துணுக்காய் பிரதேச சபைக் கட்டடம் திறந்து வைக்கப்படாத நிலையில் உள்ளதால், சபை நடவடிக்கைகளை மேற்கொள்வதில் நெருக்கடி காணப்படுவதாக பிரதேச சபைத் தலைவர் வீ.இராசரத்தினம் விசனம் தெரிவித்துள்ளார்.

துணுக்காய் பிரதேச சபை தற்காலிகமாக இயங்கி வந்த தனியார் கட்டடம் கடந்த 31 ஆம் திகதியுடன் அதன் உரிமையாளரிடம் ஒப்படைக்கப்பட்டது. இந்த நிலையில் பிரதேச சபைக்கெனப் புதிதாக நிர்மாணம் செய்யப்பட்ட கட்டடம் கடந்த ஆறு மாத காலமாகத் திறந்து வைக்கப்படாத நிலையில் காணப்படுகின்றது. இதனைத் திறந்து வைப்பதற்கான அனுமதி மேலிடத்திலிருந்து கிடைக்காமையே இதற்குக் காரணம் எனவும் பிரதேச சபைத் தலைவர் தெரிவித்தார்.

இதனைத் திறந்து வைப்பதற்கு உள்ளூராட்சி உதவி ஆணையாளர் மூலமாகத் தாம் பலமுறை முயற்சி செய்தபோதிலும் அது இதுவரை நிறைவேறவில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதுவரை பிரதேசசபை அலுவலகம் இயங்கி வந்த தனியார் கட்டடத்துக்கு மாதாந்தம் 7 ஆயிரம் ரூபா வீதம் வாடகை வழங்கப்பட்டு வந்ததாகத் தெரிவித்த அவர் சொந்தக் கட்டடம் அமைக்கப்பட்ட பின்னரும் சபையின் நிதி இவ்வாறு வீணடிக்கப்பட்டதாகத் தெரிவித்தார்.

தற்போது முன்னர் இயங்கிய கட்டடத்திலேயே தற்காலிக ஏற்பாட்டின் அடிப்படையில் பிரதேச சபை இயங்குவதாகத் தெரிவித்த பிரதேச சபைத் தலைவர் கட்டட உரிமையாளர்கள் வெளியேறுமாறு கோரும் பட்சத்தில் சபை பெரும் நெருக்கடியை எதிர்கொள்ள நேரிடும் என்றும் தெரிவித்தார்.

மேலும் திறப்பு விழாவுக்கென ஐயன்கன்குளம் பொதுச் சந்தையும் மேலிடத்தின் உத்தரவுக்காகக் காத்திருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த இரு கட்டடங்களையும் திறந்து வைப்பதில் ஏற்பட்டுள்ள வீணான தாமதம் தொடர்பாக இங்குள்ள பலரும் கவலையும், விசனமும் தெரிவித்துள்ளதாகவும் தெரிய வருகின்றது. (க-18)

# குஞ்சுக் குளத்திலிருந்து மேலதிக நீர் வெளியேற்றம்

அக்கராயன்,ஜன.3

குஞ்சுக் குளத்தின் வால் கட்டுப்பகுதி வெட்டப்பட்டு நீர் வெளியேற்றப்படுவதாக துணுக்காய் பிரதேச செயலர் சி.குணபாலன் தெரிவித்துள்ளார்.

துணுக்காய் யோகபுரம் மத்தியில் இந்தக் குஞ்சுக் குளம் அமைந்துள்ளது.

மேலும் வவுனிக்குளம் வால் கட்டுப்பகுதியையும் வெட்டுவதற்கு முடிவு எடுக்கப்பட்டதாகவும் மழை ஓய்ந்திருப்பதால் அந்த நடவடிக்கை நிறுத்தப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

மாந்தை கிழக்கு, துணுக்காய் ஆகிய பிரதேசங்களில் மழை வெள்ளம் காரணமாக குளங்கள் வான் பாய்ந்ததால் போக்குவரத்துகள் தடைப்பட்டதாகத் தெரிவித்த அவர் மழை ஓய்ந்துள்ளதால் போக்குவரத்துகள் ஓரளவு சீராகியுள்ளதாகவும் தெரிவித்தார். (க-18)

உதயன் விளம்பரத் தொடர்புக்கு
advt@uthayan.com
0215671111

காணி விற்பனைக்கு
488, கஸ்தூரியார் வீதியில் காணி விற்பனைக்குண்டு.
தொ.இ- 0776147399, 021 2223375

# மரண அறிவித்தல்

## வடிவேலு பவளம்



உரும்பிராயைப் பிறப்பிடமாகவும், கட்டுடையை வசிப்பிடமாகவும் கொண்ட வடிவேலு பவளம் (02.01. 2013) புதன்கிழமை காலமாகி விட்டார்.

அன்னார் வடிவேலுவின் அன்பு மனைவியும்,சுந்தரம், பாக்கியத்தின் சகோதரியும், உமாதேவி, வைகுந்த வாசன் (ஜேர்மனி), கெங்காதேவி, துவாரகன் (ஆசிரியர், கிளி/ஞானிமடம் அ.த.க. பாடசாலை) ஆகியோரின் அன்புத்தாயும், சதாசிவம், நளினி (ஜேர்மனி), பேரின்பநாதன், யசோதா(நிகழ்ச்சித் திட்ட உதவியாளர், வலிகிழக்கு பிரதேச சபை) ஆகியோரின் மாமியும், சிவபாலன், வசீதரன், ராம்ஜி, அஜந், அனிஜா, சாம்பவி, சக்திபாகன், செந்தாழன், அரிஞ்சயன், அனுபாமா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(03.01.2013) வியாழக்கிழமை நண்பகல் 12மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

கட்டுடை, மானிப்பாய். தகவல்: குடும்பத்தினர்.

தேவை
★ காசாளர் - பெண்
தகைமை - கா.பொ.த உயர்தரம்
(கணினி அறிவு அவசியம்)
★ பாதுகாப்பு உத்தியோகத்தர் - ஆண்
நேர்முகத் தேர்வு - 05.01.2013
சனிக்கிழமை மு.ப 10.00 மணி
புதிய யாழ். வைத்தியசாலை
515, பலாலி வீதி, பரமேஸ்வரா சந்தி,
திருநெல்வேலி.
தொலைபேசி இல: 021 222 1011, 021 222 3533

SAAMSON ENGLISH 3 மாத ஆங்கில பயிற்சிப்பட்டறை
அரச, தனியார் அலுவலர்கள், பல்கலைக்கழக, உயர்கல்வி மாணவர்கள், இளைஞர், யுவதிகள் O/L மாணவர்களுக்கான
சனி, ஞாயிறு புதிய பிரிவுகள் ஆரம்பம்- 05.01.2013
காலை- 08-10 மாலை- 01-03
காலை- 10- 12 மாலை- 03-05
(முதல் நாள் அனைவரும் காலை 08.00 மணிக்கு சமூகமளிக்கவும்)
SAAMSON ENGLISH
279,ஆஸ்பத்திரி பின் புறம், யாழ்.
TEL- 077 621 4567

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

| மலர்வு | உதிர்வு |
| --- | --- |
| 11 * 08 * 1932 | 14 * 01 * 2012 |



## அமரர் வேலு இராமு

திதி- அபரபக்க சஷ்டி (03.01.2013)

குடும்பத் தலைமைக்கு எடுத்துக்காட்டாய்
கடமை உணர்வுக்கு முன்னுதாரணமாய்
பொருள் தேடக் கல்வி கற்றும் - கல்வி
புகழ் தேடி பட்டம் பெறவும்
முறையாகத் திட்டமிட்டு எமை வளர்த்த
தந்தையே
அன்னையும் நாமும் மருமக்களும்
கிளைகளின் கிளைகளும் உறவும் - உங்கள்
அமரத்துவ ஒரு வருட நிறைவில்
நினைவிலிருத்தி அகமுருகி அஞ்சலிக்கிறோம்

விக்னேஸ்வரா வீதி, சங்கானை

மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வயற் காணி விற்பனைக்கு** கரவெட்டிதில்லையம்பலப்பிள்ளையார் கோயிலுக்கு வடக்குப்புறமாக அடிவாய்க்காலின் இருபக்கமும் உள்ள 15 பரப்பு வயற் காணி(பதினைந்து) எக்காலமும் நெல்விளையக்கூடிய நிலம், அதிகவிலை கோருபவருக்கு உடன் விற்கப்படும்.

தொடர்பு: 0770597784. (சி/2792)(6.7.4)

# மரண அறிவித்தல்

## திருமதி இராசமணி சுப்பிரமணியம்



பருத்தித்துறையை பிறப்பிடமாகவும் வவுனியாவை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி இராசமணி சுப்பிரமணியம் நேற்று (02.01.2013)புதன்கிழமை காலமானார்.

அன்னார் வல்வெட்டித்துறையை சேர்ந்த காலஞ்சென்ற சரவணமுத்து சுப்பிரமணியத்தின் அன்பு மனைவியும், திருமதி ராதை தில்லைநாதன் (கொழும்பு), Dr(Eng) S.S சிவகுமார் (சிரேஸ்ட விரிவுரையாளர், பொறியியல்பீடம், யாழ் பல்கலைக்கழகம், முன்னாள் திட்டப்பணிப்பாளர் ENReP), Dr. S.நந்தகுமார் (ஆஸ்திரேலியா), Dr.(Eng).S.சாந்திகுமார் (ஆஸ்தி ரேலியா), Dr.S.திருக்குமார் (ஜேர்மனி) ஆகியோரின் அன்புத்தாயாரும், B.தில்லைநாதன், S.லோகேஸ்வரி, N.தர்மினி, S.சாந்தினி, T.காஸ்திரின் ஆகியோரின் அன்பு மாமியாரும் Dr.S.ஜனனி (களுபோவில போதனா வைத்தியசாலை), S.ஜனன்(CIC Agri Business), T.கஜமுகன், T.கஜரூபன், N.ராகுலன் (ஆஸ்திரேலியா) S.சங்கமி(ஆஸ்திரேலியா), S.சங்கவி (ஆஸ்திரேலியா), T.முறியா (ஜேர்மனி), T.அல்யுசா(ஜேர்மனி) T.மிலான்குமார் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், S.அஸ்வின், S.சுருதி J.ஆருண்யன் ஆகியோரின் பாசமிகு பூட்டியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 281, பிள்ளையார் கோயில்வீதி, உக்குளாங்குளம் வவுனியாவில் வைக்கப்பட்டு இன்று (03.01.2013) வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தச்சனாங்குளம் இந்து மயானத்திற்கு தகனக் கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

281, பிள்ளையார் கோயில் வீதி,
உக்குளாங்குளம்,
வவுனியா.

தகவல்:
Dr(Eng). S.S சிவகுமார்
+ 94 24 2220632
sssiva100@yahoo.com
(C/2793)(6.7.11)


# After O/Level's..?

இம் மாத பதிவுகளுக்கு எங்களுடன் இணைந்து T-Shirt ஒன்றினை இலவசமாக பெற்றுக்கொள்ளுங்கள்

(கையிருப்பு உள்ளவரை மட்டுமே)

New batches
5th Jan 2013
7th Jan 2013
@ 9.00 am

DiTEC Diploma in Information Technology 4 Months
DiCA Diploma in Computerized Accounting 4 Months
DiBM Diploma in Business management 4 Months
DiSE Diploma in Software Engineering 6 Months
DiWE Diploma in Web Engineering 6 Months
DiE Diploma in English 4 Months

HOTLINE 077 309 9 308



ESOFT The Leader in Professional ICT Education
Trusted IT Partner

ESOFT Metro Campus - Jaffna
No. 137, K.K.S Road, Jaffna
Tel :021 2224142 , Web :www.esoft.lk

Register Today.... !!!


# மாகேஸ்வர பூசை

காரைநகர் ஈழத்துச் சிதம்பர மணிவாசகர் மண்டபத்தில் திருவாசக, திருக்கோவையர் முற்றோதலும் மகேஸ்வரப் பூசையும் இன்று வியாழக் கிழமை நடைபெற வுள்ளது.

60 நாயன்மார் குரு பூசைத்தினங்களிலும் பெரிய புராண முற்றோதலும் மகேஸ்வரப் பூசையும் இடம் பெறும் என்று மேலும் அறிவிக்கப்பட்டுள்ளது. (4-250)

## மகரஜோதி விழா

கோண்டாவில் சபரீச ஐயப்பன் தேவஸ்தான மகர ஜோதி மண்டல விரத பெரு விழா இன்று வியாழக்கிழமை பிற்பகல் 5 மணிக்கு நடைபெறவுள்ளது.

இதனை முன்னிட்டு ஈழ நல்லூர் பாலமுருகன் குழுவினரின் விஷேட மேளக்கச்சேரியும், விஷேட புல்லாங்குழல் கச்சேரியும் நடைபெற்று விஷேட அபிஷேகம், பஜனை, 18 படிப் பூசை என்பன நடைபெற்று அடியவர்களுக்கு சக்தி பூசையும் இடம் பெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (16)

## ஜயந்தி தினம்

ஐயப்பன் ஜெயந்தி தினமும் மணி கண்ட நாதம் நூல் வெளியீடும் இன்று மாலை 6 மணிக்கு கோண்டாவில் சபரீச ஐயப்பன் தேவஸ்தானத்தில் நடைபெறவுள்ளது.

பிரம்மஸ்ரீ ஹரிஹர சுதக் குருக்கள் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி க. ஸ்ரீ கணேசன் கலந்து கொள்வார்.

நூல் ஆய்வுரையை காரை எம்.பி. அருளானந்தசிவம் வழங்குவார். (16)

# வாடகை அடிப்படையில் வான் பெறுவதற்கான கேள்வி விலை கோருதல்
## மாகாணப் பணிப்பாளர் அலுவலகம், கட்டடங்கள் திணைக்களம், வட மாகாணம், யாழ்ப்பாணம்

மாகாணப் பணிப்பாளர் அலுவலகம், கட்டடங்கள் திணைக்களம், வடக்கு மாகாணத்தின் கீழ் உள்ள மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களின் அலுவலகங்களுக்கு வாடகை அடிப்படையில் வான் பெற்றுக் கொள்வதற்கான கேள்வி கோரலை இல.40, றக்கா லேன், சுண்டிக்குளியில் அமைந்துள்ள எமது அலுவலகத்தின் விளம்பரப் பலகையில் பார்வையிட்டு கேள்விப் பத்திரங்களைப் பெற்று 2013.01.10 ஆம் திகதி முற்பகல் 11 மணிக்கு முன்னராக அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

எந்திரி செ.மோகனதேவன், தலைவர், பெறுகைக்குழு, கட்டடங்கள் திணைக்களம், வடக்கு மாகாணம், இல.40, றக்கா லேன், யாழ்ப்பாணம். தொ.பே.021 222 8091/ 021 320 2638

# வேப்பமரம் விற்பனைக்கான கூறுவிலை

யாழ் மாவட்ட தனியார் பாரவூர்தி உரிமையாளர் கூட்டுறவுச் சங்க வளாகத்தில் அமைந்துள்ள 50 வருடங்களுக்கு மேல் பழைமை வாய்ந்த வேப்பமரம் உடனடியாக விற்பனைக்குள்ளது.

மேற்படி மரத்தினை சங்க அலுவலக கடமை நேரத்தில் நேரில் பார்வையிட்டு கூறுவிலையினை மூடிய தபால் உறையில் 12.01.2013 ஆம் திகதிக்கு முன்னர் கீழ்க்காணும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

யாழ் மாவட்ட தனியார் பாரவூர்தி உரிமையாளர்
கூட்டுறவுச் சங்கம்,
இல.209, இருபாலை வீதி,
கோண்டாவில்.

பொதுமுகாமையாளர்.

(C/5217)(6.7.11)

# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை
## ஏல விற்பனை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பலாலி வீதியிலுள்ள பட்டப்படிப்புகள் பீடத்திற்குரிய காணியில் தறிக்கப்பட்ட புளியமரமும் அதன் பகுதிகளும் 08.01.2013 செவ்வாய்க்கிழமை முற்பகல் 10.00 மணிக்கு ஏலத்தில் விடப்படவிருக்கின்றன.

இந்த ஏல விற்பனையில் கலந்து கொள்ள விரும்புவோர் 08.01.2013 அன்று முற்பகல் 10 மணியளவில் நிர்வாகக் கிளைக்கு சமுகமளிக்கவும்.

வெற்றிபெறும் ஏலதாரர் முழுத்தொகையையும் உடனடியாகச் செலுத்தி அன்றைய தினமே பொருள்களை அப்புறப்படுத்த வேண்டும்.

(வி/5212) (45.6.7)

பதிவாளர்.

# மரண அறிவித்தல்கள்

## திருமதி தனபாக்கியம் நவரட்ணம்

ஊர்காவற்துறை,கரம்பொன்கிழக்கு, ஒழுவில் வீதியைப் பிறப்பிடமாகவும் கனடா, ரொறன்ரோவை வதிவிடமாகவும் கொண்ட தனபாக்கியம் நவரட்ணம் 30.12.2012 ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கரம்பொன் நாகலிங்கம்- சீதேவிப்பிள்ளை தம்பதியரின் புதல்வியும் காலஞ்சென்றவர்களான உடுவிலைச்சேர்ந்த செல்லையா- பொன்னம்மா தம்பதியரின் மருமகளும் காலஞ்சென்ற நவரட்ணம் அவர்களின் அன்பு மனைவியும் சிவகாந்தன் (அமெரிக்கா), காலஞ்சென்ற சந்திரகாந்தன் மற்றும் அஜந்தா (கனடா),ஜயந்தா(கனடா),சுகந்தா (கனடா), விஜிதா(கனடா) ஆகியோரின் அன்புத் தாயும் காலஞ்சென்றவர்களான இராசதுரை, மார்க்கண்டு, இராஜரட்ணம் மற்றும் மங்கையர்க்கரசி ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை நிகழ்வுகள் இன்று (03.01.2013) வியாழக்கிழமை கனடாவில் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்கள்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

கந்தரோடை (27558) (6.7.4)

தகவல்:
திருமதி ஆறுமுகம் மங்கையர்க்கரசி
(மைத்துனி)

## வல்லிபுரம் நவமணி



உரும்பிராய் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட வல்லிபுரம் நவமணி நேற்று (02.01.2013) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லிபுரத்தின் அன்பு மனைவியும், சிவகுமார், ஜெயக்குமார், கிருஷ்ணகுமாரி, உருத்ரகுமாரி, பாலேஸ் வரி, பாலேஸ்வரன் ஆகியோரின் அன்புத் தாயும், செல்வராணி, விஜயலஷ்சுமி, செல்வரத்தினம், கோவிந்தராஜா, போல் கமல்ராஜ், பிந்து ஆகியோரின் மாமியும், மயூரன், காயத்திரி, நிரூபினா, கல்யாணி, கார்த்திகா, காங்கேஜன், கவிதா, கேசவன், மேகலா, கீர்த்தனா, பவித்திரா, மேரிடெனா, யூலியானா, சினேகா, சுருத்திகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், யதுர்சிகா, சௌமியா, சஜானி ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.01.2013) வியாழக் கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் இளங்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்பட்டு தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

உரும்பிராய் கிழக்கு,
உரும்பிராய். (27554) (45.6.7)

தகவல்:
பிள்ளைகள்.

# மரண அறிவித்தல்

## பஞ்சரத்தினம் தவமணிதேவி



கலட்டித்துறை, இமையாணன், உடுப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட பஞ்சரத்தினம் தவமணி தேவி நேற்று முன்தினம் (01.01.2013) செவ்வாய்க்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான இராமலிங்கம் - சரஸ்வதி தம்பதியரின் பாசமிகு மகளும், காலஞ்சென்றவர்களான கார்த்திகேசு - சிவக்கொழுந்து தம்பதியரின் அன்பு மருமகளும், பஞ்சரத்தினத்தின் அன்பு மனைவியும், அனுராதா (லண்டன்), அனுரா (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தாயும், இந்துமதியின் அன்புச் சகோதரியும், ராஜு (லண்டன்), பிரதீபா (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியும், நேதனின் (லண்டன்) பாசமிகு அம்மம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.01.2013) வியாழக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக எள்ளங்குளம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பூனியனடி,
இமையாணன்,
உடுப்பிட்டி.

தகவல்:
குடும்பத்தினர்.
கார்த்திகேசு பஞ்சரத்தினம் (கணவர்),
அனுராதா, அனுரா (பிள்ளைகள்),
தொ.பே. 077 3056 774, 021 226 4809.
(27559)(45.6.7)

# பெயர் மாற்றம்

உரும்பிராய் கிழக்கு எனும் முகவரியுடைய மார்க்கண்டு சந்திராணி எனும் எனது பெயரை இன்றிலிருந்து மார்க்கண்டு இந்திராணி என பெயர் மாற்றி சகல ஆவணங்களிலும் கையொப்பம் இடுவேன் என சகலருக்கும் அறியத்தருகிறேன்.

உரும்பிராய் கிழக்கு. மா.இந்திராணி
(27562)(6.7.11)

# வீடு வாடகைக்கு

யாழ். இந்துக்கல்லூரிக்கு அண்மையிலுள்ள ஓடை லேனில் சிறிய குடும்பத்திற்கான வீடு வாடகைக்குண்டு

தொடர்பு: 0772445706 (27553)(6.7.11)

# மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு

MD நைன்ரி 500 - XXXX இலக்கமுடைய மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:- 0775546963 (25590)(6.2.7)

# வீடு வாடகைக்குத் தேவை

சிறிய குடும்பம் ஒன்றுக்கு தட்டாதெரு, நல்லூர், சுண்டுக்குளி, கச்சேரியடி போன்ற யாழ்நகர் சுற்று வட்டாரத்துக்குள் காணி திறப்பிடத்துடன் வீடு வாடகைக்குத் தேவை.

தொடர்பு: 021 222 7535, 0777158476 (27556)(6.7.11)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர் முடிந்த பின்னரும் கூட மக்களை வதைக்கிறது அரசு

## கரு ஜயசூரிய எம்.பி. குற்றச்சாட்டு



கொழும்பு,ஜன.3

போர் முடிந்த பின்னரும் கூட மக்களை அரசு தொடர்ந்து வதைக்கிறது.

இவ்வாறு ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் கரு ஜயசூரிய குற்றம் சாட்டியுள்ளார்.

போர் இடம்பெற்ற காலப் பகுதியில் பொதுமக்களிடம் இடுப்புப்பட்டிகளை இறுக்குமாறு கூறிய அரசு, போரின் பின்னரும் அதனை மாற்றாதுள்ளது.

திருமண பதிவுகளுக்கு அறவிடப்படும் கட்டணத்தை அதிகரிப்பதற்காக அரசு எடுத்த தீர்மானம் தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கை ஒன்றிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

திருமணப் பதிவாளர் அலுவலகத்துக்குவெளியில் மேற்கொள்ளப்படும் பதிவுகளுக்காக அறவிடப்படும் ஆயிரம் ரூபா கட்டணத்தை ஐந்தாயிரம் ரூபாவாக அரசு அதிகரித்துள்ளது.

உயர் மட்டத்திலுள்ளவர்களுக்குஅல்லதுஅரசஉயர்மட்டத்திலுள்ளவர்களின் நண்பர்களுக்கு அது பாதிப்பை ஏற்படுத்தாது.

நாட்டினால் சுமக்க முடியாத அமைச்சரவை மற்றும் ஜனாதிபதி ஆலோசகர்கள் மூலம் பல்வேறு அரசியல் நியமனங்களை பெற்றுக் கொண்டவர்களுக்காக அரசு வீண்விரயமாக்கும் நிதியை அறவிடுவதற்கு மக்கள் மீது வரி சுமையை திணிக்கின்றது.

பொதுமக்களிடமிருந்து கொள்ளையடிக்கும் நிதியை அமைச்சரவைக்கு செலவிடுவதை உடனடியாக நிறுத்த வேண்டும்.-என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.(ச)

## மனம், சித்தம், புத்தி, அகங்காரம் இடையேயான வேறுபாடுகள்

நிலையற்ற எண்ண அலைகளைக் கொண்டிருக்கும் போது சிந்தை அல்லது மனம் ஆகிறது. சரியா பிழையா என்ற பிரித்தறி ஆய்வில் முற்பட்டிருக்கும் போது அது புத்தி அல்லது புலமைச் சிறப்பு ஆகிறது.

சிந்தையானது ஞாபகங்களின் களஞ்சியமாகும் போது சித்தம் எனப்படுகின்றது. சித்தமானது இவ்வாழ்வின் ஞாபகங்களை மட்டுமல்லாமல் முன்னைய வாழ்க்கையினதையும் தன்னகத்தே கொண்டுள்ளது.

சிந்தையானது தன்னைப் பௌதிக உடம்புடன் ஒருமைப்பாடு கொண்டு சகல கருமங்களதும் கர்த்தா தான் என ஏற்கும் போது அதற்கு அகங்காரம் எனப் படுகிறது.

சிந்தையானது அடிப்படையில் ஒன்றாக இருந்த போதிலும் இவ்விதமாக நான்கு வேறுபட்ட நிலையினைப் பிரதிபலிக்கின்றது. இதற்குக் காரணம் அதன் தொழிற்பாடேயாகும். சிந்தையின் செயற்பாட்டை தனி நடிப்புக்கு ஒப்பிடலாம்.[ஒருவரே பல பாத்திரங்களாக நடித்துக்காட்டுதல்] பல்வேறுபட்ட சந்தர்ப்பங்களுக்கும் ஏற்ப சிந்தையானது பல்வேறு உருவங்களைத் தாங்கி பல்வேறு செயற்பாடுகளில் ஈடுபடுகின்றது.



சாயி சிந்தனை

## காரைக்கால் மீனவர்கள் மீது இலங்கை கடற்படை தாக்குதல்

காரைக்காலில் இருந்து கடலுக்கு மீன்பிடிக்கச் சென்ற கீழக்சாக் குடிமேடு கிராமத்தை சேர்ந்த மீனவர்கள் 7 பேரை இலங்கை கடற்படையினர் தாக்கி, மீன்கள் ரூ.2.5 லட்சம் மதிப்புள்ள மின்னணு சாதனங்களை பறிமுதல் செய்து கொண்டனர் என்று இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டன.

காரைக்கால் மாவட்டம், கீழக்சாக்குடிமேடு கிராமத்தைச் சேர்ந்த முருகன் என்பவருக்குச் சொந்தமான படகில் அதே கிராமத்தை சேர்ந்த மீனவர்கள் சந்திரவேல், ஞானவேல், முரளி, அய்யப்பன், செல்வம், மாணிக்கவேல், சீனிவாசன் ஆகியோர் கடந்த மாதம் 29 ஆம் திகதி காரைக்கால் மீன்பிடித் துறைமுகத்திலிருந்து விசைப்படகில் கடலுக்கு மீன்பிடிக்கச் சென்றனர்.

காரைக்காலில் இருந்து சுமார் 50 நாட்டிக்கல் மைல் தூரத்தில் 31 ஆம் திகதி பகல் மீன்பிடித்துக்கொண்டிருந்த போது அங்கு வந்த இலங்கை கடற்படையினர், காரைக்கால் மீனவர்களை தாக்கியதோடு, அவர்களை கடலில் குதிக்க வைத்தனராம். பின்னர் படகில் இருந்த சுமார் (இந்திய) ரூ.50 ஆயிரம் மதிப்புள்ள மீன்கள், (இந்திய) ரூ.2.5 லட்சம் மதிப்புள்ள மின்னணு சாதனங்களை பறித்துக் கொண்டு, படகில் ஏறி சென்றுவிடும்படி எச்சரித்துவிட்டுச் சென்றனர்.

பாதிக்கப்பட்ட மீனவர்கள் 7 பேரும் நேற்று முன்தினம் அதிகாலை காரைக்காலைச் சென்றடைந்தனர். அவர்களிடம் நடந்த விவரங்களை மீனவ கிராமத் தலைவர்கள், மீன்வளத் துறை அதிகாரிகள் விசாரணைகளை மேற்கொண்டனர். (வ)

## யாழ்....

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

இதற்கமைய புதிய வாக்காளர் பெயர்ப்பட்டியல் நேற்று முன்தினம் வெளியிடப்பட்டுள்ளது.

ஊர்காவற்றுறை தேர்தல் தொகுதியில் 21 ஆயிரத்து 521 பேரும், வட்டுக்கோட்டை தேர்தல் தொகுதியில் 45 ஆயிரத்து 189 பேரும், காங்கேசன்துறை தேர்தல் தொகுதியில் 61 ஆயிரத்து 184 பேரும், மானிப்பாய் தேர்தல் தொகுதியில் 51 ஆயிரத்து 704 பேரும், கோப்பாய் தேர்தல் தொகுதியில் 53 ஆயிரத்து 615 பேரும்,

உடுப்பிட்டித் தேர்தல் தொகுதியில் 37 ஆயிரத்து 922 பேரும், பருத்தித்துறை தேர்தல் தொகுதியில் 35 ஆயிரத்து 51 பேரும், சாவகச் சேரி தேர்தல் தொகுதியில் 49 ஆயிரத்து 475 பேரும், நல் லூர் தேர்தல் தொகுதியில் 28 ஆயிரத்து 581 பேரும், கிளி நொச்சி தேர்தல் தொகுதி யில் 68 ஆயிரத்து 589 பேரும் வாக்காளர்களாகப் பதிவு செய்துள்ளனர்.

இதேவேளை, கடந்த 2010 ஆம் ஆண்டு முதன் முறையாகப் புதுப்பிக்கப்பட்ட வாக்காளர் பெயர்ப்பட்டியலில் 4 இலட்சத்து 84 ஆயிரத்து 791 பேராகக் காணப்பட்ட வாக்காளர் எண்ணிக்கை 2011 ஆம் ஆண்டு மேலும் குறைவடைந்து 4 இலட்சத்து 82 ஆயிரத்து 344 ஆகக் காணப்பட்டது. இதனால் 9 ஆக இருந்த நாடாளுமன்ற உறுப்பினர் எண்ணிக்கை 6 ஆகக் குறைந்தது.

ஆயினும் வருடம் யாழ். தேர்தல் மாவட்டத்தின் வாக்காளர் எண்ணிக்கை முதன் முறையாக 12 ஆயிரத்து 948 பேரால் அதிகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-5)

## பொருளாதாரம்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

திட்டமிடப்பட்டிருந்தது.

பல் வேறு காரணங் களினால் கடந்த ஆண்டில் எதிர்பார்க் கப்பட்ட 8 சதவீத பொருளா தார வளர்ச்சியை அடைய முடியவில்லை என்றும், 6.5 சதவீத பொருளாதார வளர்ச்சியே எதிர்பார்க்கப்படுவதாகவும் மத்திய வங்கி கூறியுள்ளது.

## வன்புணர்வின்...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

சிறுமி வன்புணர்வின் பின்னர் கழுத்து நெரிக்கப்பட்டு படுகொலை செய்யப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டது.

இதன் பின்னர் சிறுமியின் உடற்கூறுகள் மேலதிக பரிசோதனைக்காக கொழும்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன. சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்ற போதும் இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை. சிறுமியின் இந்தப் படுகொலையைக் கண்டித்து சமூக அமைப்புக்கள், அரச அமைப்புக்கள் , மற்றும் வேலணைப் பிரதேச சபையினர் இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொள்ளவுள்ளதுடன் பொதுமக்களையும் இதில் கலந்து கொள்ளுமாறு கேட்டுள்ளனர். (த-16-41)

## பேச்சுக்கு...

தொடர்ச்சி முன்பக்கத்திலிருந்து...

வது தொடர்பில் அரசுடன் பேச வருமாறு நாம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு அழைப்பு விடுத்தோம். ஆனால் வரவில்லை.

அதேபோல், அரசியல் தீர்வைத் தயாரிப்பதற்கான நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் கலந்துகொள்ளுமாறும் அழைப்பு விடுத்தோம். அதற்கும் வரவில்லை. அரசியல் தீர்வை எட்டுவதற்கான செயற்பாடுகள் அனைத்திலும் இருந்து விலகிக்கொண்டு அரசியல் தீர்வைத் தாருங்கள் என்று வெளிநாடுகளிடம் கேட்பதில் அர்த்தமில்லை.

இந்த நாட்டுப் பிரச்சினையை இந்த நாட்டில்தான் தீர்க்க வேண்டும். வெளிநாடுகளில் அல்ல. தமிழ் மக்களுக்காகப் பேசுகிறோம் என்று கூறிக்கொண்டு தமிழ் மக்களை ஏமாற்றுகிறது கூட்டமைப்பு - என்றார். (த-சி)

## தமிழர்களை....

(12 ஆம் பக்கத் தொடர்ச்சி)

அதற்கான ஆரோக்கிய முன்னெடுப்புகள் எதையுமே இன்றுவரை மறைந்த குடும்பம் செய்யவில்லை.

இதே போன்றுதான் மாணவர் கைது விடயத்தையும் மனிதாபிமானமாகக் கருதாமல் தமிழ் சமூகத்தின் போராட்டத்தைக் கணக்கிலெடுக்காமல் நீங்கள் எத்தனை போராட்டங்களை முன்னெடுத்தாலும் எனக்கு கவலை இல்லை. நான் நினைத்ததைத்தான் செய்வேன்.என்னை எவரும் ஒன்றும் செய்ய முடியாது என்ற மமதையில் மாணவர்களை விடுதலை செய்வதில் இன்னும் இணக்கம் காணப்படாத நிலை உள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மறைந்த குடும்பத்தின் போக்கு தெரியாமல் இவ்வாறான போராட்டங்களை முன்னெடுக்கவில்லை. ஜனநாயக ரீதியான அரசியல் கட்சி என்பதால் ஜனநாயக ரீதியாக எதிர்ப்புக் காட்ட வேண்டிய தேவை தமிழ் தேசிய கூட்டமைப்புக்கும் ஏனைய தமிழ் கட்சிகளுக்கும் உள்ளன. நிச்சயமாக இவ்வாறான போராட்டங்களை ஒரு வேளை நடத்தாமல் விட்டிருந்தால் கூடப் பல்வேறுபட்டவர்கள், சம்பந்தர் அரசியல் கட்சிகள் மீது கடும் விமர்சனங்களை முன் வைத்திருப்பார்கள். அதைவிடத் தமிழ் தேசியக் கூட்டமைப்புக்கு ஏட்டிக்குப் போட்டியாகத் தமிழ் தேசிய மக்கள் முன்னணியும் இவ்வாறான அறவழிப் போராட்டங்களை முன்னெடுத்திருக்கும். தற்போது இரு கட்சிகளுக்கும் இணைந்து இப்போராட்டங்களை முன்னெடுத்திருப்பது வரவேற்கத்தக்க ஒன்று.

'கடமையைச் செய் பலனை எதிர்பாராதே' என்ற வார்த்தையைப் போன்றுதான் அறவழிக் கவனயீர்ப்பு போராட்டங்களை செய்; மாணவர்கள் விடுதலை செய்யப்படுவார்கள் என்று எதிர்பாராதே என்ற நிலைதான் இன்று கைது செய்யப்பட்ட யாழ். பல்கலைக்கழக மாணவர்களுக்கு ஏற்பட்டுள்ளது.

இவ்வாறான விடயங்களைக் கவனத்தில் எடுத்து யாழ்ப்பாணத்திலும், கிளிநொச்சியிலும், வவுனியாவிலும் மட்டும் இவ்வாறான போராட்டங்களை மேற்கொள்ளாமல் கொழும்பு தலைநகரில் சர்வதேச சமூகத்தின் கவனத்தை உள்வாங்கக் கூடிய இடங்களில் போராட்டங்களை மேற்கொள்வதை ஒருபோதும் சகல வெளிநாட்டு இராஜதந்திரிகளையும் அழைத்து தமிழ் தேசியக் கூட்டமைப்பு, மாணவர் விடுதலை சம்பந்தமாக அரசின் இனவாதத்தன்மையை தெளிவுபடுத்த வேண்டும்.

எதிர்வரும் 2013 மார்ச் மாதம் ஜெனிவாவில் இடம்பெறப் போகும் இலங்கை தொடர்பான மனித உரிமை பேரவை மீளாய்வுக் கூட்டத்துக்கு முன்பாக முள்ளிவாய்க்கால் அவலத்துடன் அதற்குப் பிந்திய செயற்பாடுகளையும் யாழ். பல்கலைக்கழக மாணவர்களின் கைது தொடர்பாகப் பிரசாரங்களையும் தமிழ் தேசியக் கூட்டமைப்பு இப்போதே முன்வைக்க வேண்டிய தேவையுள்ளது.

முள்ளிவாய்க்கால் அவலத்துடன் மூன்றரை ஆண்டுகள் கழிந்தபோதும் நாட்டில் சமாதானம் ஏற்பட்டதாக அரசு கூறினாலும் தமிழ் சமூகத்தைப் பொறுத்தமட்டில் அச்சத்துடனும் ஆக்கிரமிப்புடனும் தான் வாழ்கின்றார்கள் என்பதை அயல்நாடான இந்தியாவோ, சர்வதேச சமூகங்களோ இன்றும் புரியாதது போல் நடிப்பதை யாரிடம் சொல்வதென்றே தெரியாது. அன்று தந்தைசெல்வா 'கடவுள்தான் காப்பாற்ற வேண்டும்' என்று சொல்லிவிட்டு இறைபதம் அடைந்தார். இன்று சம்பந்தர் 'சர்வதேசம் தீர்வைப் பெற்றுத்தரும்' என்று கூறிவிட்டு மௌனமாய் இருக்கப் போகிறாரா என்பதுதான் எல்லோரினதும் கேள்வி.

இன்று யாழ். பல்கலைக்கழக மாணவர்கள், நாளை கிழக்குப் பல்கலைக்கழக மாணவர்களா? என்பதை ஒட்டுமொத்த மாணவர் சமூகமும் உணர்ந்து ஒருமித்துக் குரலெழுப்ப வேண்டிய தேவை எல்லா மாணவர்களுக்கும் உள்ளது.

'கடவுளும் காப்பாற்றவில்லை', 'சர்வதேசமும் காப்பாற்றவில்லை' என்ற நிலைதான் தமிழரின் தலைவிதி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நியூவோரியர்ஸ் கரப்பந்து

# புத்தூர் கலைமதி சம்பியன்



யாழ்ப்பாணம்,ஜன.03

நியூ வோரியர்ஸ் விளையாட்டுக்கழகம் தனது முதலாவது ஆண்டுநிறைவை யொட்டி அழைக்கப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான கரப் பந்தாட்டத் தொடரில் ஆவரங்கால் இந்து இளைஞர் அணியை வீழ்த்தி வெற்றிக் கிண்ணத்தை சுவீகரித்தது கலைமதி விளையாட்டுக்கழகம் குறித்த சுற்றுத் தொடரின் இறுதியாட்டங்கள் கடந்த திங்கட்கிழமை மாலை 6.30 மணியளவில் மின்னொளி யில் இடம்பெற்றது.

இந்த இறுதியாட்டத்தில் ஆவ ரங்கால் இந்து இளைஞர் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து புத்தூர் கலைமதி விளையாட்டுக் கழக அணி களமிறங்கியது.

அண்மைக்காலமாக யாழ். மாவட்ட ரீதியில் நடை பெற்ற கரப்பந்தாட்டச் சுற்றுத் தொடர்களில் வீழ்த்த முடியாத அணியாகக்கருதப் பட்ட ஆவரங்கால் இந்து இளைஞர் அணியை துணிச் சலோடு எதிர்கொண்டது புத்தூர் கலைமதி அணி.


தன்னுடைய அனுபவ ஆட்டத்தின் மூலம் முதல் சுற்றை தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர ஆவ ரங்கால் இந்து இளைஞர் அணி எடுத்த முயற்சிகளுக்கு பதிலடி கொடுக்கத் தொடங்கினர் கலைமதி வீரர்கள். இத்தகைய எதிர் பாராத தாக்குதல் காரணமாக ஆவரங்கால் இந்து இளைஞர் அணி நிலைகுலைந்தது. இந்த சரிவை சரியான முறையில் பயன்படுத்திக் கொண்ட புத்தூர் கலைமதி வீரர்கள் தொடர்ச்சியாகப் புள்ளிகளைப் பெற்று முன்னிலை பெறத் தொடங்கினர். எனினும் ஒரு கட்டத்தில் தம்மை சுதாகரித்துக் கொண்ட இந்து இளைஞர் அணி வீரர்கள், வெற்றியை நெருங்கும் வகையில் ஆட்ட வேகத்தை அதிகப்படுத்தியது. ஆயினும் அதற்குள் கலைமதி அணி முதல் சுற்றுக்கான வெற்றிப் புள்ளியை எட்டி விட்டது. 25:22 என்ற புள்ளிகள் அடிப் படையில் முதல் சுற்றை பறிகொடுத்தது ஆவரங்கால் இந்து இளைஞர் அணி.

**யாழ். மாவட்ட ரீதியில் நடை பெற்ற கரப்பந்தாட்டச் சுற்றுத் தொடர்களில் வீழ்த்த முடியாத அணியாகக்கருதப் பட்ட ஆவரங்கால் இந்து இளைஞர் அணியை துணிச்சலோடு எதிர்கொண்டு வெற்றியீட்டியது புத்தூர் கலைமதி அணி. போட்டியின் ஆட்ட நாயகனாக புத்தூர் கலைமதி அணியை சேர்ந்த வாகீசன் தெரிவானார்.**

முதல் சுற்றில் விட்ட தவறை நிவர்த்தி செய்து, இரண்டாம் சுற்றில் சிறப்பான ஆட்டத்தை இந்து இளைஞர் அணி பதிவு செய்தது. முதல் சுற்றில் வெளிப் படுத்திய ஆக்ரோஷத்தை இரண்டாவது சுற்றில் காட்ட கலைமதி வீரர்கள் தவறினர். இதனால் 25:19 என்ற புள்ளிகள் அடிப்படையில் இரண்டாவது சுற்றை இந்து இளைஞர் அணி தனதாக்க 1:1 என்றசுற்றுக்கள் என்ற அடிப்படையில் இரு அணிகளும் சமநிலை பெற்றது.

மூன்றாவது சுற்றில் மீண்டும் பாய்ந்தனர் கலைமதி வீரர்கள். இந்து இளைஞர் அணியினர் கடுமையாகப் போராடிய போதும், மூன்றாவது சுற்றை தக்கவைக்க முடியவில்லை. எனவே 25:22 என்ற புள்ளிகள் அடிப்படையில் மூன்றாவது சுற்றை தன் வசமாக்கியது.

நான்காவது சுற்றில் கலைமதி அணியை பழி தீர்க்கும் வகையில் அபார ஆட்டத்தை வெளிப்படுத்திய இந்து இளைஞர் அணி



25:22 என்ற புள்ளிகள் அடிப்படையில் அந்தச் சுற்றைக் கைப்பற்றியது. இதனால் மீண்டும் ஆட்டத்தில் சமநிலை ஏற்பட்டது.

எனவே வெற்றியாளரை தீர்மானிக்கும் 5 ஆவது சுற்றில் இரு அணிகளும் கிண்ணத்தை வெல்லும் வெறியோடு களமிறங்கின. 5 ஆவது சுற்றில் 15 புள்ளிகளை எட்டும் அணியே வெற்றியை சுவீகரிக்கும் என்பதால், இரு அணி வீரர்களும் ஒரு வித பதற்றத்தோடே ஆடினர். இந்த நிலையில் இறுதிக்கணங்களில் எழுச்சி பெற்ற கலைமதி அணி 15:11 என்ற புள்ளிகள் அடிப்படையில் கடைசிச் சுற்றை தனதாக்கி, வெற்றிக் கிண்ணத்தையும் சுவீகரித்தது. போட்டியின் ஆட்ட நாயகனாக புத்தூர் கலைமதி அணியை சேர்ந்த வாகீசன் தெரிவானார். (ங)

## ஜெயரட்ணம் வெற்றிக் கிண்ண கிரிக்கெட்



யாழ்ப்பாணம் ,ஜன.03

யாழ். சென்றல் விளையாட்டுக்கழகம் நடத்தும் வி.டி.ஜெயரட்ணசிங்கம் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்கான 50 பந்துப் பரிமாற்றங்களைக் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரின் ஆட்டம் ஒன்று எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை தெல்லிப்பழை மகாஜனாக்கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது. இதில் தெல்லிப்பழை கிறாஸ் கொப்பர்ஸ் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து திருநெல்வேலி வை.எம்.எச்.ஏ விளையாட்டுக்கழகம் மோதவுள்ளது. (ங-23)

## இன்றைய ஆட்டம்

வவுனியா,ஜன.03

வவுனியா யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தின் 18 ஆவது ஆண்டு நிறைவையொட்டியும் சாந்தன், யூட் கசன் ஆகியோரின் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத் துக்குமாக நடத்தப்படும் 11 பேர் பங்குபற்றும் லீக் முறையிலான உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடர் வைரவப் புளியங்குளத்திலுள்ள யங்ஸ்ரார் விளையாட்டுக் கழக மைதானத்தில் மின்னொளியில் இடம் பெற்று வருகின்றது. மழை காரணமாக இடைநிறுத்தப்பட்டிருந்த இந்தத் தொடரின் ஆட்டங்கள் மீளவும் ஆரம்பித்துள்ளன.

இதில் இன்றுவியாழக் கிழமை இடம்பெறவுள்ள ஆட்டத்தில் மோதவுள்ள அணிகளின் விவரம் வருமாறு:-

**மாலை 6 மணி**

லயன்ஸ் விளையாட்டுக் கழகம் எதிர் ஈஸ்ஆன் விளையாட்டுக்கழகம் (ங-23)

## கண்ணகை,மின்னொளி அணிகளுக்கு இரட்டை வெற்றி

தென்மராட்சி, ஜன.03

சரசாலை இலந்தைத் திடல் இளைஞர் விளையாட்டுக்கழகம் நடத்தும் 5 பந்துப்பரிமாற்றங்களைக் கொண்ட 7 பேர் பங்குபற்றும் கிரிக்கெட் சுற்றுப் போட்டியில் அண்மையில் நடைபெற்ற நான்கு லீக் போட்டிகளில் மட்டுவில் கண்ணகை வி.க. அணி இரண்டு ஆட்டங்களிலும் கொடிகாமம் மின்னொளி வி.க. அணி. இரண்டு ஆட்டங்களிலும் வெற்றியீட்டின.

முதலாவது ஆட்டத்தில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற மட்டுவில் அம்பாள் வி.க. 'ஏ.' அணி நிர்ணயிக்கப்பட்ட 5 பந்துப் பரிமாற்றங்களில் நான்கு



இலக்குகளை இழந்து 76 ஓட்டங்களைப் பெற்றது. 77 ஓட்டங்களை வெற்றி இலக்கைக் கொண்டு துடுப்பெடுத்தாடிய மட்டுவில் கண்ணகை வி.க. அணி 3.3 பந்துப்பரிமாற்றங்களில் 3 இலக்குகளை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

இரண்டாவது ஆட்டத்தில் மீசாலை என்.சீ.சீ. அணி நிர்ணயிக்கப்பட்ட 5 பந்துப் பரிமாற்றங்களில் 5 இலக்குகளை இழந்து 40 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கொடிகாமம் மின்னொளி வி.க. அணி 4.2 பந்துப் பரிமாற்றங்களில் வெற்றி இலக்கை அடைந்தது.

மூன்றாவது ஆட்டத்தில் மட்டுவில் அம்பாள் வி.க. 'பி.' அணி துடுப்பெடுத்தாடி 5 பந்துப் பரிமாற்றங்களில் 2 இலக்குகளை இழந்து 76 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய கொடிகாமம் மின்னொளி வி.க. அணி 4.1 பந்துப் பரிமாற்றங்களில் 4 இலக்குகளை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.

நான்காவது ஆட்டத்தில் மீசாலை என்.சீ.சீ. அணி நிர்ணயிக்கப்பட்ட 5 பந்துப் பரிமாற்றங்களில் அனைத்து இலக்குகளையும் இழந்து 46 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மட்டுவில் கண்ணகை வி.க. அணி 4.2 பந்துப் பரிமாற்றங்களில் 3 இலக்குகளை இழந்து வெற்றி இலக்கை அடைந்தது.


தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த 17 கழகங்கள் பங்குபற்றும் இந்தச் சுற்றுப் போட்டியின் லீக் ஆட்டங்களில் புள்ளிகள் அடிப்படையில் முதல் எட்டு இடங்களைப் பெறும் கிரிக்கெட் அணிகள் சுப்பர் 8 ஆட்டங்களில் பங்குபற்றும் வாய்ப்பை பெறவுள்ளன. (ங-9)

## சதுரங்கத்தில் வென்றோருக்கு வைத்தீஸ்வராவில் பரிசளிப்பு

யாழ்ப்பாணம், ஜன. 03

யாழ். மாவட்ட சதுரங்க சம்மேளத்தினால் நடத்தப்பட்ட சர்வதேச தரப்படுத்தலுக்கான சதுரங்கப்போட்டி, மின்னல்வேக சதுரங்கப் போட்டி என்பவற்றில் வெற்றியீட்டிய வீர, வீராங்கனைகளுக்கான பரிசளிப்பு நிகழ்வு கடந்த திங்கட்கிழமை வைத்தீஸ்வராக் கல்லூரியில் யாழ். மாவட்ட சதுரங்க சம்மேளனத்தின் உபதலைவர் செந்தில்மாறன் தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக யாழ்.



பல்கலைக்கழக ஆங்கில போதனாசிரியர் அருணகிரிநாதன், சிறப்பு விருந்தினராகத் திருநெல்வேலி சம்பத் வங்கி முகாமையாளர் முரளிதரன், தென்னிலங்கையில் இருந்து வருகை தந்த சதுரங்க நடுவர் பிரதீப் மாத்தற ஆராய்ச்சி ஆகியோர் கலந்துகொண்டனர். (ங-23)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாகிஸ்தான் வெற்றி தொடருமா?

இந்தியா, பாகிஸ்தான் அணிகள் மோதும் இரண்டாவது ஒரு நாள் ஆட்டம் கொல்கத்தாவில் இன்று இடம்பெறவுள்ளது. இங்கு ஒரு நாள் போட்டி நடந்து 25 ஆண்டுகள் ஆனதை கொண்டாட, ஈடன்



கார்டன் மைதானம் தயாராகிறது.

கடந்த 1987, பெப்ரவரி 18 இல் கொல்கத்தாவில் முதல் ஒருநாள் ஆட்டம் நடந்தது. இதில் இந்தியா, பாகிஸ்தான் அணிகள் மோதின. இதில் பாகிஸ்தான் அணி வெற்றி பெற்றது. முதல் ஒருநாள் ஆட்டம் நடந்து, 25 ஆண்டுகள் ஆன நிலையில் இரு அணிகளும் இன்று மீண்டும் சந்திக்கின்றன.

முதல் ஒருநாள் ஆட்டத்தில் அணித் தலைவராகப் பங்கேற்ற கபில்தேவ், இம்ரான் கானை பாராட்ட பெங்கால் கிரிக்கெட் சங்கம் (சி.ஏ.பி.,) முடிவு செய்துள்ளது.

தவிர, பாகிஸ்தான் அணியின் முன்னாள் அணித் தலைவர்கள் அசிப் இக்பால், ஜாவித் மியான்தத், ஜாகிர் அபாஸ், வாசிம் அக்ரம் உட்பட 10 பேரை அழைத்து கௌரவம் செய்கிறது.

இந்த ஆட்டத்துக்கான ஆடுகள பராமரிப்பாளர் பிரபிர் முகர்ஜி, சமீபத்தில் இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் ஆட்டத்துக்கு டோனி கேட்டபடி ஆடுகளத்தை அமைத்துக் கொடுக்க மறுத்தார். ஆனாலும் பணியில் தொடர்வார் எனத் தெரிகிறது.

தவிர, ஒருநாள் ஆட்டம் என்பதால், உள்ளூர் அணி, வெளியூர் அணி என்ற பாகுபாடு இல்லாமல், ஆடுகளத்தை துடுப் பாட்டத்திற்கு சாதகமாக அமைத்துள்ளாராம்.

இதுகுறித்து பிரபிர் முகர்ஜி கூறியது;

இப்போதைக்கு பணியில் இருந்து விலகும் எண்ணம் இல்லை. எனது உடல்நிலை ஒத்துழைக்கும் வரை அதாவது உயிருடன் இருக்கும் வரை, இங்கு தான் இருப்பேன். இரண்டாவது ஒருநாள் ஆட்டத்துக்கு ஆடுகளத்தை, துடுப்பாட்டத்திற்கு சாதகமாக அமைத்துள்ளேன்.

அதாவது ஒருநாள் ஆட்டத்தில் பந்து தொடக்கத்தில் இருந்து கடைசி வரைக்கும் நன்கு பவுன்ஸ் ஆகும் வகையில் இருக்க வேண்டும். போகப் போக சுழலுக்கு சாதகமாக மாறக் கூடாது. ஏனெனில், சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி.,) விதி தெளிவாக உள்ளது.

இந்த ஆட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடும் அணி, அதிக ஓட்டங்களை எடுக்க வாய்ப்புள்ளது. மாலை நேரத்தில் பனி விழும். இதற்கான இரசாயனப் பொருள்கள் மைதானத்தில் தெளிக்கப்பட்டாலும், பனியின் தாக்கம் மைதானத்தில் இருக்கும் - என்றார்.

**வாய்ப்பு எப்படி ?**

கொல்கத்தாவில் இந்திய அணி இதுவரை 17 போட்டியில் பங்கேற்று, 10 இல் வென்றது. 6 இல் தோற்றது. ஒரு ஆட்டம் ரத்தானது.

★ பாகிஸ்தானுக்கு எதிராக இங்கு விளையாடிய மூன்று (1987, 1989, 2004) போட்டியிலும் இந்திய அணி தோற்றுள்ளது.

(5)

# உணர்வுகளின் சங்கமம்

இலங்கை, ஆஸ்திரேலிய அணிகளுக்கிடையிலான 3 ஆவது டெஸ்ட் ஆட்டம் உணர்வுபூர்வமானதாக அமையும் என்று எதிர்பார்ப்பதாக ஆஸ்திரேலிய அணியின் வேகப்பந்து வீச்சாளர் பீற்றர் சிடில் தெரிவித்துள்ளார்.



இங்கிலாந்து அணியின் முன்னாள் தலைவரும் ஆஸ்திரேலியாவோடு நெருங்கிய உறவுகளைக் கொண்டதோடு, அங்கு வசித்து வந்தவருமான ரொனி கிரெய்கின் மரணம், ஆஸ்திரேலிய அணியின் மத்தியவரிசைத் துடுப்பாட்ட வீரர் மைக்கல் ஹசியின் இறுதி டெஸ்ட் ஆட்டம் ஆகியன காரணமாகவே இந்த ஆட்டம் உணர்வுபூர்வமாக அமையும் என்று பீற்றர் சிடில் தெரிவித்துள்ளார்.

ரொனி கிரெய்க், மைக்கல் ஹசி பற்றிய செய்திகளை அறிவதற்கு ஏமாற்றகரமானதாக அமைந்ததாகத் தெரிவித்த பீற்றர் சிடில், அதன் காரணமாக இலங்கை அணிக்கெதிரான மூன்றாவது டெஸ்ட் ஆட்டம் உணர்வுபூர்வமானதாக அமையும் என எதிர்பார்ப்பதாகத் தெரிவித்தார்.

இளைய வீரர்கள் ரொனி கிரெய்க் கிரிக்கெட் உலகத்திற்கும், ஆஸ்திரேலிய கிரிக்கெட்டிற்கும் ஆற்றிய சேவைகளைப் பற்றி அறிந்திருக்க மாட்டார்கள் எனத் தெரிவித்த பீற்றர் சிடில், அவரது இழப்பு கவலை தருவதாகத் தெரிவித்தார்.

சிட்னி ஆட்டத்தில் ஆஸ்திரேலிய அணி ரொனி கிரெய்க், மைக்கல் ஹசி இருவரையும் கௌரவிக்கும் முகமாகப் ஆட்டத்தில் பங்கு பற்றுமெனத் தெரிவித்த பீற்றர் சிடில், சிறப்பான பெறுபேறு குறித்து எதிர்பார்ப்புடன் காணப்படுவதாகவும் தெரிவித்தார். (5)

# இந்திய அணியின் பயிற்சியாளராக கங்குலி



இந்திய அணியின் பயிற்சியாளர் டங்கன் பிளெட்சரின் பதவிக்காலம் அடுத்த ஆண்டு மார்ச் மாதத்துடன் முடிவடைகிறது. அவரது தலைமையில் இந்திய அணி தொடர்ந்து பின்னடைவை சந்தித்து வருகிறது.

இந்த நிலையில் அவரது பயிற்சி, பெரும்பாலான வீரர்களுக்கு பிரயோசனமானதாக இல்லாததால் அவரது பதவிக்காலத்தை பி.சி.சி.ஐ. நீடிக்காது என்று தெரிகிறது.

இதற்கிடையே சென்னையில் நடந்த பாகிஸ்தானுக்கு எதிரான ஒருநாள் ஆட்டத்திலும் இந்தியா தோல்வியடைந்தது.

இதையடுத்து கருத்து தெரிவித்த முன்னாள் அணித்தலைவர் கங்குலி, இந்திய அணிக்கு இந்திய பயிற்சியாளர் தேவை.

போதிய திறமைவாய்ந்த பயிற்சியாளர்கள் இந்தியாவில் உள்ளனர் என்றார்.

எனவே, இந்தியாவில் உள்ள முன்னாள் வீரர்களில் ஒருவரை அடுத்த பயிற்சியாளராக தெரிவு செய்ய, குறிப்பாக கங்குலியை நியமிக்க பி.சி.சி.ஐ. ஆலோசனை நடத்தி வருவதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

மேற்கு வங்கத்தைச் சேர்ந்த கங்குலி, 113 டெஸ்ட் போட்டியில் 16 சதம் 35 அரை சதங்களுடன் 7212 ஓட்டங்கள் எடுத்துள்ளார். 311 ஒருநாள் போட்டியில் 22 சதம், 72 அரை சதங்களுடன் 11363 ஓட்டங்கள் சேர்த்துள்ளார்.

(5)

# வெடித்தது மோதல்

பங்களாதேஷின் 'ரி-20' தொடரான பங்களாதேஷ் பிறிமியர் லீக் தொடரில் பாகிஸ்தான் வீரர்களுக்கு அனுமதி வழங்கப்படாது எனத் தெரிகிறது. பங்களாதேஷ் கிரிக்கெட் சபைக்கும், பாகிஸ்தான் கிரிக்கெட் சபைக்குமிடையிலான முறுகலையடுத்தே இந்த நிலை ஏற்பட்டுள்ளது.

பாகிஸ்தானுக்கான கிரிக்கெட் சுற்றுலாவைத் தற்போதைய நிலையில் மேற்கொள்ள முடியாது எனவும், பாகிஸ்தானின் பாதுகாப்பு நிலைகள் தொடர்பான முன்னேற்றம் ஏற்பட்டதன் பின்பே அந்தச் சுற்றுலாவை மேற்கொள்ள முடியும் என்று பங்களாதேஷ் கிரிக்கெட் சபை அறிவித்திருந்தது.

இந்த நிலையில் கருத்துத் தெரிவித்துள்ள பங்களாதேஷ் கிரிக்கெட் சபை, பங்களாதேஷ் பிறீமியர் லீக் தொடரில் பாகிஸ்தான் வீரர்கள் பங்குபற்றுவது உறுதியில்லை எனத் தெரிவித்துள்ளது. வீரர்களின் கடமைகள், ஈடுபாடுகள் தொடர்பாக ஆராயப்பட்ட பின்பே பாகிஸ்தான் வீரர்களுக்கு அனுமதியளிக்கப் படுவது குறித்து ஆராயப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

பாகிஸ்தானில் பாதுகாப்புப் போதுமானதாக இல்லை என்ற பங்களாதேஷ் கிரிக்கெட் சபைத் தலைவரின் கருத்துப் பிழையானது எனத் தெரிவித்துள்ள பாகிஸ்தான் கிரிக்கெட் சபை, அண்மையில் பாகிஸ்தானில் இடம்பெற்ற கிரிக்கெட் போட்டி பாதுகாப்புச் சிறப்பானதாகக் காணப்படுகிறது என்பதை உறுதிப்படுத்துகின்றது எனவும் தெரிவித்துள்ளது.

அத்தோடு பங்களாதேஷ் கிரிக்கெட் சபை, பங்களாதேஷ் அரசு ஆகியோர் இணைந்த குழுவொன்று பாகிஸ்தானின் பாதுகாப்புத் தொடர்பாக ஆராய பயணம் செய்திருந்ததாகத் தெரிவித்த பாகிஸ்தான் கிரிக்கெட் சபை, அதன் போது பாதுகாப்பு நிலைமை தொடர்பாக அந்தக் குழு திருப்தி தெரிவித்திருந்ததாகவும் தெரிவித்துள்ளது.

(5)

# இலங்கையின் ஆதிக்கத்தில் 2012

2012 ஆம் ஆண்டில் இலங்கை அணி வீரர்களே அதிகளவு ஆதிக்கம் செலுத்தி உள்ளனர்.

ஒரு நாள் கிரிக்கெட் போட்டியைப் பொறுத்த வரையில் இலங்கையை சேர்ந்தவர்களே முன்னணியில் இருக்கின்றனர்.

ஒரு நாள் போட்டி பந்துவீச்சில் இலங்கை வீரர் மலிங்க முன்னிலையில் உள்ளார். இவர் 32 போட்டியில் 47 இலக்குகளை வீழ்த்தியுள்ளார். அடுத்ததாக மேற்கிந்தியத் தீவுகள் அணி வீரர் சுனில் நரைன் 34 இலக்குகளுடன் இரண்டாவது இடத்திலும், இலங்கை வீரர் திஸர பெரேரா 32 இலக்குகளுடன் 3 ஆவது இடத்தையும் பெற்றுள்ளார்.

இதே போன்று துடுப்பாட்டத்தில் சங்ககாரா 1184 ஓட்டங்களை எடுத்து முதலிடத்தில் உள்ளார். திலகரட்ன டில்ஷான் 1119 ஓட்டங்கள் எடுத்து இரண்டாமிடத்திலும், 1026 ஓட்டங்கள் எடுத்து [illegible] மூன்றாமிடத்திலும் உள்ளனர்.

(5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**உதயன் விளம்பரத் தொடர்புக்கு—**
**advt@uthayan.com**
**0215671111**

---

# DCM யாழ்.நகர்
(வேம்படி மகளிர் கல்லூரி அருகில்)

**A/L - 2015**
**கலை, வர்த்தகம்**

பொருளியல்
**S.வரதராஜன்**
கணக்கீடு
**P.பகீரதன்**
வணிகக்கல்வி
**V.முரளி**
தமிழ்
**K.சந்திரலிங்கம்**
புவியியல்
**P.S.குமரன்**
அரசியல்
**K.சுகாத்**
இந்து நாகரிகம்
**T.ஸ்ரீநீஸ்**
வரலாறு
**R.R.ஆனந்தன்**
அளவையியல்
**T.நீதன்**
நாட. அரங்கியலும்
**S.R.றமேஷ்**

**ஆரம்பம்**
**05.01.2013**
**சனி - காலை - 9.00**

---

# FRENCH LANGUAGE CENTRE
சர்வதேச தரத்திலான French வகுப்புக்களை வழங்கும்
ஒரே ஒரு நிறுவனம்

**FRENCH CLASSES - பிரஞ்சு வகுப்புக்கள்**

France, Canada செல்வோர் மற்றும் ஆர்வம் உள்ள எவரும் கற்றுக் கொள்ளலாம்.
International Certificate இனை குறுகிய காலத்தில் பெற்றுக் கொள்ளலாம்
France இல் இருந்து ஆசிரியப் பயிற்சி பெற்ற Mr.V.Jegan இன் வழிகாட்டலில்
For Better French: 0779789456

| | |
|---|---|
| ஆரம்பம்: 12.01.2013 சனி 10.30am<br>No.23, Palaly Road, Jaffna.<br>(அப்பலோ வைத்தியசாலை முன்பாக)<br>ஆரியகுளம். | 16.01.2013 புதன் 10.30am<br>181,1st Floor, Jaffna Road, Neilliady.<br>(சோதி வீதி, முன்பாக உள்ள மாடியில்) |

இணைவு: BCLI.
English (IELTS, A1, B1, Spoken, Etc), German (Deutsch), சிங்கள வகுப்புக்களும் நடைபெறுகின்றன.

---

# NEW ECONOMICS COLLEGE
மணிக்கூட்டு வீதி, யாழ் நகர்.(பெருமாள் கோவில் அருகாமை)

**A/L 2015**

ஆரம்பம் : ஜனவரி 05 காலை 8.00

**வர்த்தகப்பிரிவு**

கணக்கீடு : K.பாலகஜன்
பொருளியல் : NB.கஜீதரன்
வணிகக்கல்வி : S.K.பாலசபேஸ்
S.யசோதரன்

**கலைப்பிரிவு**

| | | | |
|---|---|---|---|
| தமிழ் | : A.K கீர்த்திராஜன் | அளவையியல் | : P. கமல் |
| இந்து நாகரீகம் | : T.ஸ்ரீநீஸ் | பொருளியல் | : NB. கஜீதரன் |
| வரலாறு | : RR.ஆனந்தன் | அரசியல் | : A.K றொபின்சன் |
| புவியியல் | : N.சபரிதன் | நாட.அரங்கியல் | : S.R. ரமேஸ் |
| கிறிஸ்தவம் | : R.கஸ்ரோன் | சித்திரம் | : R.R.ராஜ் |
| ICT | : R.இராஜேஸ்வரன் | English | : S.Jaisan |

---

**A/L 2015**
TAMIL & ENGLISH MEDIUM
**NEC**
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்

**கணித, உயிரியல் பிரிவுகள்**

| | |
|---|---|
| CHEMISTRY | S.வாசு |
| PHYSICS | N.எழுகன் |
| C.MATHS | P.விமலநாதன் |
| BIOLOGY | V.A.ஞானேந்திரன் |
| | S.சுதா |

ஆரம்பம் : 05.01.2013 சனி காலை 8.00

---

**போட்டிப் பரீட்சை விசேட கருத்தரங்குகள்**

* திறந்த பல்கலைக்கழக டிப்புளோமா தெரிவு
சனி, ஞாயிறு 10.00 - 5.00 மணிவரை
* முகாமைத்துவ உதவியாளர் வினைத்திறன் பரீட்சை
சனி, ஞாயிறு 9.00 - 2.00 மணி
* முகாமைத்துவ உதவியாளர் கிராம சேவகர் பரீட்சை
சனி, ஞாயிறு 12.30 மணி

யாழ்ப்பாணக் கல்லூரி பட்டப்படிப்புகள் பிரிவு
(யாழ். ஆஸ்பத்திரி வீதி, கொமர்ஷல் வங்கி அருகில்)

---

# 31 ஆம் நாள் நினைவுத் துவல்



உருவாய் மண்ணில்
18★08★1930

அருவாய் விண்ணில்
04★12★2012

## அமரர் செல்லப்பா இராசதுரை
## (சின்னக்கிளி)

நடுவூர்ப் பழுத்த நன் மரமாய் நின்று
நலிந்தோர் துயர் தீர்த்த வள்ளல்!
கடுஞ்சொல் அறியாக் கற்பக தரு!
கண்ணின் இமைபோல் எமைக்காத்த தலைவர்!
இடுக்கண் வந்து எமைவாட வைத்து
இறைதாள் அடைந்தார் பதறுகிறோம்!
கடமை முடித்து கடவுள் தாளமர
கண்ணீரால் அஞ்சலித்தோம் சாந்தி கொள்க!

காங்கேசன்துறை வீதி,
கோண்டாவில்.

(27506)(3.14)

குடும்பத்தினர்.

---

# புதிய ஆண்டில்
# புதிய சேவை ஒழுங்கு
# புதிய விசா ஆலோசனைகள்
# உங்கள் திசைகாட்டியில்.



எல்லா நாள்களும் (சனி, ஞாயிறு, பொது விடுமுறைதினங்கள் உட்பட)
காலை 8.30 முதல் இரவு 7.30 வரை திறந்திருக்கும்.

**மலேசியா, சிங்கப்பூர் Student Visa**

மலேசியாவில் மாதம் 30,000/= வரை படித்துக்கொண்டே உழைக்கலாம்
உணவு, இருப்பிடம் இலவசம் சிங்கப்பூரில் பகுதி நேரத் தொழில் வாய்ப்பு.
IELTS தேவையில்லை

**நியூசிலாந்து, ஆஸ்திரேலியா**

Student Visa, Skill migration வணிக விசா இலவசமாக
IELTS எம்மிடம் கற்கலாம். (நிபந்தனைகளுடன்)

**கனடா, அமெரிக்கா, பிரான்ஸ்**

சட்டரீதியாகக் குடிபெயர சட்ட ஆலோசனை

**சைப்பிரஸ், போர்த்துக்கல், லிதுவேனியா**

ஐரோப்பிய நாடுகளிற்கான Student Visa, வணிக விசா
சைப்பிரஸ் - 100000/= வரை சம்பாதிக்கலாம்.

**எல்லா நாடுகளிற்கும் Visit Visa 10 தினங்களில்**

எல்லா நாடுகளிற்கும் Visit Visa, Sponsor மறுக்கப்பட்ட விசாக்கள்

திசைகாட்டி (பிறைவேற்) லிமிட் (PV 82703)
முன்மாதிரியான சாதனை விசா ஆலோசனை நிறுவனம்
175, பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம். 0212219016

---

# SUBRA - சித்தன் கேணி
# கிளை வட்டுக் கோட்டை

அநேக பெற்றோரின் வேண்டுகோளிற்கிணங்க
தரம் - 03 முதல் O/L வரை தமிழ், ஆங்கிலம்
மொழிமூலம் புதிய பிரிவுகள்
அனுமதிகள் 01.01.2013 முதல் 05.01.2013
வரை வழங்கப்படுகின்றன.

* எமது நிறுவனத்தில் கற்பிற்கும் ஆசிரியர்கள் இப்பிரதேசத்தில் வேறு நிறுவனத்தில் கற்பிக்க மாட்டார்கள்.
* மாதாந்தம் பயிற்சிப் பரீட்சைகள் நடத்தி பெற்றோருக்கு புள்ளிகள் தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும்.
* கடமை, கண்ணியம், கட்டுப்பாடு இதுவே எமது நிறுவனத்தின் வெளிப்பாடு.
* இன்று நேற்று அல்ல என்றென்றும் கல்விக்கு தனித்துவமான ஒரே நிறுவனம் SUBRA

* தரம் 1, 2 மாணவர்களுக்கான விசேட ஆங்கில வகுப்புக்கள் மாலை 6-7 மணிவரை பயிற்றப்பட்ட விசேட ஆசிரியர் குழுவால் ஆரம்பிக்கப்பட உள்ளது. ஒரு பிரிவில் 20 மாணவர்கள் மட்டுமே. பதிவுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(சி/5195)(3)

மேலதிக விபரங்கள் பக்கம் 19 பார்க்கவும்.

---

**தேவை**

யாழ். கிளிநொச்சி, வவுனியா போன்ற இடங்களில் அமைந்துள்ள காரியாலயத்துக்கு பணி செய்யக்கூடிய ஆண், பெண் இருபாலாரும் தேவை.

தொடர்புகளுக்கு:
0773818799

(24391)(3.6)

---

**A/L 2015**
**NEC**
பருத்தித்துறை வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.

கலை, வர்த்தக
கணித உயிரியல் பிரிவு
ஜனவரி 05 சனி 8.00மணி
புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன.

---

**A/L 2013**
**PAPER CLASS**

BEACON யாழ். நகர்

கணக்கீடு
R.சுகிர்தன்

பொருளியல்
K.பிரதீபன்

ஆரம்பம் ஜன 5
காலை 10 மணி

A/L 2014 புதிய சேர்ச்சிகள் ஆரம்பமாகும்.

---

**A/L 2015 ஆரம்பம் - தை 5 காலை 8.30**

| | | |
|---|---|---|
| தமிழ்<br>திரு. குகன் | இந்.நாகரி / இந்.சமய<br>திரு.ஜெயக்குமார் | கணக்கீடு<br>திரு.தவா |
| அரசியல்<br>திரு. பாபு | நாடக அரங்கியல்<br>திரு. மங்களேஸ் | பொருளியல்<br>திரு.சண் |
| வரலாறு<br>திரு. தாஸ் | புவியியல்<br>திரு. கரன் | வணிகக்கல்வி<br>திரு.பிரதீபன் |
| இலகுகணிதம்<br>திரு. கண்ணன் | A/L 2013, 2014, Paper, Day class<br>புதிய அனுமதிகள் அலுவலகத்தில். | |

கந்தர்மடம்

---

# விக்னா

52,ஸ்ரான்லி வீதி,யாழ். கல்வி நிறுவனம்

**A/L 2015**
**கலை வர்த்தக வகுப்புகள்**
**ஆரம்பம்:- 6.1.2013 - 9 மணி**

| | | |
|---|---|---|
| ECO. சுதாகர்<br>TAM. குழந்தை<br>GEO. தினேஸ்<br>CHRI. சுஜந்தன் | B.Stu. யாழ். பிரபல ஆசிரியர்<br>H/C. பத்மராஜா<br>HIS. தாஸ்<br>DRAMA. கஜீதரன் | Acc. றொஜிந்தன்<br>Log. வாகிசன்<br>P/Sci. ஸ்ரீரங்கநாத்<br>H/Sc. மஜிதன் |

அனுமதிகளை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளவும். முதல் அனுமதி பெறும் 100 மாணவர்கட்கு அனுமதிக்கட்டணம் இலவசம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 03.01.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.